
நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்



டாக்டர் கே.ஏ.குணசேகரன்

நகர்சார் நாட்டுப் புறக் கதைப் பாடல்கள்

டாக்டர் கே.ஏ. குணசேகரன்

விற்பனை உரிமை
அன்னம் (பி) லிட்.,
சிவகங்கை
623 560

○

நகர்சார் நாட்டுப்புறக்கதைப் பாடல்கள்
டாக்டர். கே.ஏ. குணசேகரன்
முதற்பதிப்பு அக்டோபர், 1988
அச்சாக்கம் அகரம் பிரிண்டர்ஸ், சிவகங்கை
விற்பனை உரிமை அன்னம் (பி) லிட்., சிவகங்கை
அட்டை: மாரிஸ்
விலை 13—00

○

பொருளடக்கம்

''டி.வி.யில் உங்களை ரண்டு முறைபார்த்தேன்,கேட்டேன். விட்டிலை கைக்குள் வைத்து மூடினாலும் துள்ளும்.கிராமத்து மக்களின் லயம் கலந்த இசைப்பாடல் அப்படித் துள்ளலோடு வருகிறது. அது மனசை என்னவெல்லாமோ செய்கிறது. பாடுகிறவர்களுக்கும் ஆனந்தம், கேட்பவர்களுக்கோ அதை விடப் பரமானந்தம்.''

— கி. ராஜநாராயணன்
(ஆசிரியருக்கு எழுதிய கடிதத்திலிருந்து...)

நகர் சார் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் ஒரு பார்வை

பேராசிரியர் அ. மார்க்ஸ்

1947க்குப் பின் தோன்றி, மதுரை இராமநாதபுரம் பகுதிகளில் உயிருடன் இருந்து வரும் இந் நாட்டுப்புறப் பாடல்களுக்கு 'நகர்சார் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள்' எனத் தலைப்பிட்டுள்ளார் குணசேகரன். நகரம் — நாட்டுப்புறம் என்னும் இரு எதிரெதிரான சொற்களையும் ஒன்றாகக் கொண்டு வருவதன் மூலம் சில அடிப்படையான கோட்பாட்டுப் பிரச்சினைகளையும் இதன் மூலம் அவர் எழுப்பியுள்ளார். Urban Folk Lore என ஆங்கிலத்தில் சொல்லும் போது இந்தப்பிரச்சினைகள் எழுவதில்லை. 'நகர்ப்புற மக்கள் வழக்காறு' என்பது போல இதனை மொழி பெயர்த்தால் நமக்கும்பிரச்சினை இல்லை. ஆனால் நாம் Folk Lore என்பதற்கு நாட்டார் வழக்காறு, நாட்டுப் பாடல்கள் என்பது போன்ற சொற்கோவைகளையே பயன்படுத்தி வருகிறோம். சமீபகாலமாக நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களிடையே மேற்குறித்த சொற்கோவைகளைப் பயன் படுத்துவது குறித்து விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. மக்கள் வழக்காறு என்பது போன்ற சொற்கோவைகளைப் பயன்படுத்தலாம் என்பது போன்ற கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. (பார்க்க; நாட்டுப்புறவியல் -ஆய்வு முறைகள்—கருத்தரங்கக் கட்டுரைகள் மே 21,22,1986 தமிழ்ப் பல்கலைக் கழகம்' தஞ்சை.)

யோசித்துப் பார்க்கும் போது, 'நாட்டுப்புறவியல்' 'நாட்டுப் பாடல்கள், போன்ற சொற்கோவைகளைத் தொடக்க காலச் சேகரிப்பாளர்களும், ஆய்வாளர்களும் பயன் படுத்தியது பொருத்தமாகவே படுகின்றது. நாடடுப்புற மக்கள் மத்தியில்

செயலூக்கத்துடன் பயிலப்படுபவை என்பது மட்டுமின்றி இத்தகைய வழக்காறுகள் இயல்பாகவே நாட்டுப்புறத் தன்மையுடையனவாய் உள்ளன என்பதனாலேயே தொடக்க கால முன்னோடிகள் நாட்டுப் புறம் என்கிற கருத்து சார்ந்த சொற்கோவைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

மேனாடுகளில் நாட்டுப்புறம் என்கிற சொல்லை நேரடி யாகப் பயன்படுத்தா விட்டாலுங் கூட 'உள்ளுறையாக இந்த பொருள் தொக்கி நிற்பதைச் சற்று சிந்திக்கும்போது உணர்ந்து கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக' நகர்சார்ந்த மக்கள் மத்தியில் நவீன காலத்தில் தோன்றியுள்ள வழக்காறு கள் Urban FolkLore என்று மேனாட்டு அறிஞர்களால் வகைப்படுத்தப் படுகின்றன என்கிறார் குணசேகரன். இதற்கு எதிராக Rural Folk Lore என்று எதனையும் வகைப்படுத்த வில்லை என்பது கவனிக்கத் தக்கது. Urban Folk Lore அல்லாத அனைத்தும் Folk Lore என்றே அழைக்கப்படு கின்றன என்பதைச் சிந்திக்கும் போது FoLk Lore என்பது நாட்டுப் புறக் தன்மை சார்ந்தது என்கிற பொருளுடனேயே அங்கும் வழங்கப்படுகிறது என்பது தெளிவாகிறது.

மேலும்,1846-இல் முதன் முதலாக Folk Lore என்கிற பதத் தைக் கையாண்ட W.J.தாமஸ், Folk என்பதன் மூலம் அப் பதம் சுட்டும் அகராதிப் பொருளைக் காட்டிலும் ஏறக்குறை யாக விவசாயிகளையே கருக்கிற் கொண்டார் என்கிறது பிரிட்டானிக்கா கலைக் களஞ்சியம். கிராமப்புறங்களைச் சேர்ந்த மிகவும் பிற்பட்ட மக்களையே Folk பொருள் கொள் கிறது என்மை் கூறுகிறது கலைக்களஞ்சியம். ஃபங்க் —வாக் னல்ஸ் ஆகியோரின் நாட்டார் வழக்காற்றியல் அகராதியும் Folk Lore என்பதற்குக் குறிப்பிடும் இருபது பொருள்களில் 'விவசாயிகளின் மானுடவியல்' என்கிற பொருளும் ஒன்று.

பொதுவாக மேலை அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ள இக் கருத்தை முதன் முதலில் மறுத்தவர் ஆலன் டண்டிஸ். ஏதேனும் ஓரம்சத்தில் ஒன்றுபடுகிற எந்தக் குழுவையும் Folk எனலாம் என்றார் அவர். Folk என்போரை விவசாயச்சமூகம், நாட்டுப்புறம் ஆகியவற்றுடன் இணைத்துப் பார்ப்பதென்றால் நகர மக்கள் என்போர் Folk அல்ல என்றும் அவர்கள் மத்தியில் Folk Lore தோன்றாது என்றுமல்லவா ஆகிவிடும் என்றுகேட்டார் டண்டிஸ். இது குறித்துக்கருத்துக் கூறவந்த தமிழக நாட்டுப்புறவியல் அறிஞர் நா.வா அவர் கள். நிலப்பிரபுத்துவச் சமூக அமைப்பில்லாமல் தங்கள் வரலாற்றைத் தொடங்கிய தொழில் மயமாக்கப்பட்ட அமெரிக்கச்சமுதாயத்தில் விவசாயிகளும் கிராமப்புறமக்களும் இல்லாமற் போனதன் விளைவாகவே டண்டிஸ் இப்படிக்கூற நேர்ந்தது என்றார். எனினும் இவ்வாதத்தைத் தொட்டுச் சென்றபேராசிரியர் தனது கருத்தென்று எதையும் இறுதி யாகக் கூறாதது குறிப்பிடத் தக்கது. பழைய மாதிரியான

விவசாயச் சமுதாயங்கள் என்பன பழங்கதையாய்ப் போய் விட்டாலும் Folk பாரம்பரியங்கள் என்பன மறைந்து விடவில்லை என்பதை மறந்துவிடலாகாது என்பதோடு நிறுத்திக் கொண்டார் அவர். எனவே நாட்டுப்புறவியல், Folk Lore என்றெல்லாம் சொல்லும் போது அது பயிலப்படக் கூடிய களங்கள் எத்தன்மையது, பயில்கிற மக்கள் யார் என்பன போன்ற அம்சங்களைக் காட்டிலும் இவ்வழக்காறுகள் தம் இயல்பான தன்மையைப்பொருத்தே இப்பெயர்பெறுகின்றன என்கிற கருத்தையே நாம் இங்கும் வந்தடைகிறோம்.

இப்போது நாட்டுப்புற வழக்காறுகளின் இந்த அடிப்படையான தன்மை என்ன என்கிற கேள்விக்குள் நுழையலாம். Folk Lore என்பதற்கு நாட்டார் வழக்காற்றியல், நாட்டுப்புறவியல் போன்ற சொற்கோவைகள் பொருந்தாது என வாதிடும் டாக்டர் இராமநாதன் Lore என்றால் என்ன என்பது குறித்து வரையறுக்க முற்படும் போது இதன் அம்சங்களாக,

> கூட்டுப் படைப்பாக அமைந்தது,
> வழி வழியாகக் கையளிக்கப்படுவது,
> எழுதப் படாதது,
> இலக்கண வரையறைக்குட் படாதது,
> அச்சிடப் படாதது,
> பேச்சு வழக்கிலானது,
> செவ்விசையற்றது,
> வாய் மொழியாய் வழங்கப்பட்டு பரப்ப்பப்படுவது,
> படைத்தவர் பெயரில்லாதது.

என்பன போன்றவற்றைக் குறிப்பிடுகிறார். பின் அவரே மேற்குறித்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாமலுங்கூட நாட்டுப்புற வழக்காறுகள் இருக்க முடியும் என்று கூறிஇறுதியாக,

> ''வழங்கப்படும் சமூகச் சூழல் பாடம் அதன் அமைப்பு முதலியவற்றைக் கொண்டுதான் நாம் Lore எது என்பதை நிர்ணயிக்க முடியும்''.

என்று முடிப்பது கவனத்திற்குரியது. மேலும் ரிச்சர்ட் டார்சன்,

> ''நாட்டுப் புறக் கவிதைகள் என்பனவற்றை அதன் வடிவத்தைக்கொண்டு மட்டும் வரையறுத்துவிட முடியாது. எவ்வாறு அது பரப்பப்படுகிறது என்பதும் முக்கியம்...... முதன்முதலில் அதுஎவ்வாறு எழுதப்பட்டது, எழுதப்பட்டிருந்தால் பாடுபவருக்கு அது எப்படிக் கிடைத்தது, மற்ற வடிவங்களில் கிடைக்கிறதா என்பன போன்ற அதன் வரலாறு குறித்தும் ஒருவர் அறிந்திருக்க வேண்டும். இந்தச்செய்திகள் இல்லாமல் ஒன்றை நாட்டுப்பாடல்

> என்று சொல்வது சாத்தியமல்ல. ஏனெனில் ஒரு தேர்ச்சி பெற்ற கவிஞன் (Sophisticated poet) கூட நாட்டுப் பாடல் பண்புகளோடு ஒன்றை வெற்றிகரமாக இயற்றி விட முடியும்.'' (அழுத்தம் நம்முடையது).

என்று குறிப்பிடுகிறார்.

நாட்டுப்புறவியல் குறித்து மிகவும் ஆழமாகவும் அதிகமாகவும் சிந்திக்கிற இவர்களெல்லோருமே இலக்கண வரையறையற்றது, அச்சிடப்படாதது, வாய்மொழியாகப் பரப்பப்படுவது, பேச்சு வழக்கிலானது போன்ற அம்சங்களைக் காட்டிலும் வழங்கப்படும் சூழல், வரலாறு, பயிலப்படும் முறை ஆகிய விவரங்களில்லாமல் நாட்டுப்புற வழக்காறுகளை வரையறுத்துவிட முடியாது என்கிற முடிவுக்கு வருகின்றனர். நாட்டுப்புற வழக்காறுகளின் சாராம்சமான தன்மை என்ன என்கிற கேள்விக்கான பதிலின் மையம் இங்கேயே தங்கியுள்ளது. வழங்கப்படும் சூழல், வரலாறு, பயிலப்படும் முறை, பரப்பப்படும் முறை ஆகிய இந்த அம்சங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து ஒரு இறுக்கமான வரையறையை நாட்டுப்புற வழக்காறுகளுக்கு நாம் கொடுக்க வேண்டுமானால் நாட்டுப்புற வழக்காறுகளின் உற்பத்தி முறை பற்றிக் கொஞ்சம் நாம் ஆய்வு செய்யவேண்டியது அவசியமாகிறது.

ஒரு சமூக அமைப்பு பொருளுற்பத்தி இல்லாமல் இருப்பது எவ்வாறு சாத்தியமில்லையோ அதே போல கலை, இலக்கிய உற்பத்தி இல்லாமலும் இருக்க முடியாது. இந்த இலக்கிய உற்பத்தி என்பது பொருளுற்பத்தியின் ஓரங்கமாக நிலவுகிறது. இதனை இலக்கிய வழி உற்பத்தி(Literary Production) என்பர். இலக்கிய உற்பத்தி என்பது பொருளுற்பத்தியின் ஓரங்கமாய், உட்கூறாய் எவ்வாறு திகழ்கிறது என்பது முதலாளிய உற்பத்தி முறையில் வெளிப்படையாகவே தெரியும். படைப்பாளி, வெளியீட்டாளர், அச்சுத் தொழிலாளி போன்ற உற்பத்தி சக்திகள் இணைந்து செயல்படுவதன் மூலமாக முதலாளிய சமூகத்தின் முதன்மையான இலக்கிய உற்பத்தி நிகழ்கிறது. இதன் மூலம் படைப்பாளி, அச்சுத் தொழிலாளி போன்றோரின் உபரி உழைப்பு இலாபமாய் முதலாளியின் கையில் சேர்கிறது. முதலாளிய வினியோக முறையின் மூலமாகவே இது நுகர்வோர்களையும் சென்றடைகிறது. ஆக இலக்கிய வழி உற்பத்தி முறை என்பது ஆதிக்கம் செலுத்துகிற பொருளுற்பத்தி முறையில் ஓரங்கமாய் நிலவுகிறது. எப்படிப் பொருளுற்பத்தியில் நிலவுகிற உற்பத்தி சக்திகட்கும் உற்பத்தி உறவுகட்குமிடையேயான ஒருமை (unity) யே பொருளுற்பத்தி முறை என்றழைக்கப்படுகிறதோ அவ்வாறே இலக்கிய உற்பத்தியிலும் நிலவுகிற உற்பத்தி சக்திகட்கும் (படைப்பாளி, வெளியீட்டாளர்...) அவர்களுக்கிடையேயான உறவுகட்குமிடையேயான ஒருமையே இலக்கிய வழி உற்பத்தி முறை (Literary Mode of Production) எனப்படும்.(பார்க்க: டெர்ரி, ஈகில்டன், Criticism and Ideology).

ஒரு சமூக உருவாக்கத்தில் எவ்வாறு பல பொருளுற்பத்தி முறைகள் ஒரே சமயத்தில் விளங்கினாலும் அவற்றில் ஏதேனும் ஒன்று ஆதிக்கம் செலுத்துகிறதோ(எ-டு: முதலாளியச் சமூகத்தில் சிறுவித உற்பத்தி, நிலப்பிரபுத்துவ உற்பத்தி முதலியவை இருந்தாலுங்கூட அவற்றை முதலாளிய உற்பத்தி முறை ஆதிக்கம் செலுத்துவது போல) அதே போல இலக்கிய உற்பத்தியிலும், ஒருசமூக உருவாக்கத்தில் பல்வேறு இலக்கிய வழி உற்பத்தி முறைகள் (இ.உ.மு) இருந்தாலும் ஏதேனும் ஒன்று ஆதிக்கம் செலுத்தும்.

எடுத்துக் காட்டாக இன்றைய தமிழ்ச் சமூக உருவாக்கத்தில் பெரும் வெளியீட்டாளர்கள், பல்லாயிரக் கணக்கில் விற்பனையாகும் இதழ்கள் ஆகியவற்றின் மூலம் உற்பத்தி செய்து வினியோகிக்கப்படும் 'இலக்கிய' உற்பத்தி ஆதிக்கம் செலுத்தும் உற்பத்தி எனலாம். சிறு பத்திரிக்கைகள், முற்போக்குப் பத்திரிக்கைகள், சாதி மதப் பத்திரிக்கைகள், இவை சார்ந்த வெளியீடுகள் இவற்றுக்குக் கட்டுப் பட்டவையேயாகும். சிறு பத்திரிக்கைகள் முதலியவை ஆதிக்க இலக்கிய உற்பத்தி முறையின் உற்பத்தி சக்திகள், உற்பத்திக் கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தினாலும் இவற்றிற்கும் ஆதிக்க இலக்கிய உற்பத்தி முறைக்குமிடையேயான உறவு என்பது பொதுக் கருத்தியல், படைப்பாளியின் கருத்தியல், கலைஇலக்கியக்கருத்தியல் போன்ற கருத்தியக் காரணிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன.

இலக்கிய உற்பத்தி எனக் குறுக்கிக் கொள்ளாமல், கலை இலக்கிய உற்பத்தி என விரிவாக எடுத்துக் கொண்டோமானால் சினிமா, வீடியோ, சபா நாடகங்கள், தொலைக் காட்சி போன்றவற்றை ஆதிக்கக்கலைஇலக்கியவழிஉற்பத்தி முறையில் வெளிப்பாடுகளாய்க் காணலாம். கலைப்படங்கள், சோதனை நாடகங்கள், என்பன இவற்றிற்குட்பட்டனவேயாகும். நாட்டார் கலை இலக்கிய உற்பத்தி என்பது இந்தப் பெருவித உற்பத்தி முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட சிறுவித உற்பத்தி முறையாகும் (நாட்டார் வழக்காறுகளில் அடங்கிய சடங்குகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் உற்பத்தி குறித்த விளக்கத்தை நாம் இங்கு எடுத்துக் கொள்ள வேண்டாம். சடங்கு, நம்பிக்கைகள் ஆகியவற்றின் தோற்றத்தை மத உணர்வின் தோற்றத்தோடு நாம் இணைத்துப் பார்க்க வேண்டும்.) இது பெருவித உற்பத்தி முறையின் உற்பத்திச்சக்திகளையோ, உற்பத்திக் கருவிகளையோ வினியோகக் கருவிகளையோ பயன்படுத்துவதில்லை. நாட்டார் கலை இலக்கிய உற்பத்தி முறையில் உற்பத்தி சக்திகள் எனப்படுவோர் முழுமையாக சாதாரண மக்களேயாவார். செவ்வியல் கலை இலக்கிய உற்பத்தி முறையில் சாதாரண மக்கள் செல்வாக்கைச் செலுத்துவது அரிது. ஆனால் நாட்டார் கலை இலக்கிய உற்பத்தியச் சாதாரண மக்கள் தங்கள் செல்வாக்கைச் செலுத்த முடியும்.

சாதாரண மக்களின் செல்வாக்கு எப்போது இலக்கிய உற்பத்தியில் செயல்பட இயலாமற் போகிறதோ அப்போது அவை தம் நாட்டார் தன்மையை இழந்து விடுகின்றன.

எனவே பெருவீத கலை இலக்கிய உற்பத்தி முறையின் உற்பத்தி மற்றும் வினியோகக் கருவிகளை முற்றிலும் பயன் படுத்தாத சாதாரண எளிய மக்களின் செல்வாக்கிற்குட்பட்ட கலை இலக்கிய உற்பத்தி முறையை நாட்டார் கலை இலக்கிய உற்பத்தி முறை எனலாம்.

பெரும்பான்மையான எளிய மக்கள் என்போர் கிராமப்புறம் சார்ந்த விவசாய மக்களாகவே இருப்பதாலும் நகர்ப்புறத் திலுள்ள சாதாரண மக்களுங்கூட விவசாய உளப்பாங்கு அல்லது லும்பன் உளப்பாங்கு உடையவர்களாகவே இருப்ப தாலும் இவ்வுற்பத்தி முறையை நாட்டார் கலை இலக்கிய உற்பத்தி முறை என்று அழைப்பது பெரிய தவறாகிவிடாது. வழக்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சொல்லாட்சி என்கிற வகையில் இச்சிறுவீத உற்பத்தி முறையின் விளை பொருளாகிய வழக்காறுகளை நாட்டார் வழக்காறுகள், நாட்டுப்புறப் பாடல்கள் என்பன போன்றும் இவை பற்றிய கல்வியை நாட்டுப்புறவியல் என்றும் அழைப்பதில் தவறில்லை என்றே தோன்றுகிறது.

இங்கு ஒன்றை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். பெரு வீத இலக்கிய உற்பத்தி முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட இவ்விலக்கிய உற்பத்தி முறையானது பெரு வீத உற்பத்தி முறையின் செல்வாக்கிலிருந்து விடுபட்டதல்ல என்பதே அது. இதனை விளங்கிக் கொள்வதற்கு ஒரு கலை இலக்கிய உற்பத்தி என்பது எத்தகைய காரணிகளால் இணைந்து உருவாக்கப்படுகிறது (articulate) என்கிற கேள்வியை நாம் மீண்டும் கொஞ்சம் விளக்கமாய்ப் பார்க்க வேண்டும்.

பொருளுற்பத்தி முறைக்கும் அதன் ஓரங்கமான கலை இலக்கிய வழி உற்பத்தி முறைக்குமிடையே இயங்கியல் உறவு நிலவுகிறது. அதாவது இவை இரண்டும் ஒன்றில் ஒன்று பரஸ்பர தாக்கங்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்திக் கொள்கின்றன. ஒரு வளர்ச்சியடைந்த முதலாளியச் சமூக உருவாக்கத்தில் இலக்கிய வழி உற்பத்திமுறையின் பணி, பொருள் உற்பத்தி முறையை மறு உற்பத்தி செய்வதும் வளர்ப்பதுமாகும். ஒவ்வொரு சமூகத்தில் நிலவும் பொருள் உற்பத்தி முறையும் ஒரு பொதுக் கருத்தியலை அச் சமூகத் தில் நிலவச் செய்கிறது. இந்தப் பொதுக் கருத்தியலானது அச் சமூகத்திலுள்ள சராசரி மனிதனுக்கு அந்தச் சமூக அமைப் பை நியாயப்படுத்தி மறு உற்பத்தி செய்கிற மன நிலையை உருவாக்கி அளிக்கிறது, கலாச்சாரம், அரசியல், மொழியிய கோட்பாடுகள் போன்ற அம்சங்களின் மூலமாக பொதுக்

கருத்தியல் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இவை தனித்தனியாகவோ ஒட்டு மொத்தமாகவோ அவ்வக்காலக் கலை இலக்கியப் படைப்புக்கள் மீதுசெல்வாக்கு வகிக்கின்றன தஞ்சைப் பகுதியில் வாழ்ந்த தியாகைய்யர் தெலுங்கில் கீர்த்தனைகள் படைத்தது பொதுக் கருத்தியலின் மொழியியல் கோட்பாட்டுஅம்சத்தின், தாக்கமே எனலாம். இங்கொன்றைச் சொல்வது அவசியம். பொதுக் கருத்தியல் என்பது அச் சமூக அமைப்பில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தியல் ஆகும். இதன் பொருள் இந்தச் சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் அக் கருத்தியலை அப்படியே ஏற்றுக் கொண்டவர் அல்லர். எனவே பொதுக் கருத்தியலின் செல்வாக்கிற்கு அச் சமூகத்தில் வாழ்கிற அனைத்து உறுப்பினர்களும்கட்டுப்பட்டவர்களாகவே இருந்தாலும் எந்த ஒரு உறுப்பினரின் கலை இலக்கிய உற்பத்தியும் பொதுக் கருத்தியலின் செல்வாக்கால் நேரடியாகத் தீர்மானிக்கப்படுவதில்லை. இடை நிலையாகப் படைப்பாளியின் கருத்தியலும், படைப்புக் கருத்தியலும் செயல் படுகின்றன. படைப்பாளியின் கருத்தியல் என்பது அவனது சாதி, மதம், மொழி, இனம், வயது, அரசியல் ஈடுபாடு ஆகியவற்றைப் பொறுத்தது. ஒரு படைப்பாளியின் அரசியல் ஈடுபாடு என்பது பொதுக் கருத்தியலுக்கு முற்றிலும் எதிரானதாகவும் பொதுக் கருத்தியலைத் தகர்ப்பதே அவனது அரசியற்குறிக்கோளாக இருக்கிறது என்னும் போதும் (எ.டு: புரட்சிகரப்படைப்பாளி) அவன் முற்றிலுமாகப் பொதுக்கருத்தியலிலிருந்து விடுபட்டு நிற்கிறான். மற்றவர்கள் பல்வேறு மட்டங்களில் பொதுக்கருத்தியலுக்கு உட்பட்டும் விடுபட்டும் நிற்கிறார்கள். நாட்டார்படைப்பாளிகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் பொதுக்கருத்தியலுக்கு உட்பட்டவர்களே. ஆனால் பொதுக் கருத்தியலால் முழுமையாகப் பயன்பெறும் பொருளுற்பத்தியைச் சேர்ந்த ஆதிக்க சக்திகளல்லர். மாறாகப்பொது உற்பத்திமுறையால்சுரண்டப்பட்டவர்கள் என்கிற வகையில் அவர்களது கருத்தியல் பொதுக்கருத்தியலுக்கு உட்பட்டும், விடுபட்டும்நிற்கின்றன.

படைப்புக் கருத்தியல் என்பது நிலவுகிற கலை இலக்கிய வடிவங்கள், பாரம்பரியங்கள், இலக்கியக் கோட்பாடுகள், விமரிசன முறைகள், வினியோக முறைகள், சராசரி வாழ்க்கை முறைகள் ஆகிய பல்வேறு அம்சங்களால் தீர்மானிக்கப்படுகின்றது. சிறுகதை, நாவல், புதுக் கவிதை போன்ற இலக்கிய படிவங்களும், மசாலா சினிமா, இருபொருள் சினிமாப் பாடல்கள், ஃபார்முலா மாத நாவல்கள் ஆகிய போக்குக்களும் (trends) இன்றைய சகாப்தத்தின் ஆதிக்கம் செலுத்தும் வடிவங்களாகவும் போக்குக்களாகவும் இருக்கின்றனவெனில் அது இன்றைய படைப்புக்கருத்தியல், பொதுக் கருத்தியல், பொது உற்பத்தி முறை ஆகியவற்றின் ஒட்டு மொத்தமான கூட்டிணைப்பின் (articu lation) விளைவேயாகும். இரவு முழுவதும் நிகழ்த்தப்பெறும் நாட்டார் கதைப் பாடல்களானது இந்நூலில் உள்ளவை

போன்று மூன்று முதல் ஐந்து நிமிடங்களுக்குள் நிகழ்த்தி முடிக்கப் பெறத்தக்கனவாய் இன்று குறுகிப் போயுள்ளன வெனில் அதற்கான காரணங்களை இன்றைய படைப்புக் கருத்தியல், அதனைத் தீர்மானிக்கும் பொருளுற்பத்தி முறை வாழ்க்கைமுறை ஆகியவற்றிலேயே தேடிப்பார்க்கவேண்டும்.

ஆக ஒரு கலை இலக்கியப் படைப்பு என்பது பொருள் உற்பத்தி முறை/இ.உ.மு/ பொதுக் கருத்தியல்/ படைப் பாளியின் கருத்தியல்/படைப்புக் கருத்தியல் ஆகியவற்றின் செயலூக்கமுள்ள கூட்டிணைவின் விளைவேயாகும். நாட்டார் இலக்கிய உற்பத்தி முறை என்பது முன்குறிப்பிட்டவாறு ஆதிக்க இலக்கிய உற்பத்தி முறையிலிருந்து முற்றிலும் விடு பட்டிருந்தாலும் பொதுக் கருத்தியல்,படைப்புக் கருத்தியல் படைப்பாளியின் கருத்தியல் ஆகியவற்றின் ஊடாக பொது உற்பத்தி முறை. ஆதிக்க இலக்கிய உற்பத்திமுறை ஆகிய வற்றின் செல்வாக்கிற்குட்பட்டதேயாகும். இதன்விளைவே இவற்றில் காணப்படும் சமரசப் போக்குக்கள், அடிமை மன வெளிப்பாடுகள்,சினிமாஆபாசத்தாக்கங்கள் ஆகியனவாகும்

இங்கொன்றைச் சிந்திப்பது முக்கியம். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நாட்டார் பாடல்கள் அச்சிடப்பட்டு வினியோ கிக்கப்படும்போது பொது உற்பத்தி முறையில் நேரடியாகப் பங்கு பெறுகின்றன. அப்போது அவை நாட்டார் வழக்காறு களின் பதிவுகளாகத்தான் விளங்குகின்றனவே யொழிய அவையே நாட்டார் வழக்காறுகளாவதில்லை. நாட்டார் இசையை இளையராஜா சினிமாவில் அடக்கும்போதும் இது பொருந்தும். இந்தக் கலைஞர்களை மட்டுமே பயன்படுத்தி னாலுங் கூட இன்றைய பெருவீத உற்பத்தியின் வினியோக சாதனங்களைப் பயன்படுத்தும் போது இவை அவற்றின் சுயத் தன்மையை இழந்து விடுவதையும், திருத்தங்களுக் குள்ளாவதையும் குணசேகரனின் இசை நிகழ்ச்சிகளிலுங் கூடக் காணலாம்.

இனி இந்த அடிப்படையில் குணசேகரன் தொகுத்துள்ள நகர்சார் நாட்டுப் புறக் கதைப் பாடல்களை விளங்கிக் கொள்ள முயற்சிக்கலாம்.

மதுரை, (பழைய) இராமநாதபுரம் மாவட்டங்களில் நாட்டுப் புறக் கலைநிகழ்ச்சிகளில் பயிலப்படுகிற பதினொருபாடல்கள் இத்தொகுதியில் உள்ளன. இவற்றில் இரண்டு மதுரைப் பகுதியைக் கலக்கி, இறுதியில் கொல்லப்பட்ட கேடிகளின் கதைகள். ஒன்று கலப்புத் திருமணத்திற்கு இணங்க மறுத்த தாழ்ந்த சாதிப் பெண்ணைக் கொன்று விட்டுச் சிறைக்குப் போனவனின் கதை. ஒன்று முக்குலத்தோரின் தலைவராய் இருந்து மரணமுற்ற பசும்பொன்முத்துராமலிங்கத்தேவரின் மரண அவலப்பாடல். இவர்கள் அனைவரும் சமீபகாலத்தில் வாழ்ந்தவர்கள். அடுத்த ஐந்து பாடல்கள் விபத்தாலும்,

புயலாலும் ஏற்பட்ட துயரை விளக்கும் பாடல்கள். இவையும் சமீப கால உண்மை நிகழ்ச்சிகளே. கடைசி இரண்டும் கோனார் இன மக்கள் மற்றும் பஞ்சுமில் தொழிலாளிகள் ஆகியோரின் அவல வாழ்க்கையைப்படம் பிடிப்பவை (இவற்றையும் கதைப்பாடல் வகைக்குள் அடக்குவது பொருத்தம் தானா?)

இவற்றில் மைக்கேலம்மா கதைப் பாடல்மட்டுமே படைப்பாளியின் பெயர் தெரியாமல்தோற்றுவிக்கப்பட்டுவழங்கப்படுவது. மணிக்குறவன் பாடல் யார் எழுதியது எனப்பாடலிலும், முன்னுரையிலும் விவரமில்லை. மற்றவை அனைத்தும் தொழிற் கலைஞர்களுக்காக வழக்கமாய்ப் பாடல் எழுதிக் கொடுக்கும் வாததியார்களால் எழுதப் பட்டவை.

இவை அனைத்துமே குறவன் குறத்தி ஆட்டம், கரக ஆட்டம் என்று எளிய மக்கள் மத்தியில் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருப்பவை.பஞ்சுமில் பாடல் என்பது மில்தொழிலாளிகளால். தொழில் இடை நேரங்களில் பயிலப்படுவதா என்பது குறித்துத் தகவல் ஏதுமில்லை, மற்றவை போலவே மக்கள் மத்தியல் நிகழ்த்தப் படுவதாகவே தெரிகிறது.

இந்தப் படைப்பாளிகளுஞ் சரி, நிகழ்த்துகிற கலைஞர்களுஞ் சரி சமூகப் பொருளுற்பத்தி முறையில் அடித் தட்டில் இருப்பவர்களே. இந்தப் பாடல்களின் உற்பத்தி, வினியோகம் ஆகியவற்றில் ஆதிக்க இலக்கிய உற்பத்தி முறையின் சாதனங்கள் எதுவும் பயன்படுத்தப் படுவதில்லை, அதே சமயத்தில் பொருளுற்பத்தி முறையின் ஆதிக்க சக்திகள் முன்னின்று நடத்துகிற திருவிழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளிலேயே இவை நிகழ்த்தப் படுகின்றன என்பதையும், இதன் படைப்பாளிகளும், நிகழ்த்து கலைஞர்களும்,பொதுக் கருத்தியலிலிருந்து விடுபட்ட புரட்சியாளர்கள்அல்ல,மாறாக சாதாரண விவசாய நாட்டுப்புறமக்களின் உளவியலின் பிரதிநிதிகளே என்பதையும் நாம் மறந்து விடலாகாது.

இதன் விளைவுகளை நாம் இந்தப்பாடல்களுக்குள் காணமுடியும். தேவரைப் புகழும் முறை,அவர் மரணத்திற்கு வந்தவர்களைப் பட்டியலிடுவது, தனுஷ்கோடி விபத்தைப் பார்க்கத் தலைவர்கள் வந்ததைச்சொல்வது,சரோஜாதேவி எம்.ஜி.ஆர் ஆகியோர் நன்கொடைகள் அளித்ததை விவரிப்பது, கோனார்கள் வறுமையைப் பற்றிக் கூறி வருகையில்,

''பூட்டி வைக்கப் பொட்டியில்லாமப்
போனதில்லை காசு-நாங்கப்
புத்தியில்லாமப் போனதனால்
பொழப்பு இப்படி ஆச்சு''

என்று அவலப்படுவது.

''வண்டியூறு ஒண்ணு சேர்ந்து ராசாக்கா— எம்.ஜி.ஆருக்கு
மனுக் கொடுத்துப் பேசவேணும் அய்யாக்கா''

என்று கூறுவது, ஸ்கைலாப் வதந்தி மற்றும் அழிவுத் துயரச்சம் ஆகியவற்றைப் பாமரத்தனத்தோடு ஏற்றுக் கொள்வது என்பது போன்ற எளிய விவசாய மனப்பாங்குகளென்பன பொதுக் கருத்தியலின் செல்வாக்கிற்குக் கட்டுப்பட்டவை தான் என்றாலும், பொதுக் கருத்தியலுக்கு முழுமையாகக் கட்டுப்பட்ட ஆதிக்க இலக்கிய உற்பத்தி முறை தொட அஞ்சுகிற அம்சங்களையெல்லாம் இவை தொட்டிருப்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

நவரசங்களையும் அற்புதமாக வெளிப்படுத்தும் உன்னதச் செவ்வியற் கலை எனப் போற்றப்படும் பரத நாட்டியகலையைப் பயில்கிற நாட்டிய மணிகள் யாரும் ஆயிரக் கணக்கில் மக்கள் மடிவதற்குக் காரணமான தனுஷ்கோடி அழிந்த கதையையோ, அரியலூர் இரயில் விபத்தையோ தங்கள் கருப்பொருளாக எடுத்துக்கொள்வார்களா? வெள்ளத் துயர் அவலச் சுவையையோ, பள்ளி இடிபாடுகளுக்கிடையே ஒடுங்கிய குழந்தைகள் பட்டபாட்டையோ பத்மாசுப்ரமணியம் அபிநயிப்பாரா? அழிவுத் துயரச் சோகங்களைப் பால முரளி கிருஷ்ணா முகாரியில் ஆலாபிப்பாரா? மாட்டார்கள். ஏனெனில் நேரடியாகக்காரணங்கள் சுட்டப்படாவிட்டாலும், இந்த அரசமைப்பு, அதிகார வர்க்க அமைப்பு, ஆதிக்க சக்திகளின் பொறுப்பின்மை இப்பாடல்களின் மையப் பொருளாகும் போது இவ்வமைப்பைச் சார்ந்து பலன்பெறும் இவர்கள் இவற்றைக் கையிலெடுக்க மாட்டார்கள். ஆதிக்க இலக்கிய வழி உற்பத்தி முறை இதனை அனுமதிக்காது.

இரயிலில் பயணம் சென்று கொண்டிருந்த பக்தர்களும் சேர்ந்து பரலோகம் போனதை,

> ''ராமேசுவரம் பக்தி—அவுக
> நடு வழியில் பல்டி''

என்றும், தென் திருக்கோடியின் புனிதத் தலங்களில் ஒன்றாகிய தனுஷ்கோடி அழிந்ததை.

> ''—கடவுளது
> சக்தியுள்ள ஸ்தலமென்று தரணி எல்லாம் புகழும்
> தனுஷ்கோடியழிஞ்சு போச்சு-தரணி புகழ்
> தனுஷ்கோடியழிஞ்சு போச்சு''

என்று நகைப்பதும், அழிவுத் துயர்களினூடே வள்ளன்மையைக்காட்டி ஏய்க்கும் தலைவர்களை அங்கீகரித்துக் கூறி வரும் போதே.

> —''எவரெவரோ
> என்னதந்து என்ன பயன் இரண்டாயிரம் சனங்கள்
> இவ்வுலகை விட்டு மறைந்தார்-நிமிசத்திலே
> இவ்வுலகை விட்டு மறைந்தார்''

என்று முத்தாய்ப்பதும் அடித்தட்டு வர்க்கங்கள் செல்வாக்கு வகிக்கிறதும, பெருவித கலை இலக்கிய உற்பத்திக் கருவி

களைப் பயன்படுத்தாததுமான இலக்கிய வழி உற்பத்தி முறையில் மட்டுமே சாத்தியம்.

திருடுதல், கொள்ளையடித்தல் போன்றவற்றைத் தூலமாகப் பார்க்காமல், சூக்குமப் படுத்தி சர்வ வியாபகமானத் தீமை களாகச் சுட்டிக் காட்டி, திருடாதே, பொய் சொல்லாதே, கொல்லாதே என எதிர்மறைப்போதம் செய்யும் ஆளும்வர்க்க அறவியற் கோட்பாட்டிற்கு நேரெதிரான அறவியற் கோட் பாடுகளைக்கொண்டுள்ள அடிப்படை வர்க்கத்தின் உளவியல் வெளிப்பாடாகத்தான் கருவாயன், மணிக்குறவன் போன்ற திருடர்களும் விவசாய மக்கள் மத்தியில் செல்வாக்குடன் போற்றப் படுவதையும் நாம் காண வேண்டும்.

விவசாயச் சமூகம், விவசாய உளவியலின் பிரதிநிதி என்றெல் லாம் கூறும்போது இவை ''நகர்சார்...'' என்கிற கருத்தாக் கத்துடன் முரண்படுகிறதே என்கிற கேள்வி எழுகின்றது. நகரியம் நவீனமயம் போன்ற கருத்தாக்கங்கள் மேலை நாடுகளில் முதலாளிய வளர்ச்சியுடன் பிணைந்திருப்பது போல இந்தியாவில் இல்லை. நவீனமயமாதலின் அடையாள மாய் டேனியல்வெர்னர் போன்றோர் கீழ்க்கண்டவற்றைச் சுட்டிக் காட்டுவர்.

தொடர்புச் சாதனங்களில் புரட்சி,
பெரும்பான்மையான மக்களைத் தொடர்புச் சாதனங் களின்செல்வாக்கிற்குட்படுத்துவது,
கல்வியறிவு வளர்ச்சி,
அதிகமான பொருளாதாரப்பங்கேற்பு (சராசரி வருமான அதிகரிப்பு),
அதிகமான அரசியற் பங்கேற்பு,
பகுத்தறிவு சார்ந்த உலகக் கண்ணோட்ட வளர்ச்சி,
சமூக ஏற்றத் தாழ்வுகள்என்பன மாற்றப்படக் கூடியவையே என்கிற மன நம்பிக்கை அதிகரிப்பு,
சமூக அசைவியக்க அதிகரிப்பு,

மேற்குறிப்பிட்டவற்றை நன்கு ஆராயும் போது நடை உடை, வாழ்க்கை முறை ஆகியவற்றில் ஏற்படுகிற மாற்றங் களைக் காட்டிலும் மக்களின் மனோ பாவங்களில் ஏற் படுகிற மாற்றங்களே பிரதானம் என்பது புலப்படும்

''இயந்திர மயங்களின் வருகை, மின்சாரம், பஸ். சினிமா என வந்த நவீனங்களின் தாக்கம்'' ஆகியவற்றைக் கண்டு மகிழ்ச்சியடைகிறார் குணசேகரன், நவீனமயமாதலின் பிரதானமான அம்சங்கள் இவை மட்டுமே அல்ல என்பதை நாம் மறந்து விடலாகாது. நமது நாட்டில் இன்றும் எழுபது சதம் மக்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்தாம். பஞ்சு மில் தொழிலாளிகளான பின்னும் கூட சராசரி வருமானம் அதிகரிக்கவில்லை. அரசியற் பங்கேற்பிலும் எளிய மக்கள் அந்நியப்பட்டே உள்ளனர்என்பதுஉளளேஉள்ளபாடல்களில் அரசியற் தலைவர்களை அணுகியிருக்கும் முறையிலிருந்தே

விளங்கிக் கொள்ள முடியும் உலகக்கண்ணோட்டம் பகுத்தறிவு டையதாய் வளரவில்லை என்பதை ஸ்கைலாப் பாடல் போன்றவை தெளிவாக்கும். பூனா நகரை ஆய்வு செய்த காட்கில் சென்னை நகரை ஆய்வு செய்த மில்டன் சிங்கர் ஆகியோர் இந்தியாவில் நகர் மயமாதல் என்பது பாரம் பரியத்தை மறு உறுதி செய்வதாகவே அமைந்துள்ளது எனக் கூறியுள்ளதும், யோகேந்திர சர்மா போன்ற சமூக வியலாளர்கள் இந்தியாவில் நகர் மயாமதல் என்பது லத்தீன் அமெரிக்கா போன்று பாரம்பரியங்கள் சிதைக்கப் படாமலே உருவாகியுள்ளது என்று கூறுவதையும் நாம் இணைத்துப் பார்க்க வேண்டும்.

அதனால் தான் குணசேகரனின் சொந்தக் கிராமமான மாரந்தைக்குள்பஸ்சும் மின்சாரமும் நுழைந்துங்கூடநாட்டுப் புறக்கலைஞர்கள் செருப்புக்காலுடன் நுழையமுடியவில்லை.

இவற்றை யெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்க்கும் போதுதான் இப்பாடல்களில் நாட்டுப்புற விவசாய உளப்பாங்கே பிரதானமாய் வெளிப்படுவது விளங்கும். கோர்ட்டு ராக்கெட்டு, மாலைமுரசு. மெயில் எக்ஸ்பிரசு போன்ற நவீனங்களெல்லாம் பாடல்களில் வெளிப்பட்டாலும் அடிநாதமான மனோபாவத்தில் இதற்கு முற்பட்டநாட்டார் பாடல்களுக்கும் இவற்றிற்கும் அதிக வேறுபாடில்லை. அவ்வகையில இவற்றை ''நகர்சார் நாட்டுப்புற பாடல்கள்'' என்பதைக் காட்டிலும் ''தற்கால நாட்டுப் பாடல்கள்'' அல்லது ''இன்றைய நாட்டுப் பாடல்கள்'' என்று அழைக் கலாமோ எனவும் தோன்றுகிறது.

முதலாளித்துவ நாடுகளில் கடந்த நாற்பதாண்டுகளில் தோன்றியுள்ள நாட்டார் இலக்கியங்களையும் இதே காலத்தில் இங்கு தோன்றியுள்ளவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது மேலும் விளக்கமுறும்.

வெறும் சேகரிப்பாளராகவோ, ஆய்வாளராகவோ மட்டு மின்றிஅந்தச்சனங்களில் ஒருவராகவே வாழ்ந்துஅவர்களின் துன்ப துயரங்களில் பங்கு பெற்று அவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாய் விளங்கும் குணசேகரன், நாட்டார் கலை ஆய்வுகளில் வேறுயாரையும் காட்டிலும் அதிகம் வாய்ப்புக் கள பெற்றிருக்கிறார் என்பதை அவர் மறந்து விடலாகாது. பல்கலைக் கழகப் பண்டித நடையை விட்டு விலகி படைப் பிலக்கியச் சுவையோடு அவரது எழுத்துக்கள் மிளிரத் தொடங்கியுள்ளன. குணசேகரனின் முந்தையை எழுத்துக் களைக்காட்டிலும் இதில் மெருகு கூடியுள்ளது. இன்னும் கூடவேண்டும் என்பதே நம்முடைய அவா.

மே 20, 1987,
12/28, அம்மாலயம் சந்து
தஞ்சாவூர்-613 009

அ. மார்க்ஸ்

முன்னுரை

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டப்பகுதியில் இளையான்குடி வட்டாரத்தில் உள்ளது வடக்குக் கீரனூர் என்னும் ஒரு சிறிய கிராமம். என் அம்மா பிறந்த ஊர். எங்கள் அம்மாயியைப் பார்க்க இளையான்குடியிலிருந்து ஏழு மைல் தொலைவு உள்ள கீரனூருக்குக் கால்பரீட்சை, அரைப் பரீட்சை, (முக்கால் பரீட்சை இல்லை) முழுப் பரீட்சை ஆகிய விடுப்பு நாட்களில் நடைப் பயணமாக எங்கள் குடும்பம் சென்று வருவது வழக்கம். எனக்கு ஏழு வயது. விபரம் கொஞ்சம் தெரியும் பருவம். விபரம் கொஞ்சம் தவறும் பொழுதெல்லாம் அண்ணன் கருணாநிதி தலையில் 'நங்க் எனக் கொட்டிச் சொல்லி உணர்த்தும் பருவம்.

இளையான்குடி டவுனும் கீரனூர் கிராமமும் இணைந்து தந்த கதை:

எங்கள் அப்பா அமீதியாப் பாடசாலையில் ஆசிரியராக வேலை பார்த்தார். அப்பள்ளி சாலையூர் இளையான்குடியில் உள்ளது. எனவே சொந்த ஊர் மாரந்தையை விட்டுக் குடும்பம் இளையான்குடியில் வாடகை வீட்டு வாசத் திலிருந்தது. இங்கே இசுலாமியர், ஆயிர வைசிய செட்டிமார் கள் அதிகம் வாழ்கின்றனர். எனவே தோல் வியாபாரம், நகை, பலசரக்கு போன்ற வியாபாரங்கள் நிறைந்திருக்கும். அப்பொழுதெல்லாம் பி.பி.டி.கார் புதூர் போகும். மதியம் முதல் மணி அடித்திடும். அந்தக் கார் பரமக்குடிக்குத் திரும்பும் போது சாலையூரில் நிற்கும். அப்பொழுது ரெண்டா வது மணி அடித்திடும். ரெண்டாவது மணி அடித்தால் மதிய வகுப்புத் தொடங்கி விடும்.

இளையான்குடிக்கும் கீரனூருக்குமிடையேஉள்ள பழக்கவழக் கங்கள்,உணவு, உடை பேச்சு போன்ற சகலவிசயங்களிலும் வேறுபாடுகள் உண்டு.

வடக்குக் கீரனூரிலிருந்து இளையான்குடி திரும்பும் நாள் வரை நெல்லுச் சோறு பார்க்க முடியாது.

'ஒங்க வீட்ல என்ன சோறு?'
'வரகாஞ்சோறு'
'நெல்லுச் சோறு?'
ம்...ம்...கூம்...

சிறுவர்களாகிய எங்களிடம் விளையாட்டுக்களில் இப்படிப் பேச்சுகள் அமையும்.

'வராத விருந்தாடி வந்திருக்காக.
வரகாஞ் சோறு ஆக்கியிருக்கு'

என்றபடி பெண்கள் பேசிக் கொள்வதும் உண்டு.

புளியமுந்து, வேப்பமுத்து, பழித்தங்காய் ஆகியன கொண்டு ஐஸ், பொரிகடலை, பருத்திப் பால்கஞ்சி, பதனீர் ஆகிய தின் பண்டங்கள் மாறு கொள்வதுண்டு. காசு கண்ணில் படாது. பொருளுக்குப் பொருள் மாற்றம். கூவிக் கொண்டும் வரும் சில்லறை வியாபாரிகளைத் தவிர வேறு கடையோ கடை வியாபாரியோ அந்த ஊரிலும், பக்கத்து ஏழு மைல் தொலைவிலுள்ள வேறு ஊர்களிலும் காண்பதரிது.

சனிக்கிழமை வாரச் சந்தை, கருவாடு, கத்திரிக்காய் ஒரு வாரத்திற்கு வேண்டியதை இளையான்குடி சென்றே வாங்கி வர வேண்டும். இளையான்குடியிலிருந்து ஏழு மைல் சுற்றளவுள்ளவர்களுக்கும் இளையான்குடியே கதி.

சனிக்கிழமை தவிர்த்த பிற நாட்களில் ஆண்களும் பெண்களும் வயற்காடுகளிலேயே இருப்பர். சூரிய முகம் பார்ப்பதற்குள் வயற்காடு சென்று சூரிய முகம் மறையும் வரை வயற்காடே எங்கள் சின்னஞ்சிறார்களுக்கு மட்டுமே ஊர், ஊர்வலமாகும்.

'குடியானவுக வந்தா 4அடி எட்டிநிக்கனும்.
செருப்புப்போடக் கூடாது.
சின்னப்புள்ளைங்க குடியான சாதியா இருந்தா வாடா, போடானனு பேசக் கூடாது.
விளையாடும் போது குடியானவுக புள்ளைகளைத் தொட்டு விடலாகாது'

'இம்புட்டுக்கண்டிஷனோட' விளையாட்டு விளையாடனும், இளையான்குடியில் இந்தக்கண்டிஷன்களை நாங்கள் அறிவோம்.

நன்செய்யும் புன்செய்யாகவே விளங்கும் கீரனூரில் வரகு வைக்கோல் படப்புக்களே ஏராளம்.

'அம்பலாரு வீட்லயும், அவுக அங்காளி பங்காளி வீட்லயும் மட்டும் நெல்லுச் சோறு.' மழை, தண்ணீர், இல்லையென்றால் நடந்து விட வேண்டியதுதான் தஞ்சாவூரு.

22 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் வடக்குக் கீரனூர் பயணம். இன்று 'பம்புசெட்' வைத்துக் கொண்டு புன்செய்யையும், நன்செய்யாக மாற்றி விளைவிக்கின்றனர். வீட்டுக்கு வீடு 'கரண்ட் லைட்' ஓட்டு வீடுகள் ஏராளம். ட்ராக்டர், இன்னும் இப்படிப்பல.

'மூனு மணிக்குக் கம்மியாக் கூட
மோட்டார் ஓட்டத் தண்ணியில்லே-அத
மூனா ரெண்டாப் பிரிச்சுப் பாத்தா
முழு நெலத்துக்கும் பாயலே
மாட்டுக்குந்தான் ஒழவில்லே,
மக்களுக்குந் தான் ஒணவில்லே
மாடா நாமப் பாடுபட்டும்
நம்ம நெலமை விடியலே'*

எந்திரங்களைப் புகுத்திய நிலையிலும் மீண்டும் விவசாயப் பிரச்சனைகள்.

வரகு, கேழ்வரகு, சாமை போன்ற பயிர்களெல்லாம் இப்பொழுது காண்பதரிதாகியுள்ளது எங்கு பார்த்தாலும் நெல் வைக்கோல் படப்புகளே தென்படுகின்றன. கடையே இல்லாத அந்த ஊரில் இன்று துணிமணிக்கடை, காய்கறிக் கடை, அவ்வூர் பள்ளிப் பிள்ளைகளுக்கு வேண்டிய மிட்டாய் கடை, சிலேட்டு புத்தகக் கடை ஆகியவை கடை விரிக்கப் பட்டுள்ளன.

△

எங்கள் ஊர் கதை:

நான் பிறந்த ஊர் சேத்தூர் மாரந்தை. உள்ளூர் திருவிழாக்கள், குடியானவர்களது வீடுகளில் நடக்கும் நல்லது கெட்டது நிகழ்வுகள் ஆகியவற்றுக்கும், கீழ்க்குடியானவர்கள் வீட்டுக்கு ஒருவர் வீதம் கொட்டுக் (தப்பு, தவில்) கொட்டச் சென்றாக வேண்டும். இது ஊர்க் கட்டுமானம். இது ஊர் தோறும் உள்ள கட்டுமானம்.

உள்ளூர் திருமணங்களுக்கு வண்ண வண்ணக் கொட்டான்கள், பெட்டிகள், பாய், விசிறிகள், சொளகுகள் வகை வகையாய்ச் செய்து கொடுப்பது கொட்டுக் கொட்டுவோர் பணியாகும். கல்யாண வீட்டார் இவர்களுக்குச் சோறு போடுவார்கள். வேட்டி துண்டு, சேலை சட்டை அளிப்பார்கள்.

மேல் குடியானவர்களது பலரது திருமணங்களில் மண்சட்டிப் பானையிலேயே சமையல், பந்தி பரிமாற்றம் ஆகியவை நடைபெறக்கண்டிருக்கின்றேன்.

இரவிலேயே 'தாலிகட்டு' பெரும்பாலும் அமையும். விடிந்த காலையில் இரவுச் சாப்பாட்டின் எஞ்சிய கஞ்சியே, வெஞ்சனமே உணவாகும்.

* துரைராஜ், 70 வயது, கள்ளிவாடி. 13-3-84.

அம்பலகார வீட்டிலும் அவுக சனங்க வீடுகளிலும் நடைபெறும் கல்யாணங்களின் போதும் மேற்சொன்ன முறைகளைத் தழுவியே அமையும். கொஞ்சம் மட்டும் வேறுபடும்.

மாரந்தையை வைத்து முக்கோண வடிவில் மூன்று மைல் தொலைவுகளில் இன்று பஸ்கள் சப்தமிட்டு அழைப்பதால் நடைபாதைகள் வெறிச் சோடிக் கிடக்கின்றன. மாரந்தைக் காரர்கள் ஒரு நாளைக்குள் மதுரை சென்று திரும்பலாம். காரைக்குடி, பரமக்குடி, இளையான்குடி, சிவகங்கை ஆகிய நகரங்களுக்குக் காலையில் சென்று மதியச் சாப்பாட்டிறகுத் திரும்பிடலாம். நகரங்களும் கிராமங்களும் இன்று அந்நியோன்யப்பட்டுள்ளன.

கிராமங்களில் நடைபெறும் கல்யாணத்திற்கு மேளதாளக் காரர்கள் இன்றுகிடைக்கப் பெறாவிடினும் கவலையில்லை. ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிப்பதிவு நாடாக்கள்வழியேயும், இசைத் தட்டுக்களாலும் மங்கல ஒலிகள் தயார் செய்து வைக்கப்பட்டுள்ளன. அவை 'கரண்ட் உள்ள இடங்களிலும் கரண்ட் இல்லாத இடங்களிலும்' பயனபடுத்தப்படுகின்றன.

படித்த இனம்,பணமுள்ள இனம் உருவாக்கிவைத்த நகரியக் கலாச்சாரங்களில் ஒன்றான சீதனப் பேய் இன்று கிராமங்களையும் எட்டிப் பிடித்துள்ளது. கல்யாண ஊர்வலம், மாப்பிள்ளை, பெண் வீட்டுப் பயணம் ஆகியவை கால்நடைப் பயணங்களிலோ மாட்டு வண்டிப்பயணங்களிலோ அமைவது போய் இன்று பஸ், லாரி, டிராக்டர் ஆகிய வாகனங்களில அமைகின்றன.

△

ரேடியோ வந்து மட்டை போன கதை:

பசும் பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், காமராசர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களும உள்ளடங்கிய ஒரே மாவட்டமாக இராமநாதபுரம் ஜில்லா அமைந்திருந்த அன்றைய காலததில் 'சாவு என்றால் உள்ளூர்த் தோட்டிகளே இழவு சொல்ல ஊர்களுக்குப் பயணம் செய்ய வேண்டும்.

'என்னரசே பொன்னரசே—அப்டி
என்ன சொல்லிக் கண்ணசந்தாய்—அப்படி
உள்ளூருத் தோட்டிகளே—அப்டி
ஊரு சொல்லப் போனீகளா'

என்றவாறு இப்பகுதி மாரடிப்பு ஆட்டம் பாடல் வரிகளும்

இச்செய்தியினை உறுதி செய்யும். இழவு வீட்டின் வாசல் முன் போடப்பட்டுள்ள பந்தலில் சாவுக் கொட்டு கொட்டுவது உள்ளூர்த் தோட்டிகளின் கடமையாகும். இழவு வீட்டுக்கு கேதம் கேட்டு வருவோரை முன் சென்று வரவேற்பதும், அவர்களிடையே துண்டு விரித்துக் காசு பெறுவதும் கொட்டு கொட்டுவோர் வழக்கம்.

'கத்திரிக்கா எங்களுக்கு—அந்தக்
கைலாசந்தான் ஒங்களுக்கு—அந்தப்
பூசனிக்கா எங்களுக்கு—அப்டி
பூலோகம் ஒங்களுக்கு—அப்டி
ஆத்தாடியோ அம்மாடியோ
ஆத்தாடியோ அம்மாடியோ‡

என்று குழுவினர் இணைந்து மார்புகளில் அடித்துக்கொண்டு ஆடிப் பாடுவதும் மரபாகும்.

இடையிடையே உற்றார் உறவினர்ப் பெண்கள் இணைந்து பிணத்தைச் சுற்றியோ, பிணத்துக்கு அருகாமையிலேயோ வட்டமாக நின்று மாரடித்து ஆடுவதுண்டு.

'மே முளி கண்ரெண்டும்—அப்டி
மேப்பார்வை மங்கலாச்சே—அப்டி
கீமுளி கண்கரெண்டும்—அப்டி
கீப் பார்வை மங்கலாச்சே.
அழைக்க நல்லாக் கயிறு விட்டான்—அப்படி
அழைச்சுப் போக எமன் வந்தான்
தூக்க நல்லாக் கயிறு கொண்டு—அப்டி
செந்தூக்காத்தூக்கிட்டானே
தங்க நல்ல அரிக்கஞ்சட்டி—அப்டி
தனிச் சம்பா வாய்க் கரிசி
ஆத்தாடியோ அம்மாடியோ
ஆத்தாடியோ அம்மாடியோ
ஆத்தாடியோ அப்பாடியே
ஆத்தாடியோ அப்பாடியோ'†

இவ்வாறு ஒருவர் பாட பிறர் பின்பாட்டுப் பாட மாரடைப்பு

‡ அம்மச்சி கரகாட்டப்பெண் கலைஞர். வயது 45 விராமதி ஊர், 4. 5. 85.

† அன்னபுஸ்பம்! வயது 35 துகவூர் கிராமம். 3. 2. 85.

(மாரடிப்பு ஆட்டப் பாடலின் ஒவ்வொரு வரிக்கும் பின்பாட்டாளர் தானானை என்றோ, பாடலின் வரியை வாங்கியோ பாடுவது மரபு.
'காண்க' பின்பாட்டு ஆய்வுக் கட்டுரை, செம்மலர் மாத இதழ்,

ஆட்டப் பாடல் இறந்தவர் புகழ், செய்ய வேண்டிய சடங்கு ஆகியன பற்றி அமையும். இது கேதம் கேட்க வந்தோருக்குப் பயனாகவும் அமையும்.

'அவள் பறந்து போனாளே;'
'போனால் போகட்டும் போடா'
'வீடு வரை உறவு வீதி வரை மனைவி'
காடு வரை பிள்ளை
கடைசி வரை யாரோ'

இவ்வாறு கிராமங்களில் இழவு விழுந்த வீடுகளில் சாவுக் கொட்டுக்களுக்குப் பதில், கூலிக்கு மாரடிப்பு அடித்தாடும் பாடல்களுக்குப் பதில், உற்றார் உறவினர்ப் பெண்கள் ஆடிப் பாடும் பாடல்களுக்குப் பதில் வேறு சப்தங்கள் கேட்கின்றன. அவை பல ஊர்களுக்கும் கேட்கும்படியாகத் தமிழ்த் திரைப்படப் பாடல்கள் இறந்தவர் வீட்டுக் கூரை மீது, அல்லது அவர் வீட்டுப் பக்கத்திலுள்ள விளக்குத் தூண்களின் மீது அல்லது மரங்களின் மீது ஏறிக் கொண்டு கூவுகின்றன.

இந்த வகை மாற்றத்தின் விளைவு

கூலிக்கு மாரடிப்பு அடித்தாடும் கலைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. மட்டைக்குப்* போகும் கலைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இன்மையால் அவர்களிடமுள்ள கலைத் திறனைக் காட்டவோ, வளர்த்துக் கொள்ளவோ வாய்ப்பின்றி போய் விடுகிறது. ஊர் சொல்லப்போவோர் அவர்கள் தரும் நெல், அரிசி, காசு ஆகியவற்றைப் பெறுவர். இன்று தந்திச் செய்திகள் கேதம் சொல்லப் பறக்கின்றன.

△

விழாப் பேருந்துகள் கிராமியக் கலை நிகழ்ச்சிகளை ஏற்றிக் கொண்டு போன கதை:

எங்கள் பகுதியில் நாட்டரசன் கோட்டை கண்ணாத்தாள் கோயில், பாகம் பிரியாள் (தொண்டி அருகே) கோயில், தாயமங்கலம் மாரியம்மன் கோயில், திருவள்ளூர் சங்கையா கோயில், வெட்டுடையாள் காளி கோயில், மாரநாட்டுக் கருப்பணசாமி கோயில் ஆகியவற்றில் கோடை காலங்களில், அறுவடைக் காலங்களில் திருவிழாக்கள் அதி விமரிசையாக நடைபெறுவதுண்டு.

இக் கோயில்களுக்கு வேண்டுதல் செய்தவர்கள், வேண்டுதல் செய்யச் செல்வோர்கள், விழாவில் வேடிக்கை கண்டு சாமி

* மட்டை: இறந்த வீட்டுக்குக் கொட்டு மேளம் வாசிப்பது.

கும்பிட்டு வரச் செல்வோர்கள் ஆகியோர் மாட்டு வண்டிப் பயணத்திலும், கால்நடைப் பயணத்திலும், புளியோதரை சாதம் ஓலைப் பெட்டியில் வைத்துத்துணியால் கட்டிஉற்றார் உறவினருடன் செல்வதுண்டு. கோயிலுக்குச் செல்வோர் சாமிக்குச் செய்யவேண்டிய சடங்குகளை மேற் கொள்வதற்காக நையாண்டி இசைக் கலைஞர்களையும் கூடவே முழக்கிய வண்ணம் அழைத்துச் செல்வதுண்டு. அவர்கள் ஆடிப்பாடிக் கூட்டம் கூட்டமாய்ப் போவதைக் கண்டால் நாமும் அவர்கள் கூடவே செல்ல மனம் தூண்டும்.

கோழி, ஆடு, தானியங்கள் போன்ற காணிக்கைப் பொருட் களுடன், ஆரவாரத்துடன் பக்தர்கள் செல்லும் காட்சிகாணச் சுகம் தரும்.

திருவிழாக்களில் விடிய விடியக் கூத்துக்கள், ஆட்டங்கள் போன்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.சில ஊர்களிலிருந்து சிலம்புஆட்டம், ஒயிலாட்டம், ஒயில் கும்மி ஆட்டம், கர காட்டம் போன்ற பல்வேறு ஆட்டங்கள், வஸ்தாவிகள், அண்ணாவிகள் ஆகியோர் வழிப் பயிற்சி எடுத்துக் கொண்ட ஆடவர்கள் கோயில் வாசல்களில் வந்து அரங்கேற்றம் செய்து கொள்வர். உற்றார் உறவினர், பார்வையாளர்கள் ஆகியோரால் பாராட்டுப் பெறுவர். பாராட்டுச் சின்னங் களாக மாலை, வேட்டி, துண்டு ரூபாய் நோட்டுக்கள் ஆகியவை அமையும்,

எங்கள் ஊருக்கு கிராமத்துக்கு டவுன் பஸ் விட வேண்டும் என உண்ணாவிரதமும்,தர்ணாவும்,போராட்டமும்நிகழ்த்திக் கொண்டிருக்கும் கிராமத்து மக்கள் நகரிய கலாச்சாரங்களை யும், நாகரிக வீச்சுக்களையும் எதிர் கொண்ட பயணம் செய் கின்றனர்.

'தாயமங்கலம் முத்து மாரியம்மன் திருவிழாவை முன்னிட்டு பாண்டியன் போக்குவரத்துக் கழகம் சிறப்புப் பேருந்துகள் விடுகின்றது.

'கொல்லங்குடி காளி கோயில் திருவிழாவை முன்னிட்டு வள்ளி திருமணம் நாடகம்,குறிஞ்சி ஆர்க்கெஸ்ட்ரா வழங்கும் திரைப்பாடல்கள், டிஸ்கோ டான்ஸ் ஆகியகலைநிகழ்ச்சிகள் உள்ளன' என்று விழாக் குழுவினர் விளம்பரம் செய்கின்றனர்.

சினிமாப் பாட்டுக்கச்சேரிகள், சர்க்கஸ், சூதாட்ட விளை யாட்டுக்கள், வீடியோக்கருவிகள் வழியே விடிய விடியத் திரைப்படங்கள் என்றவாறு கலைநிகழ்ச்சிகள் நவீனத்துடன் திருவிழாக்களில் இடம் பெறுகின்றன.

கிராமியக் கலை நிகழ்ச்சிகள் இந்த நவீனக் கருவிகள் வழி வந்த கலை நிகழ்ச்சிகளிடம் இருந்து அந்நியப்பட்டுத் திருவிழாக்களில் இடம் பெறாமலே போகின்றன.

பி.ஆர்.சி. ஸ்பெசல் பஸ்கள் வருவோரை இறக்கிவிட்டு, வரிசையில் நிறுத்தி, ஊர் செல்வோரை உடன் ஏற்றிச் செல்கின்றன. திருவிழாக்கள் வழி வளர்க்கப்பட்ட கிராமிய மக்களின் கலாச்சாரம் பண்பாடு ஆகியவற்றையும் மண்ணில், மக்களில் விதைக்காமலேயே அவசரம் அவசரமாய்க் காசு சேர்க்கும் பிரதான நோக்கத்தில் சிறப்புப் பேருந்துகள் மக்களைத் தூக்கிக் கொண்டு பறக்கின்றன.

△

நாடோடிக் கலைஞர்கள் தொழிற் கலைஞர்களான கதை:

ஒரு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய பகுதிகளின் கிராமங்களில் வாழும் நையாண்டி இசைக் கலைஞர்கள், கரகாட்டக் கலைஞர்கள், மற்றுமுள்ள கிராமியக் கலைஞர்கள். ஊர் ஊராகச் சென்று கலா நிகழ்ச்சிகள் நிகழ்த்திட வாய்ப்புக் கேட்டதுண்டு.

'அடிக்கடி வெளையாமப் போயிடும். அப்புறம் என்ன செய்யுறது...அப்பவுலாம்கரகாட்டம் ஆடுறத்துக்கு ஆம்பளை ஆளுகளே பொம்பளை வேசம் போட்டுக்கிறது. இப்படியே நம்ப அம்பலாருகிட்டே சொல்லிட்டுப் பக்கத்து ஊரு, அடுத்த ஊருன்னு தொண்டி, நம்புதாளை, அறந்தாங்கி, அதிராம்பட்டினம், மல்லி பட்டினம் தஞ்சாவூருன்னு நாடோடி மாதிரிப் போயி ஊருப் பஞ்சாயத்துக் காரவுங்ககிட்டே தஞ்சம் சொல்லி ஆட்டம் ஆடிப் பொழக்கிறது.'

'அப்ப சம்பளம் எப்படிங்க?'

'சம்பளம்முன்னு பெரிசா இல்லே. ஆட்டம் ஆடுறபோது துண்டு விரிக்கிறதுண்டு.அதில நம்ம ஆட்டத்தைப் பார்த்துக் காசு போடுவாங்க. நேரா நேரம் ஊருக்குள் போயி அய்யா, சாமி, நாச்சியா அப்டின்னு கூப்பிட்டுக் கஞ்சி வாங்கிக் குடிக்கிறங்துக.'

'நீங்க கோப்பை அல்லது பிளேட்டு வச்சிருப்பீங்களா? அவுங்க உங்களுக்கு எதில சோறு போடுவாங்க?'

'பனை ஒலையில 'பட்டை' பிடிச்சு வச்சுக்கிட்டு நிப்போம். அவுங்க எட்டி நிண்டு போடுவாங்க! கொட்டாச்சியத் தண்ணிகிண்ணிகுடிக்க வச்சுக்கிறது. கொட்டாச்சி இல்லையின்னா கையில ஊத்தச் சொல்லி வாங்கிக் குடிப்போம். அவுங்க சட்டிபானைய, பாத்திரத்தைத் தொட்டுறக் கூடாது. செல ஊருகள்ள சத்திரம், பள்ளிக்கூடம், மாட்டுக் கொட்டகை அப்டின்னு இருக்கும் அதில போயி சமச்சுச்

சாப்பிட்டுக்கிறச் சொல்லி கேப்பை, வரகு, அரிசினு பஞ்சாயத்தாருக தருவாக'.

'அப்ப சம்பளமே இல்லையா?'

'15 ரூபாயிலிருந்து 25 ரூபாய் வரைக்கும் எங்க செட்டு' 10 பேர்கள் வரை கொண்ட குழுவுக்கு மொத்தமா தருவாக. நாங்க பகிர்ந்து எடுத்துக்கிருவோம்.'

கிராமியக் கலைஞர்கள் முன்னர் தருவதைப் பெற்றுக் கொள்ளும் சடங்கு முறைக் கலைஞர்களாக இருந்தனர். இன்று கூலி பேசி முன் பணம் பெற்றுக் கொண்டு கலை நிகழ்ச்சி நடத்தும் தொழிற் கலைஞர்களாக மாறியுள்ளனர். கலைஞர்கள் நாடோடிக் கலைஞர்களாகத் திரிந்த காலம் போய் இன்று நையாண்டி மேளக் கலைஞர்கள் சங்கம் வைத்துள்ளனர். கலைஞர்கள் இருப்பிடம் தேடி வந்து 'பாக்கு வெற்றிலை' வைத்து முன்பணம் அளித்து நிகழ்ச்சிக்கு அழைக்கும் வழக்கம் ஏற்பட்டுள்ளது.

விளம்பரம் தேடித்திரிந்த கலைஞர்களுக்கு இன்று நோட்டீஸ், ஒலிபெருக்கி. ஆகியவற்றின் வழியே விளம்பரம் தரப் படுகிறது... ஊர்ப் பெரியவர்களின் வீடுகளில் கூட கலைஞர்கள் உணவு உண்ணவும், உடை ஒப்பனை செய்து கொள்ளவும் இடமளிக்கப்படுகின்றன.

நையாண்டி செட்டில் வாசிக்கும் 'சால்ராக்' கலைஞருக்குக் கூட இருபத்தைந்திலிருந்து ஐம்பது வரை சம்பளம், மற்றுமுள்ள சன்மானங்கள், மதிப்புக்கள் ஆகியவை அளிக்கப் பெறுகின்றன.

மனித சக்தியும், எந்திர சக்தியும் இணைந்து வந்த பயணக்கதை:

இலங்கைக்குத் தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளாகவும், அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்குக் காட்டு மரங்கள் வெட்டும் தொழிலாளிகளாகவும் மலேசியா, சிங்கப்பூர் மொரிசியஸ் போன்ற பல நாடுகளுக்கு வெவ்வேறு வேலைகள் செய்யும் கூலித் தொழிலாளிகளாகவும் அன்று சாமானியப்பட்ட கருப்பு மனிதர்கள் சொற்ப விலைகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டனர். தொண்டி, தூத்துக்குடி. மண்டபம், இராமேஸ்வரம், தனுஷ்கோடி, நாகபட்டினம்

பேட்டி :பி. அருளாநந்து வயது 60- தேவசமுத்திரம், இளையாங்குடி வட்டாரம். மே 19, 1986..(பேட்டி கண்டவர், நூலாசிரியர்)

போன்ற கடற்கரைகளில் இந்த சனங்களை அள்ளிக் கொண்டு போகக் கப்பல்கள் காத்துக் கொண்டிருந்தன. அலைகள் வந்து போவதுபோலக் கப்பல்கள் வரவும் போகவுமாய் இருந்தன.

'வாறவகளையெல்லாம் வாங்கிக்கும்
மகராசன் சீமைக் கப்பல்'—...——

என்று இந்த பாமரமக்களின் பார்வைக்கும் உணர்வுக்கும் அவை பட்டன. மாட்டு வண்டிகளை மட்டுமே தரையில் பார்த்த இந்த மக்களுக்குக் கடலில் பயணம் செய்யவாய்ப்புத் தரும் கப்பல்கள் வாயார வாழ்த்துப் பெற்றமையில் வியப்பேதும் இல்லை.

தகாத்திலே தண்ணி வர
தந்திரமா ரோதை ஓட
இருக்கப் பறக்குதுல்ல.

—கருத்தப் பாண்டியா

இங்கிலீசுக்காரன் வண்டி' (கார்) கிராமத்துக்குள் வந்தது. கிராமம் கொண்டு கைகால்களை உதைத்து, வாய்வலிக்கச் சப்தம் போட்டு

'மாடுரெண்டும் மயில வெள்ள
மணிக ரெண்டும் தஞ்சாவூரு
குப்பி ரெண்டும் கும்பகோனம்
என்டக்குமுக்கு டிக்குத் தாளம்—இப்பக்
குலுங்குதடி சாலப் பாதை
ஏங்கடேக்கு டிக்குத்தாளம்,

என்று அலுப்புத் தீர இப்படிப்பாடி மாட்டு வண்டி ஓட்டிக் கொண்டு போவதைக் கண்டு பழகிப் போன பார்வைக்கு பெட்ரோல் (தண்ணீர்) கொண்டு தானே ஓடும் ஆங்கிலேயர் கார்வண்டிபுதுமையாகவே கிராமத்துமக்களுக்குத்தெரிந்தது.

அன்று, கிராமத்து மக்கள் இருட்டில் பயணம் செய்வது அரிது. உள்ளங்கை ரேகைகள் கண்களுக்குப் படும் பொழுது வரை தான் கணக்கு. எனவே 'ராப்பயணம் கூடாது', 'வௌக்கு வச்ச பயணம் கூடாது' என்ற வழக்குகள் இருந்தன.

இன்று, இருட்டையும் மின் விளக்குகளால் பகலாக்கி விடும் விஞ்ஞானம் வந்து விட்டது. தீப்பந்தங்கள் போய் பேட்டரித் துணையுடன் பட்டனைத் தட்டினால் விளக்கு என்ற நவீன நிலை வந்துவிட்டது.

இந்த இருட்டுக் குள்ளே
எளந்த முள்ளுக் காட்டுக்குள்ளே

சண்டாள ரயிலு வண்டி
சத்தம் போட்டுப் போகுதடி—

என்று இருட்டில், அதிலும் முள்ளுக் காட்டுக்குள் அதி வேகத்தில் பயணம் போகும் ரயில் விசித்திரமாய்த் தெரிந்த காலம் போனது. இன்று மனித உழைப்பும், மனித சிந்தனையில் உருவான எந்திர சக்தியும் இணைந்து கை கோர்த்து நிற்கின்ற நவீன காலம். இந்த நாகரிகங்களும், நவீனங்களும் பாமர மக்களிடையே பரவலாகப் போய்ச் சேர்கின்ற காலமாக மாறியுள்ளது. நவீன வாகனங்களின் வருகையைப் புதிர் போல் பார்த்தவர்கள் மத்தியில் இன்று நவீன கலாச்சாரங்களும், பழமையான வாழ்க்கை முறையில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் மத்தியில் கலந்திட்ட புதிய இயந்திர மயங்களின் பயன்பாடுகளும் இணைந்துள்ளன.

இதன் விளைவால், கலை. இலக்கியம். பண்பாடு. பழக்க வழக்கம், கலாச்சாரம்,வாழ்க்கை முறைபோன்ற பலவற்றில் பழமையுடன் புதுமை கலக்க நேரிட்டது.

கதை மாறி வந்த கதை:

நாட்டுப் புறக் கதைகளில், கதைப் பாடல்களில் இந்த நவீனத்தின் பாதிப்பினை அறிய முடிந்தது.

கிராமங்களின் மந்தைகளில். திண்ணைகளில்,மரத்தடிகளில் வரப்புகளில், வாய்க்கால்களில், கண்மாய்க்கரைகளில், காடுகளில் மேடுகளில் 'ஒரு ஊர்ல ஒரு ராசாவாம் அந்த ராசாவுக்கு...' என்றவாறு கதைகள், கதைப் பாடல்கள் தொடங்கும்.

அந்த ராசாவுக்கு...
ம்...ம்...
அந்த ராசாவுக்கு...
ம்......

எல்லாக் கதைகளிலும் ராசாவே:
எல்லாக் கதைகளுக்கும்.ம்: ...ம்... தான் 'தானானே' போடுவது மாதிரி 'பின்பாட்டு மரபு கொண்டவர்கள் தானே.

ஒரு மாற்றம்:

திடீரென காத்தவராயன்,மதுரை வீரன், போன்றகீழ்நிலைச் சாதியினரைச் சேர்ந்த மனிதர்களின் கதை. ராசாக் கதைகளுக்கு ஊடே கதைகளில் விரவி வரலாயின.†

† காத்தவராயன் கீழ்ச்சாதியான் பறையன் என்றே தன்னைச் சொல்லிக் கொள்ளுகிறான்.

1.அவனை வளர்த்தவன் ஓர் நாடி காவல் அதிகாரி. காத்தவராயன் ஒரு பிராமணப் பெண்ணைக் காதலித்தான். காத்தவராயன் கதைப் பாடல் (ப.ஆ) நா வானமாமலை:ப.2.

2.மதுரை வீரன் சக்கிலியர் குலத்தில் தோன்றி. பாளையக்காரர் பொம்மண நாய்க்கர் மகளை மணம் செய்து கொண்டான்.கதைப் பாடல்களும் சமூகமும். கோ. கேசவன்,ப.82.

இயந்திர மயங்களின் வருகை மின்சாரம், சினிமா, பஸ் என வந்த நவீனங்களின் தாக்கம், நகரங்களுக்கும் கிராமங்களுக் கும்சங்கலித் தொடர்புகள் இந்த வகைத் தொடர்புகளின் ஒன்றிணைப்புக்களின் விளைவு. மீண்டும் கதைகளில், கதைப்பாடல்களில் ஒரு மாற்றம்:

எதார்த்தங்கள், நாட்டு நடப்புக்கள்,கிராமியக்கதைகளிலும், கதைப் பாடல்களிலும் பேசப் பட்டன.

கதாநாயகன்,கதாநாயகி இல்லாத நடப்பியல் சம்பவங்கள், செய்திகள் கதைகளில் சொல்லப்பட்டன.

1. கருவாயத் தேவன் கதைப்பாடல்
2. மணிக்குறவன் கதைப் பாடல்
3. அரியலூர் ரயில் விபத்துக் கதைப் பாடல்
4. மைக்கேலம்மா கதைப் பாடல்
5. முத்துராமலிங்கத் தேவர் கதைப் பாடல்
6. தனுஷ்கோடி அழிந்த கதைப் பாடல்
7. சரஸ்வதி பள்ளி இடிந்த கதைப் பாடல்
8. கோனார் கதைப் பாடல்
9. வைகை வெள்ளத் துயர் கதைப் பாடல்
10. 'ஸ்கைலாப்' கதைப் பாடல்
11. பஞ்சு மில் கதைப் பாடல்

இந்த வகைக் கதைப் பாடல்கள்,கிராமியக் கலைஞர்களால், நையாண்டி இசைக் கலைஞர்களால், கரகாட்டம், குறவன் குறத்தி ஆட்டம், ராசா ராணி ஆட்டம் போன்ற பல்வேறு ஆட்டக் கலைஞர்களால், கோமாளிகளால் இன்று தெரு அரங்கில் (Street theatre) திறந்த வெளி அரங்கில் (Open Air theatre) பேசப் படுகின்றன. பாடப்படுகின்றன. இக் கதைப் பாடல்களில் நாம் வாழும் சமூகம், நாம் வாழும் வாழ்க்கை, நவீனம் நகரியம் ஆகியவை கலந்து காணப் படுவது நம்மால் அவதானிக்கத் தக்கதாகும்.

கதைச் சுருக்கங்கள்

கருவாயத் தேவன் கதை

கருவாயத் தேவன் என்பவன் மறவர் குலத்தில் பிறந்தவன். 'கவட்டை' வில் வைத்துப் பலரைத் துன்புறுத்தியவன். இந்தியப்பட்டாளத்தில் பணிபுரிந்த கருவாயத் தேவனது சொந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாத புரத்துக்கு அருகாமையிலுள்ள ஒரு கிராமம் ஆகும். மதுரை ஆர். வி மில்லிலும் பணியாற்றியுள்ளான். ஆர். வி, மில் தெருவில் குடியிருந்துள்ளான். ஏழை மக்களுக்காகவும் பாடுபட்டுள்ள கருவாயத்தேவனை போலிஸ் கைது செய்யப்

பலமுறை முயன்று, முயற்சி பலிக்காமல் துப்பாக்கி கொண்டு சுடப்பட்டான். 1951—52— இல் உருவான இக்கதைப்பாட மதுரை எஸ். பெருமாள் எழுதியுள்ளதாகக் குறிப்பு காணப் படுகிறது.

மணிக்குறவன் கதை:

1953—இல் 'மன்னன் மணிக்குறவன்' என்றழைக்கப்பட்ட மணிக்குறவன் கதைப்பாடல் மதுரை இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது.

கேடி மணிக்குறவன், போலீசாரால் அடிக்கடி சிறைச் சாலைக்கு அனுப்பப்பட்டவன்.

''வயக்காட்டில் வெட்டுப்பட்டார்
வல்லவர் என்று சொல்ல — அவுக
வம்சத்தாரு கொல்ல''

பல பெண்களின் கையைப் பிடித்து இழுத்த 'காவாலித்தன' மணிக்குறவன் அவனது சொந்தக்காரர்களாலேயே வெட்டுப்பட்டு இறந்துவிடுகிறான். அடக்கி ஒடுக்கப்பட்ட கீழ்நிலைச்சாதி மக்களின் தலைவனாகக் கருதப்பட்ட மணிக் குறவன் 'மன்னன்' என்றபெயர் பெற்றுத் தன் குலத்திற்கு தனது வீரத்தின்வழி பாதுகாப்புத் தேடிக் கொடுத்தவனாக மக்களிடையே நினைக்கப்பட்டு வருகிறான்.

அரியலூர் இரயில் விபத்துக் கதை:

திருச்சிக்கு அருகே உள்ள அரியலூரில் இரயில் விபத்து நடந்ததில் அளவில்லாத சேதம் அனைத்து மக்களின் இதயங்களில் பெருந்துயர் விளைவித்தது.

''பகவானை வணங்கச் சென்ற
பக்த கோடி அறுபது பேர்
நகைநட்டுச் சாமானோட
நதியில் விழுந்து மாண்டாரையா
ராமேஸ்வரம் பக்தி —அவுக
நடுவழியிலே பல்டி''

கொலை நடுங்குது சொல்ல/கொலை இருநூருக்கும் மேலே என்ற செய்திகள் அரியலூர் இரயில் விபத்துத்துயரினை நெஞ்சில் நிறுத்துகின்றன.

'கட கட வென்று சொல்லி
தாராளமா வந்த வண்டி
மட மட வென்று சொல்லி
பாலம் இடிஞ்சதால் பல்டி

என்று கதை அமைகிறது. 1957—இல் நடந்த இச் சம்பவத்தை கதைப்பாடலாக கிராமியக் கலை நிகழ்ச்சிகளில் கிராமியக்கலைஞர்களால் விரித்துப் பேசிப்பாடப்படுகின்றது. இக்கதைப்பாடல் டி. வி. பச்சையப்பன் அவர்களால் எழுதப் பட்டுள்ளது.

மைக்கேலம்மா கதை:

இராமநாதபுரம் மாவட்டத்தில் இளையான்குடி தாலுக்காவுக்குட்பட்ட ஒரு கிராமம் வடதிருக்கை. உடையார் இனத்தவர்கள் அதிகம் வாழும் இவ்வூரில் பள்ளர்களும் சிறு பான்மையினராக வாழ்கின்றனர். உடையார்கள் கிறித்துவ மதம் தழுவியதால் கீழ்நிலைச் சாதியினரான பள்ளர்களும் கிறித்துவ மதத்தில் இணைந்து வாழ்கின்றனர்.

கிறித்துவ மிஷினரிகள் தந்த வசதிகளுள் ஒன்று கல்வி வசதி. கல்வி நிலையத்தில் பயின்ற காலதத்தில ஒரு உடையார் இன இளைஞனும் பள்ளர் இனத்துப் பெண் மைக்கேலம்மாவும் காதல் கொள்கின்றனர். மைக்கேலம்மாவுக்குச் சொந்தத்தில் மண மகன் வந்ததால் மணம் பேசி முடிக்கப்படுகிறது. திரு மணத்திற்குச் சம்மதித்த மைக்கேலம்மா ஊர்ப்புறத்தே அமைந்த ஒரு குளத்திற்குதண்ணீர் எடுக்கவரும்போதுகாதல னால் கத்தியால் குத்தப்பட்டு இறந்து விடுகிறாள். மைக்கே லம்மா வழக்கு கோர்ட் வரை சென்றது. இச்சம்பவம் 1960—வது ஆண்டில் நிகழ்ந்தது. இச்செய்தி கதைப்பாடலாகச் சுற்று வட்டார வயற்காடுகளில் வேலை செய்யும் கூலி விவசாயிகளாலும், கிராமியக் கலைஞர்களாலும் இன்றளவும் பாடப்பட்டு வருகின்றது. இக்கதைப்பாடல் எழுதியது யார் எனச் சுட்டப்பெறவில்லை. இருப்பினும் வட்டார அங்கீகாரம் இக்கதைப்பாடலுக்குக் கிடைத்துள்ளது.

முத்துராமலிங்கத்தேவர் கதை:

'வெள்ளையரின் ஆதிக்கத்தை
விரட்டியடிக்க வேணுமின்னு
வீருகொண்ட தேவர் மகன் ஆவேசமாய் குதித்தார்
ஆங்கிலேயரை எதிர்த்தார்,'
மங்காத வீரமகன் மதுரை மகாலச்மி மில்லில்
பாட்டாளி துயரைக் கண்டு பக்குவமாய் நீதி கேட்டு
வெற்றி வாகை பெற்றார்,

சுதந்திரப் போராட்டத்திலும், ஏழைகள் துயரங்களிலும் பங்கெடுத்துக் கொண்ட முத்துராமலிங்கத் தேவர் 1963 ஆம் ஆண்டு இறக்கிறார். பல்வேறு அரசியல் தலைவர்கள், பல இனத்து மககள் அஞ்சலி செலுத்தினர் என்று கதைப்பாடல் விவரிக்கிறது. 'குற்றப்பரம்பரையினர்' என்று அரசால் முத்திரை குத்தப்பட்டுக் காவல் நிலையங்களில் கையொப்ப

மிட்டுச்செல்கின்ற நிலையை மாற்றியமைத்துக் கொடுக்கத் துணை நின்றவர் மறவர் குலத்து முத்துராமலிங்கத்தேவர் ஆவார். திருமணவீடு, இழவுவீடு, திருவிழா போன்ற பல நிகழ்வுகளிலும் இன்று தேவர் பாட்டு பாடப்பட்டு வருகிறது.

தனுஷ்கோடி அழிந்த கதை:

1964-இல் வங்காள விரிகுடாக்கடலிலிருந்து
'தென்னை மர உயரம் மக்களை அழிப்பதற்கு
சீறி வந்த கடலலையே—தனுஷ்கோடி
தெருவுக்குள்ளே பொங்கி நுழைய
... ...
தனுஷ்கோடியிலுள்ள பழங்காலக் கட்டிடமெல்லாம்
தரை மட்டமாக இடிய — அய்யய்யோ வென்று
சத்த மிட்டு மக்கள் மடிய — நிமிசத்திலே
சமுத்திர தேவியவள் கணக்கற்ற ஜனங்களைத்
தாவியே விழுங்கி முடிய'

கொடூரமான புயல் வீசியது. புண்ணியத்தலமாம் தனுஷ் கோடி தரைமட்டமானது. பாம்பன் பாலத்தில் ரயில் விழுந் தது. தமிழ் நாடெங்கும் புயலால் பெருத்த சேதங்கள். மக்களின் மனத்தைப்பாதித்த இச்செய்தியை கதைப்பாட லாகமதுரை டி.வி. பச்சையப்பன் வடித்துள்ளார். இக்கதைப் பாடல் கிராமியக்கலைஞர்களால் தமிழ் நாடெங்கும் கிராமியக்கலை நிகழ்ச்சிகளில் பாடப்பட்டு வருகின்றது. இக்கதையினூடேயே சரஸ்வதி பள்ளி இடிந்த செய்தியும், பள்ளப்பட்டியில் புயலினால் ரயில் விபத்து ஏற்பட்ட செய்தி யும் குறிப்பாகச் சொல்லப்படுவதையும் அறியமுடிகிறது.

சரஸ்வதி பள்ளி இடிந்த கதை:

சரஸ்வதி பள்ளிக்கூடத்தின் அருகே ரயில் தண்டவாளம் இருந்தது. ரயில் அடிக்கடிச் செல்லும் அதிர்வினாலும் புயல் காற்று (1964) சீற்றத்தாலும் பள்ளிக் கட்டிடம் விழுந்து நொறுங்கியது. முப்பத்தாறு மாணவிகள் இறந்து போயினர். மதுரையில் இந்தச் செய்தி காட்டுத் தீ போல பரவியது. நாடெங்கும் இச்செய்தி மக்கள் மனத்தைப் பாதித்திருந்தது.

'குண்டு விழுந்தது போல குபு குபு வென்று
பள்ளிக்கூடம் விழுக — பெண்களெல்லாம்
குய்யோ முறையென்றழுக — அன்று
கூண்டோடு மடிந்த உடம்பில் ரத்தந்தான்
குபு குபு வென்று ஒழுக — தரையில் ரத்தம்
குபு குபு வென்று ஒழுக'

என்று கதை முன்னும் பின்னும் காரண விளக்கங்களுடன் சொல்லப்படுகிறது.

கோனார் கதை:

ஆடுமாடு மேய்க்கும் இடையர் வாழ்க்கையினைச் சொல்லும் கதைப்பாடல் இதுவாகும்.

'காலையிலே மாலையிலே
பால் கறக்குற வேலை
கண்டு மாடு மேய்த்திடுவோம்
கண்ணபிரான் போலே
மாட்டைக் கொண்டு மேய்ப்பதற்கு
மாதச்சம்பளம் உண்டு
மாடு மந்தையிலே கண்டு போட்டா
வரும்படிகளும் உண்டு.'

மதுரை எஸ். பெருமாள் எழுதியுள்ள இந்தகோனார் கதைப் பாடல் இன்று மதுரை மாவட்டத்தில் பல இடங்களிலும், கிராமியக் கலைஞர்கள் குறிப்பாக—நையாண்டி இசைக் கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகளில் கோமாளிகளாலும் பாடப்படும் கதைப் பாடலாகக் கேட்க முடிகிறது.

வைகை வெள்ளத்துயர் கதை:

மதுரை வண்டியூரில் பெற்ற இக்கதைப் பாடல் ஜெயசீலி அம்மா அவர்களால் பாடப்பட்டதாகும். மேலூர் அருகே ஒரு கிராமத்தில் பிறந்து வளர்ந்து வைகையாற்றுக் கரையோரமுள்ள மதுரை வண்டியூரில் இவர் வசித்து வருகிறார். வெள்ளம் ஏற்பட்ட ஒரு மாதம் கழித்து இவரைச் சந்தித்த போது இப்பாடல் பெறப்பட்டது.

'அணைக்கட்டும் ஒடஞ்சு வர — நம்ம
அண்ணா நகர் அழிஞ்சு வர
அங்கா நகர் குடிசைகளெல்லாம் - ராசாக்கா - இப்ப
அடியோட போனதென்ன அய்யாக்கா
பொங்கிய தண்ணி வர
பெரிய (மதுரை நகர்) பாலம் இடிஞ்சுவர
அணைக்கட்டுப்பெருகி வர- ரசாக்கா— நம்ம
வண்டியூரை அமுக்கிடுச்சே தண்ணிக்குள்ளே -அய்யாக்கா,

என்று சொல்லி வரும் செய்திகளில் திருப்புவனக் காடுகளில் பிணம் கிடந்த செய்தியும், இராமநாதபுரம் கண்மாய்பெருகி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, மக்கள் அவதிப்பட்ட நேரத்தில் 'ராக்கெட்டு, (ஹெலிகாப்டர்) வழியே சோற்றுப் பொட்டலங்கள் போட்டு உதவி செய்த செய்தியும், வீடுகளையும்' மாடுகளையும் இழந்த மக்கள் மந்திரியிடமும் கலெக்டரிடமும் மனுகொடுத்தசெய்திகளும்இக்கதைப்பாடலில் வரிசையாகச் சொல்லப்படுகிறது. 1980-இல் நடந்த இந்த வெள்ளத்துயர் கதைப்பாடல் திருப்புவனம், மானாமதுரை, இராமநாதபுரம் ஆகிய பல இடங்களில் எல்லாம் பாடப்பட்டு வருகிறது,

ஸ்கைலாப் கதைப் பாடல்-

1981—இல் மதுரையில் 'ஸ்கைலாப்' விழும் என்று உலக நாட்டுப் பத்திரிக்கைகள் குறித்திருந்தன. மதுரையில் வீற்றிருக்கும மீனாட்சியம்மனை மக்கள் வேண்டி நின்றனர். பள்ளிகள், கல்லூரிகள் விடுப்பு விட்டன. மக்கள் அடைந்த பீதி உணர்வுகளின் கோர்வை ஸ்கைலாப் கதையில் கூறப் படுகிறது. மக்களின் உளவியல் உணர்வினை இது போன்ற கதைப்பாடல்கள் வழி உணர முடிகிறது.

வானத்திலே பறக்கவிடப்பட்ட விண்வெளிக்கப்பல் ஸ்கைலாப் பில் பழுது ஏற்பட்டு இந்தியாவில் தென்னாட்டில் மதுரையில் விழப்போவதாகச் செய்திகள் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் ஆகியவை வழிவெளியிடப்பட்டு பரபரப்பு ஏற்பட்டாலும் கடைசியில் அது கடலில் விழஏற்பாடு செய்யப் பட்டது.

வண்டியூர் ஜெயசீலி அம்மாள் பாடிய இக்கதைப்பாடல் இன்று கரகாட்டக்கலைஞர்களால் பாடப்பட்டு வருகிறது.

பஞ்சுமில் கதைப் பாடல்:

மதுரை ஆர்.வி.மில்லில் வேலை பார்க்கும் தொழிலாளர் களின் வாழ்க்கைக் கதையினைச் சித்தரிக்கிறது இந்த பஞ்சுமில் கதைப்பாடல். 'அணாக் கணக்குக் காலம் என்பது ஐம்பதுகளில் புழக்கத்திலிருந்தது. இருப்பினும் இன்றும்பஞ் மில் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையில் முன்னேற்றம் இல்லாதிருக்கிறது.

'பஞ்சாபீசுக்காக வந்து
பஞ்சு போலப் பறக்குது— நாங்க
பறக்கப் பறக்க பாடுப்பட்டு
பாதி ஒடம்பாயிருக்குது'

என்று பஞ்சுமில் கதைப்பாடலில் அவர்தம் வாழ்க்கை காட்டப்படுகிறது.

காலையில் எழுந்து மில்லுக்கு அவசரமாக நேரம் தவறாது சென்று, மேஸ்திரியிடம் வணக்கமிட்டு, நுணுக்கமான வேலையை எட்டு மணி நேரம் செய்து 7 மாததைத எதிர் நோக்கி நடந்து வாழும் பஞ்சுமில் தொழிலாளியின் கதை படிக்கவும், பாடலைக் கேட்கவும் மனம் வருந்துகிறது.

கதைப்பாடல்களின் பொதுத்தன்மைகள்

கதைப்பாடல்களைப் பாடும் தொழிற் கலைஞர்களைக் கொண்டும், கதைப் பாடல்களின் போக்குகள் கொண்டும்,

கதைப்பாடல்கள் பெற்றுள்ள வட்டார அங்கீகாரம் கொண்டும் கதைப்பாடல்களில் பொதுவான தன்மைகளை அறியலாம்.

கதைப்பாடல்களின் சந்த அமைப்புக்கள்:

கிடைத்துள்ள (11) பதினோரு கதைப்பாடல்களில் சில ஒரே சந்த அமைப்புக் (மெட்டு) களைக் கொண்டுள்ளன. மணிக் குறவன் கதைப்பாடல், அரியலூர் ரயில் விபத்துக் கதைப் பாடல், முத்துராமலிங்கத் தேவர் கதைப்பாடல், ஆகியவை யாவும் ஒரே வகைச் சந்த அமைப்புக்களைக் கொண்டு விளங் குகின்றன. தனுஷ்கோடி அழிந்த கதைப்பாடல், சரஸ்வதி பள்ளிக்கூடம் இடிந்தகதைப்பாடல், ஸ்கைலாப் கதைப்பாடல் ஆகியன யாவும ஒரே வகைச் சந்தத்தைக் கொண்டுள்ளன. கோனார் கதைப்பாடலும், பஞ்சுமில் கதைப்பாடலும் ஒரே வகையான தெம்மாங்கு மெட்டினைச் சேர்ந்துள்ளன. மைக் கேலம்மா கதைப்பாடல், வைகை வெள்ளத்துயர் கதைப் பாடல், கருவாயத்தேவன் கதைப்பாடல் ஆகியனயாவும் தனித்தனி மெட்டுக்களைக் கொண்டுள்ளன,

நபர்களின் கதைப் பாடல்கள், சம்பவங்களின் கதைப்பாடல் கள் என இருவகையினதாகப் பிரித்துக் காண்போமாகில் சம்பவங்களின கதைப்பாடல்களில் அமைந்துள்ள சந்த அமைப்புக்கள் மனதை நெகிழும்படியாக உள்ளன. ஒப்பாரி மெட்டினை ஒட்டி 'இரங்கல்' உணர்வினைக் கூட்டித் தருவ தாக அமைகின்ற போக்கினை இசைத்துப்பார்த்து உணரலாம்.

நையாண்டி இசை நிகழ்ச்சிகளிலும் மதுரையில் நடைபெறும் காமன் பண்டிகை நிகழ்ச்சிகளிலும் இக்கதைப்பாடல்களின் மெட்டுக்கள் இன்றளவும் இசைக்கப்பட்டு வருகின்றன.

மதுரை மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் (அரியலூர் ரயில் விபத்துக்கதைப்பாடல் தவிர) நடைபெற்ற நிகழ்ச்சிகளின் அடிப்படையில் இக்கதைப்பாடல்கள் மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டத்தைச் சேர்ந்தவர்களால் இட்டுக்கட்டப்பட்டுள்ளன. எனவே இம்மாவட்டங்களில் விளங்கும் நாட்டுப்புறஇசை(Style)நடைகளில் கதைப்பாடல் களில் சந்தங்களும் அமைந்துள்ளன, ஒரு வட்டாரத்தில் கலை இலக்கியத்தின் தாக்கங்கள் அதே வட்டாரத்தின் வேறு கலை இலக்கியங்களிலும் படிவது இயல்பு என்பதனை இக்கதைப்பாடல்களின் சந்த அமைப்புகள் வழி உணர முடிகிறது.

கதைக்களங்கள்:

கருவாயத்தேவன் இராமநாதபுரத்தருகே பிறந்திருப்பினும்

கருவாயத்தேவன் கதை மதுரை, சோழவந்தான் ஆகிய பகுதிகளில் நிகழ்ந்துள்ளது.

'மதுரை திடீர் நகராம் இருப்பு...
சொந்த ஊரு மதுரையிலே
சுற்றி வரும் ஊர்கோலமாம்

மதுரை டி.வி.எஸ். டிரைவரை வெட்டியவனும், காசிலும், கலகத்திலும், கேசிலும் பெண்களை இழுப்பதிலும் கை தேர்ந்தவனுமான மணிக்குறவன் மேலே காட்டியுள்ள பாடல்வரிகளின்படி மதுரை நகரும், மதுரைப்புற (Slum) நகர்ப்பகுதிகளும் வசித்த இடங்களாகும், மணிக்குறவனது கதை நிகழ்வுகளும் இங்கேயே நடைபெற்றுள்ளன.

திருச்சிக்கு அருகே கள்ளகம் எனும் இடத்தினருகேயுள்ள அரியலூரில் ரயில் விபத்து நிகழ்ந்துள்ளது. மதுரை எஸ். பெருமாள் பாடிய இக்கதைப்பாடலில் சொல்லப்பட்ட கதை நிகழ்வு நடந்தது அரியலூர் ஆகும். மதுரை மாவட்ட வட்டார வழக்குகள் அரியலூர் (திருச்சி) கதையில் இடம் பெற்றுள்ளது. மேலும் மதுரை மாவட்ட வட்டாரச் சந்தத் (தெம்மாங்கு மெட்டு) தில் கதைப்பாடல் அமைந்துள்ளது.

மைக்கேலம்மா கதை இராமநாதபுரம் மாவட்டம், இளையான்குடி வட்டத்தில் கிளாஞ்சனை என்ற ஊர் அருகே உள்ள உதயனூர் விராதகண்டனில் நடந்துள்ளது.ஏசு என்ற உடையார் இன இளைஞன் தான் காலித்த தாழ்த்தப்பட்ட பள்ளர் கிறித்துவப் பெண் தனது முறைப் பையனுக்கு வாழ்க்கைப்படச் சம்மதித்துத் தன்னை மறந்து விட்டதால் கொலை செய்தான். இக்கொலை ஊர்ப்புறத்தே அமைந்த ஒரு குளத்துக்கரையோரம் நடைபெற்றுள்ளது.

தமிழகமெங்கும் அறிமுகமான முத்துராமலிங்கத் தேவர் மதுரையில் இறந்தார். அவரது சடலம் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பசும்பொன்னில் அடக்கம் செய்விக்கப் பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தென்கோடியிலிருக்கும் இராமேசுவரத்தருகே இருந்தது தனுஷ்கோடி. 1964—இல் அழிந்துபட்ட தனுஷ்கோடிபற்றிய இக்கதைப்பாடல் மதுரை இராமநாதபுரம் ஆகிய வட்டாரச் சொல்லாக்கங்களாலும், சந்தங்களாலும் மதுரை டி. வி. பச்சையப்பனால் எழுதப் பட்டுள்ளது.

சரஸ்வதி பள்ளிக்கூடம் இடிந்த கதைப்பாடலும் 1964—இல் புயல் கொடுமையால் உருவாக்கப்பட்டதாகும். மதுரையில் நிகழ்ந்த இச்சம்பவத்தை மதுரை டி. வி. பச்சையப்பன் கிராமியக்கலைஞர்கள் கூத்துக்களில் பாடிக்கொள்ள வேண்டி எழுதியுள்ளார்.

கோனார் கதைப்பாடல், ராசா ராணி ஆட்டம், குறவன் குறத்தி ஆட்டம், கரகாட்டம் போன்ற கிராமிய ஆட்டங்களிலும் கூத்துக்களிலும் கிராமியக்கலைஞர்களால் பாடப் படுகின்றது. மதுரை வடபழஞ்சி சந்தானம் பாடிய இக்கதைப் பாடல் தமிழகத்தின் ஏனைய மாவட்டங்களுக்கும் பொருந்துவதாகவே அமைகிறது. மதுரை எஸ். பெருமாள் எழுதிய இக்கதை மதுரை கிராமங்களில் ஆடு மாடு மேய்ப்போரைச் சுட்டுவதாக அறிந்தாலும் தமிழகக் கிராமங்கள் அனைத்திற்கும் பொருத்தமாகவே படுகிறது.

வைகையில் வெள்ளம் வரும் பொழுதெல்லாம் மதுரை வைகையோரம் குடிசைகள் போட்டு வாழும் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். குறவன் குறத்தி ஆட்டத்தில் பாடப்பட்டு வரும் இக்கதைப்பாடல் சம்பவம் நிகழ்ந்தது மதுரைவைகைக் கரையோரங்களிலும், இராமநாதபுர மாவட்டத்தில் திருப்புவனம் தொடங்கி இராமநாதபுரக் கண்மாய்கள் உடைந்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட பகுதிகளிலும் ஆகும்.

1981-இல் 'ஸ்கைலாப்' மதுரையில் விழும் என்றும் இதனால் மக்கள் பாதிக்கப்படுவர் என்றும் உலக நாட்டுப் பத்திரிகைகள் கூறின. ஸ்கைலாப் விண்வெளிக்கப்பல் விழுந்தது அரேபியக்கடலில். ஆனாலும் மதுரை மக்களிடம் ஏற்பட்ட உணர்வுகளின் வெளிப்பாடுகள் இக்கதைப்பாடலில் சொல்லப்பட்டுள்ளது.

'என்னென்ன இஞ்சினு
ராக்கெட் செய்துமே—அந்தப்புரத்திலே
எங்கும் பறந்ததைய்யா
மக்களெல்லாம் ஏங்கித் துடிச்சதைய்யா
நம்ம மீனாட்சி பட்டணம் விழுதுமுன்னமே
பேப்பரில் வந்ததைய்யா
உலகநாடு பேப்பரில் வந்ததைய்யா
மணிக்கணக்காய் பேப்பரைப்பார்த்து
மருத நடுங்குதச்சைய்யா'

என்று சொல்லும் கதை நிகழ்விடம் மதுரை ஆகும்.

ஆர் வி. மில் தொழிற்சாலை மதுரை நகரின் மத்தியிலுள்ளது. மதுரை ஆர். வி. மில் தொழிற்சாலையில் வேலைபார்க்கும் தொழிலாளர்களது பிரச்சினைகளைக் கோர்வையாக்கிச் சொல்லப்பட்ட பஞ்சுமில் கதைப்பாடல், அனைத்துபஞ்சுமில் தொழிலாளர் கதையோடும் ஒத்துப்போவதாகவே இருக்கிறது. மதுரை ஆர்.வி.மில்லில் பணி செய்த அனுபவத்தின் வெளிப்பாடாக எஸ். பெருமாள் எழுதிய கதைப்பாடல் அனைவரது உணர்வுகளின் வெளிப்பாடாக உள்ளது.

கதைக்களங்கள் (அரியலூர் தவிர) யாவும் மதுரை இராமநாதபுரம் மாவட்டங்களிலேயே அமைகின்றன. வேறு

மாவட்டங்களில் இது போன்ற கதைகள் நடந்திருப்பினும் இக்களங்களிலேயே இவை கிராமியக்கலைஞர்களால் பரப்பப் பட்டு வருகின்றன. இப்பகுதிகளில் வளர்வதற்கான வாய்ப்புகள் பெற்று சடங்குமுறைக் கலைஞர்கள் தொழிற்கலைஞர்களாகும் நிலை வேறு மாவட்டங்களில் குறைவு. நையாண்டி இசைக்கலைஞர்கள் எண்ணிக்கை மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் வாழும் எண்ணிக்கையை விடப் பிற மாவட்டங்களில் குறைவு என்பதும் இங்கு எண்ணுதற்குரியதாகும். மேலும் தொழில்முறைக்கலைஞர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இங்கு எஸ். பெருமாள், டி. வி. பச்சையப்பன், அண்ணாவிகள் (வாத்தியார்கள்) போன்றோர் கிராமங்களிலிருந்து நகர்ப்புறத்திற்கு வாழ்க்கையைத்தேடி வந்ததோடு நகரங்களில் கலைத்தொழில் வாய்ப்புகள் பெற வேண்டி வந்த கிராமியத் தொழிற்கலைஞர்களுடன் நல்லுறவும் கொண்டுள்ளனர்.

கதாநாயகர்கள்:

நபர்களின் கதைப்பாடல்கள், சம்பவங்களின் கதைப்பாடல்கள் என்று இருவகையினதாகக் கதைப்பாடல்களைப் பிரிக்கையில் நபர்களின் கதைப்பாடல்களில் மட்டுமேகதாநாயகர்களைப் பார்க்க நேரிடுகிறது. தமிழ் இலக்கியங்களில் காட்டப்படும் தன்னேரில்லாத்தலைவன், தன்னேரில்லாத்தலைவி என்பதிலிருந்து இந்த வகைக் கதைப்பாடல்களில் இடம் பெறும் கதாநாயகர்கள் வேறுபட்டுள்ளனர். சாதாரண வாழ்க்கையைக் கொண்டு வாழ்ந்தவர்கள், வாழ்க்கைத்தரத்தில் குறைந்தவர்கள், வாழ்க்கைத்தரம் குறைந்த மக்களாலேயே இவர்கள் பாடும் பாடல்கள் வழி நினைக்கப்படுகிறார்கள்.

கிடைத்த பதினோரு கதைப்பாடல்களில் 'கதாநாயகியை'ச் சுட்டி இடம் பெற்ற கதைப்பாடல் மைக்கேலம்மா என்ற தாழ்த்தப்பட்ட இனத்துப்பெண் கதையாகும். உயர்ந்த சாதி இளைஞன் (உடையார்) ஏசுவின் பெயர் இக்கதைப்பாடலில் இடம் பெற்றிருப்பினும் 'மைக்கேலம்மா' மீதே இரங்கல் உணர்வு மக்களால் தரப்படுவதைக் கதைப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. 'நல்லதங்காள்' கதைப்பாடல் போல 'மைக்கேலம்மா' பெயர் இக்கதைப்பாடலுக்கும்ஆகியுள்ளது.

கருவாயத்தேவன், பசும்பொன்முத்துராமலிங்கத்தேவர்ஆகிய இருவரும் இக்கதைப்பாடல்களில் கதாநாயகர்களாக இடம் பெற்றுள்ளனர். இவ்விருவரும் இன்று பிற்படுத்தப்பட்ட (மறவர்) வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவ்வினத்தார் அரசாட்சிக் காலத்தில் மறவர்களாக இருந்தவர்கள். காலப் போக்கில் இவர்கள் அரசினரால் 'குற்றப்பரம்பரையினர்' என முத்திரை குத்தப்பட்டனர். சமூக மதிப்புப்பெறவேண்டி

இச்சமூகத்திற்காகப் பாடுபட்டவர்களில் முத்துராமலிங்கத் தேவரே முதலில் நின்றவர் என்பதால் இவர் இன்றளவும் இவ்வினத்தாராலும் முக்குலத்தோராலும் நினைவுகொள்ளப் படுகின்றார். முக்குலத்தோர் இப்பகுதிகளிலேயே சமூக மதிப்புக்குறைந்தவர்களாக வாழ்கின்றனர். தம் இனத்துத் தலைவராக முத்துராமலிங்கத் தேவரைக்கொண்டாடு கின் றனர். மறவர் சமூகத்திற்குப் பாடுபடுவதற்கு அவரது அரசியல் நுழைவு துணையாக அமைந்தது.

இராமநாதபுர மாவட்டத்தில் பிறந்த கருவாயத் தேவன் மறவர் சமூகம் நினைக்கப்படுமளவிற்குப் பெயர் பெற்றிருப் பினும் முத்துராமலிங்கத்தேவர் அவர்களது அளவுக்கு கருவாயத்தேவன் சமூக சேவையில் ஈடுபட்டவனாகக் கதையில் காட்டப்பெறவில்லை.

சண்முகம் பிள்ளை, சங்கரலிங்க முதலியார், சீனிவாசக நாடார் என்று தங்கள் பெயர்களின் இறுதியில் தங்கள்இனப் பெயர்களை ஒட்டுச்சேர்ப்பது போல் தேவர்களும் தங்கள் பெயர்களுடன் தங்கள் இனப்பெயரையும் பெயரில் பின் ஒட்டாகச் சேர்த்துக்கொள்வது இன்று காண முடிகிறது. முத்துராமலிங்கத்தேவருக்குப் பிறகே பேச்சு வழக்குகளிலும் 'தேவர்' என்பதை இணைத்துக் கொள்கிறார்கள்.

''இதே போல தலைவனை இறைவனாக மதிப்பிடும் பிரபுத்துவ மதிப்பீடுகள், தலைவனுக்குத் தெய்வப் பாரம் பரியம் கூறுவது (ஐவர் ராசாக்கள் கதை)மன்னர்கள் அனை வரையும் நல்லவர்களாகக் காணுதல் (கட்டபொம்மன் கதைப் பாடல்) கதைத் தலைவர்களை மக்களிடமிருந்துவேறுபட்ட வீரர்களாகவும் அழகர்களாகவும் (வெள்ளைக்காரன் கதைப் பாடல்) சித்தரிக்கும் பாங்கு ஆகியவை நாட்டார் இலக்கியக் கோட்பாடுகளுடன் எந்த அளவிற்குப் பொருத்தம் என்பதும் கேள்விக்குரியதாகும். (கதைப்பாடல்களும் சமூகமும்— கோ.கேசவன் எழுதிய நூலுக்கு அ. மார்க்ஸ் தந்துள்ள முன்னுரையிலிருந்து, ப.18) என்ற கருத்துக்களிலிருந்து கிடைத்துள்ள நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் இடம்பெறும் கதாநாயகர்கள் தெய்வங்களாகவோ, மன்னர்களாகவோ காட்டப்பெறவில்லை. மாறாக வீரர்களாகவே காட்டப்படு கின்றனர். மேலும் இச்சமூக அமைப்புக்கு எதிர்ப்புக்குரல் தருவோராகச் சித்தரிக்கபபடுகின்றனர். வர்க்கச்சார்புடைய கதாநாயகர்கள் காட்டப்படுகின்றனர்.

கதைப்பாடல்களில் கதாநாயகர்களின்றி சம்பவங்களைச் சித்தரிக்கும் கதைப்பாடல்களில் கதாநாயகர்கள் காட்டப் பெறவில்லை.

மணிக்குறவன், கருவாயத்தேவன், ஆகியோர் வீரர்களாகவும் கேடிகளாகவும் காட்டப்படுகின்றனர். இவர்கள் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களாவர். (தேவர்குலம் முன்னர் குற்றப்பரம்

பறையினராகக் கருதப்பட்ட நிலையில் சமூக மதிப்புக் குறைந்தவர்களாகக் கருதப்பட்டனர்). ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து இக்கதாநாயகர்கள் ஒழுக்கக் குறைவுகள் உடையவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர்.

1947க்குப்பின் உருவாகியுள்ள இவ்வகைப்பாடல்களில் இவ்விதமான போர்க்குணம் கொண்ட கதாநாயகர்கள் ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து உருவாகிடக்காரணங்கள் கண்டறியும் பட்சத்தில் இச்சமூக அமைப்பில் இவ்விதமான கதாநாயகர்கள் உருவானமை ஆச்சரியப்படுவதற்கில்லை.

நாட்டுப்புறங்களில் கதைப்பாடல்கள் உயர்சாதியினரைக் கதாநாயகர்களாகக் கொண்டு விளங்கவில்லை.

நாட்டுப்புறங்களில் விளங்கும் கதைப்பாடல் நாயகர்கள் அதிகாரவர்க்கத்துடன் பகையுணர்வு கொண்டுள்ளவர்களாக உள்ளனர்.

கதைக் கருக்கள்

நாட்டுப்புறக்கதைப்பாடல்களில் கதைக்கருக்களை விளக்கும் போது கருவை விளக்கும் போக்கில் மோதலுக்குப்பிரதானத் தன்மையும், சமரசத்துக்குப் பிரதானமற்றத்தன்மையும் வழங்கப்படுகின்றன'' எனக்கூறுவார் டாக்டர்கோ.கேசவன். (நாட்டுப்புறவியல் ஒரு விளக்கம் (பக்கம் 33) முத்துப்பட்டன் கதையினை எடுத்து இவ்வாறு கூறும் இவரது கருத்து நாட்டுப்புறக்கதைப்பாடல்களில் பொதுவான கருத்தாகவும் கொள்ள வாய்ப்புண்டு.

கிடைத்துள்ள இந்தப்பதினோரு கதைப்பாடல்களின் சுருக்கமும் மேற்சொன்ன கருத்தோடு இயைபு பெறுகிறதா என இங்கு அறியலாம்.

'கவட்டை வில்லுக் கருவாயன் என்றுமே
கண்ட கருவாயன் பேச்சு—கேட்டுக்
காது வெடச்சுமே போச்சு— மிகக்
கலகங்களும் உண்டாச்சி— அந்தக்
கண் கண்ட தெய்வமாம் முனுசாமியுடைய
கருணையும் விலகிப் போச்சு'

கருவாயத்தேவன் கதைப்பாடலில் கூறப்படும் செய்தி இது. 'கலகங்கள்' செய்தவனுக்குக் கடவுள் கிருபையும் போய் விட்டது என்று கருவாயத்தேவன் கதையில் கூறப்படுகிறது.

மற்றொரு பெண்ணை இழுக்கப் பெற்ற
மாதா மனம் வெறுக்க
... ...
காந்தி சொன்னதை மறந்து
குடிச்ச கடைசி நாளாம் விருந்து

மணிக்குறவன் கதைப்பாடலில் காணும் செய்தி இது. அநியாயம் தொடர்ந்து செய்து காந்திபோதனையை மறந்ததால் மணிக்குறவன் அவனது வம்சத்தாராலேயே வெட்டுப் பட்டான். ரயில் பாலம் இடிந்ததால் ரயில் விழுந்தது. இராமேசுவரம் பக்தர்கள் உட்பட இறந்து போன பரிதாப செய்தியைப் பகிர்ந்து கொள்வதாக அரியலூர் ரயில் விபத்து கதைப் பாடலில் செய்தி அமைகிறது. ரயில் பாலம் இடிந்து அரசினர் கவனக்குறைவால் 200 கொலைகள் நடந்தது என்று கதைக்கரு அமைகிறது. சரஸ்வதி பள்ளிக்கூடம் இடிந்த கதைப்பாடலும் இதே போன்ற கருவையே கொண்டுள்ளது.

சாதிப்பாகுபாட்டினால் ஆண் பெண் காதலுறவு பாதிக்கப் படுகிறது. காத்தவராயன்கதை. மதுரைவீரன் கதைபோன்ற நாட்டுப்புறக்கதைப்பாடல்களில் உள்ள கருவைப் போன்று மைக்கேலம்மா ஏசு ஆகியோரின் காதல் வாழ்வு சாதியின் பேரால் துண்டிக்கப்படுகிறது.

இன்றைய சமூகத்தில் அங்கீகாரம் பெற வேண்டி சாதி, மதம் அரசியல் போன்ற சமூகக் கட்டுமானங்களில் தங்களை ஐக்கியப்படுத்திக்கொள்கின்றனர். சிவகங்கை. இராமநாதபுரம் மன்னர்கள் உட்பட பல அரசியல் தலைவர்கள், திரைப்படக் கலைஞர்கள் ஆகியோர் முத்துராமலிங்கத் தேவர் இறப்புச் சடங்கில் கலந்து தங்கள் இரங்கல்களை மக்களுக்குக்காட்டினர். மக்கள் மனங்களில் இடம்பிடித்தவர்க்கு மக்கள் சமூகச் சான்று வழங்குவர் என்று முத்துராமலிங்கத்தேவர் கதைப் பாடல் எடுத்துக் கூறுகிறது.

'நிலையற்ற வாழ்வை நம்பி நிகரில்லை என்று சொல்லி
நெஞ்சைத் தூக்கி கருவங்கொண்டு—திரிபவர்கள்
ரொம்பப்பேரு நாட்டிலே உண்டு— புயலடித்து
நிமிசத்திலே இத்தனை பேர் மொத்த மொத்தமாகக் கடல்
நீரிலே மடிந்தாரே இன்று'

என்று நிலையாமையைப்பெரிது படுத்துவதாக தனுஷ்கோடி அழிந்த கதைப்பாடலில்உள்ள கருத்தினைப் புரியமுடிகிறது. மனிதன் மனிதனை அடக்கியாளும் வர்க்க முரண்பாட்டை எதிர்த்துப்பின்னர் மனிதன் இயற்கையை எதிர்த்துப் போராடும் காலம் வரும் வரை வாழ்வை இப்படியேதான் பார்க்கத்தோன்றும். இயற்கையையும் எதிர்த்த மனிதனின் பல்வேறு கண்டுபிடிப்புக்களான இயந்திரக்கருவிகளால் போராடி உழைப்பின் மகத்துவம் அறியப்படும் சமூக அமைப்பில் இயற்கையை விட மனித சக்தியே போற்றி மதிக்கப்படும்.

எடையரோட பழக்கமுன்னு
எடுத்துனக்குச் சொன்னேன்
பாட்டன் பூட்டன் பேரனெல்லாம்
பட்டிமாடு மேய்த்தார்— எல்லாரும்
பால் கறந்த காசையெல்லாம்

பணமாகச் சேர்த்தார்
பூட்டி வைக்க பொட்டியில்லாம
போனதில்ல காசு— நாங்கப்
புத்தியில்லாமப் போனதனால்
பொழப்பு இப்படி ஆச்சு.

மேய்ச்சல் சமூகத்தை நினைவுபடுத்தும் 'இடையரது வாழ்க்கை' யில் முன்னேற்றமில்லை. இன்னும் புத்தியைக் கூர்மை செய்து கொள்ள வேண்டும். ஆழமான சிந்தனையே வாழ்வை அமைத்துக் கொடுக்கும் என்று கோனார் கதைப் பாடல் கூறுகிறது.

இந்திய நகரங்களின் ஓரங்களில் வாழும் வாழ்க்கைத் தரம் குறைந்த மனிதர்களின் வாழ்க்கைக்கு நித்தமும் சோதனை களே. குடித்தனமும், வாழும் குடிசைகளும் அடிக்கடி அரசு தரப்பினராலும் முதலாளிகளாலும் கூடவே இயற்கைச் சதிகளாலும் பாதிக்கப்படுகின்றன. அணைக்கட்டுகளின் நீர்உடைப்பால் பெருகிவருகின்றது,பாலங்கள்,சோலைகள், விளைச்சல்கள், மனித வாழ்க்கைகள் பாதிப்படைகின்றன.

சீனாவின் மஞ்சள் நதியால்சீனாவில் அடிக்கடி வெள்ளப் பெருக்கேற்பட்டது. தொழிலாளி வர்க்கம் ஆட்சியிலேறி யதும் சீனாவின் துயரம் என்றழைக்கப்பட்ட மஞ்சள் நதி மக்களின் கட்டுக்கோப்புக்குள் கொண்டுவரப்பட்டு இன்று அது மங்கல நதியாகியுள்ளது.

சோவியத் ஒன்றியத்தில் 'வால்கா நதி' அம்மக்களைக் கேட்டு அவர் தம் ஆணைப்படி வளைகின்றது, நிற்கின்றது, ஓடுகின்றது. நம் நாட்டில் மழை வந்தால் வெள்ளம். மழை யில்லையேல் வறட்சி.என்று இந்நிலைமை மாறுமோ அன்று வரை வைகை வெள்ளம், காவிரி வெள்ளம், பஞ்சாப் வெள் ளம் என வெள்ளங்கள் மக்களையும் மக்கள் வாழ்க்கைகளை யும் விழுங்கும். மதுரை வைகை வெள்ளம் மழை பெய்யும் காலந்தோறும் மக்களுக்கு இன்னல்கள்; பரந்த நாட்டில் குடியிருக்க வீடின்றிநதிக்கரையோரம் இன்னும் வாழ்க்கை நடத்துவோர்வாழ்க்கைக்குச்சோதனைகள்.அதனால் அரசின் கவனத்தை திருப்பும் நோக்கத்துடன்,

'முயற்சி எடுக்க வேணும்
முடிவு பண்ணிப் பார்க்கவேணும்
ஏழை படும் பாடுகளை
எவரிடமே கூறுவது - நம்ம
ராசாக்கா வாற நாள - ராசாக்கா; மக்கள்
அறிவிக்கணும் வார்த்தைகளை — அய்யாக்கா'

என்று விண்ணப்பக்குரல் வெளிப்படுகிறது.

இயந்திர சக்திகளைக்கொண்டு மனிதசக்திகளைக்குறைக்கும் முயற்சிகள் இன்று முதலாளித்துவ நாடுகளில் நடைபெற்று வருகின்றன. 'மனித சக்தியே வெல்லும்' என்று பெருமிதம் கொள்ளும் வகையில் நூதனவிஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களும் மனிதர்களால் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டும் வருகின்றன. 'ஸ்கைலாப்' 1981—இல் விண்வெளியில் மனித நல் வாழ்வுக்கான சோதனை முயற்சிகளில் ஒன்றாகப் பறக்க விடப்பட்டது. அது கோளாறு கண்டது. மதுரையில் விழப் போவதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் அரபிக்கடலில் விழச் செய்யப்பட்டது. சாதாரண மக்களின் உணர்வு வெளிப்பாடு களை உளவியல் ரீதியில் நாடி பிடித்துப்பார்க்க இந்த 'ஸ்கைலாப்' கதைப்பாடல் வாய்ப்பளிக்கிறது.

தொழிலாளர்களின் இக்கட்டான வாழ்க்கை நிலைகளை அவர்களது கதைப்பாடல் காட்டுகிறது.

'தீபாவளிக்குப் போனசு வாங்கி
வளத்தவளிடம் கொடுக்கவே - அந்த
சின்னப் பொண்ணக் கூட்டி வந்து
சீரு ஒன்றும் செய்யலே'

இன்றைய விலைவாசி நிலைகளுடன் வாங்கும் குறைந்த சம்பளங்களைக் கொண்டு வாழ்க்கையையே போராட்டமாகக் கொண்டு வாழ்கின்ற தொழிலாளர்களின் கூட்டுணர்வின் கூட்டுக்குரல்களை இன்று கேட்கமுடிகிறது.

'பொம்பளைய ஒறவு கூடாது
கெட்டுக் கீரை வித்தாலும்
போலீசுக் கார சிநேகம் கூடாது'

பெண்ணடிமைத்தனமும், போலீஸ் அராஜக உணர்வின் வெளிப்பாடான வார்த்தைகளும் வெளிப்படுவதை இங்கு அவதானிக்க முடிகிறது.

கதைப்பாடல்கள் மோதல், சமரசம் ஆகிய இரு அம்சங்களையும் கொண்டிருப்பதாகக் கூறுவர். கிடைத்துள்ள கதைப் பாடல்களில் 'மோதல்' என்ற ஒரு அம்சம் மிகுந்து காணப் படும் ஒரு போக்கினை அறியமுடிகிறது. இந்தஅம்சம். கதைப் பாடல்களிலிருந்து நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் வளர்ந் துள்ள நிலையெனக் கொள்ள இடமுண்டு. சுதந்திரம் பெற்ற தாகக் கூறப்படும் காலக்கட்டத்திற்குப்பிறகு உருவான நகர் சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் அதிகார வர்க்கத்தின் குறைகள், தவறான போக்குகள் ஆகியவை எதிர்ப்புக் குரல்களால் சித்தரிக்கப்படுகின்றன.

கதைப்பாடல்களில் அடிவரையறைகள்:

கிடைத்துள்ள கதைப்பாடல்களில் மைக்கேலம்மா கதைப்

பாடல் மட்டும் 252 அடிகளைக் கொண்டுள்ளது. அடுத்து தனுஷ்கோடி அழிந்த கதைப்பாடல் 120 அடிகளைக் கொண்டுள்ளது. மிகக்குறைந்த அடிகளைக்கொண்டதாக (45 அடிகள்) ஸ்கைலாப் கதைப்பாடல் விளங்குகிறது. கிடைத்துள்ள பாடல்களில் அந்தந்த கதைப்பாடல்களுக்கே உரிய மெட்டுடன் இசைத்துப்பாடும் போது மூன்று நிமிடங்க ளிலிருந்து ஐந்து நிமிடங்களுக்குள் பாடி முடிக்கப்பெறுவன வாக அமைகின்றன. இடையிடையே பாடல்களை நிறுத்தி விட்டு வசனம் பேசிப்பாடி முடிப்பது தொழிற்கலைஞர்களின் திறன்களின் அடிப்படையில் அமையும்.

மூன்று நிமிடங்களிலிருந்து ஐந்து நிமிடங்களுக்குள்ளாகக் (தனுஷ்கோடிப்பாடல் தவிர) கதைப்பாடல்கள் முடிவடை கின்றமைக்கான காரணம் காண்பது நன்று.

திரைப்படப்பாடல்கள் மூன்று நிமிடங்களிலிருந்து நான்கு நிமிடங்களுக்குள் பாடி முடிவதை நாம் இன்று அறிகிறோம். தொழிற்கலைஞர்கள் ஆட்டங்களில், கூத்துக்களில் பாடிக் கொள்வதற்காகவே இவ்வகைக்கதைப்பாடல்கள்பெருமாள், பச்சையப்பன் போன்றோர்களால் எழுதி வழங்கப்பட் டுள்ளன. தொழிற்கலைஞர்கள், சினிமா கலா ரசிகர்கள் மத்தியிலேயே தங்களது தொழில் திறன்களைக்காட்ட வேண்டியுள்ளது. ஐந்து நிமிடத்திற்குள்ளேயே கேட்டுக் கேட்டு ரசித்துப் பழக்கப்பட்ட சினிமா ரசிகர்கள் மத்தியில் கதைப்பாடல்கள் ஒவ்வொன்றும் மூன்று நிமிடத்திலிருந்து ஐந்து நிமிடத்திற்குள் பாடி முடிக்கப்பெறுவதாய் அமை கின்றன. வெகுநேரம் பாடி ரசிகர்களைச் சலிப்படையச் செய்யாதிருக்கும் நோக்கில் கதைப்பாடல்கள் நீண்ட அடிகளைக்கொண்டிராமல் அமைகின்றன.

கதைப்பாடல்களின் தொடக்க நிலைகள்:

'அய்யா' வாரும் சபையோர்களே
வாலிபத் தோழர்களே
வணக்கங்கள் பல கோடி * —ஜனங்களுக்கு
வரங்கொடுத்த தனுஷ்கோடி—நகரத்திலே
வஞ்சகப்புயலடிச்சஞ்சலத்தை சொல்லிவாறேன்
வண்ணத் தமிழ்க் கவிபாடி'

கல்வி பல சற்றுக் காசினியில்
கற்றுணர்ந்த சபையாரே—எந்தன்
கருணையுள்ள அம்மாமாரே—கொஞ்சம்
கவனமுடன் கேட்பீரே—வெடிக்
கருமருந்தால் சுடு பட்டகருவாயன் ‡

* தனுஷ்கோடி அழிந்த கதைப்பாடல்.

‡ கருவாயத் தேவன் கதைப்பாடல்.

கதையைச் சொல்லி வாறேன் பாரேன்.

பாண்டி நகரமாம் மதுரையில் நடந்த
பள்ளிக்கூடம் விட்த்து—மனமுருகும்
பயங்கரமான விபத்து—இந்த
பரிதாப வரலாற விரிவாகச் சொல்லி வாறேன்
பாடலாகத் தொகுத்து—அய்யா
பாடலாகத் தொகுத்து ††

கூட்டம் ரொம்பக் கூடியிருச்சு- நம்ம
கொறவன் கொறத்தி ஆட்டம் பார்க்க
நாடே தெரண்டிருச்சு தன்னானே—நம்ம
நல்லதொரு சேதி கேக்க—*

பெரியவரே சிறியவரே
பிரியமுள்ள சபையோர்களே
அரியலூர் ரயில் விபத்து
அதிசயத்தைச் சொல்லி வாறேன்
அளவில்லாத சேதம்— பலர்
அடைந்தாரைய்யா சேதம்‡‡

என்றவாறு கதைப்பாடல்களின் துவக்க நிலைகள் அமைகின்றன. சொல்ல வரும் கதை இன்னது என்று முன்னதாகவே குறிப்பாகச்சொல்லிவிடும் போக்குகளைக் காணமுடிகிறது. இதன் வழி பார்வையாளர்களை, ஒரு கதை சொல்லப்போறேன், அது இன்ன கதை, அது இப்படியான கதை' என்றவாறு ஒரு எதிர்பார்ப்பு நிலைக்குக் கொண்டு வரமுடிகிறது. கதை கேட்டுக்கதை கேட்டு வளர்ந்து வந்த பாரம்பரியமுள்ளவர்களிடம் 'ஒரு கதை' என்று சொல்லித் தொடங்கப் பெறுவதனால் கதை சொல்வோர் அல்லது பாடுவோர் ஆகியோருடன் கூடவே பயணம் செய்யும் வாய்ப்பு பார்வையாளர்களுக்கு ஏற்படுகிறது.

கதைப்பின்னல்கள்:

சிறு கதை, நாவல், நாடகம் போன்ற பல்வேறு கலை இலக்கிய வடிவங்களில் கதைப்பின்னல் என்பது முக்கியமான பங்கினை வகிக்கிறது. படைப்பின் சிறப்பினை கதைப் பின்னல் தீர்மானிக்கத் துணை செய்கிறது.

---

†† சரஸ்வதி பள்ளிக்கூடம் இடிந்த கதைப்பாடல்.
* வைகை வெள்ளத்துயர் கதைப்பாடல்
‡‡ அரியலூர் ரயில் விபத்துக்கதைப்பாடல்

சம்பவங்களின் கதைப்பாடல்களில் கதைப்பின்னல்கள் அமைந்துள்ளமையை விட நபர்களின் கதைப்பாடல்களில் கதைப்பின்னல்கள் சற்று சிறப்பாக அமைந்துள்ளன. கருவாயத்தேவனைப் போலீஸ் பிடிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளை இக்கதைப்பாடல் வரிகள் கூறுகின்றன. 14 பத்திகள் கொண்ட இக்கதைப்பாடல் வரிகளில் முதல் பத்தி சபையோரை விளித்து இன்ன கதை கூறப்போவதாகக்கூறு கிறது. இரண்டாவது மூன்றாவது பத்திகள் கருவாயத் தேவனை அறிமுகம் செய்விக்கின்றன. நானகாவது ஐந்தாவது பத்திகள் போலீஸ் தேடலையும் கருவாயத் தேவன் எச்சரிக்கையையும் கூறுகின்றன. ஆறாவது பத்தி கருவாயத்தேவனைப்பற்றியும் ஏழாவது பததி போலீஸ் கருவாயத்தேவனைத் தேடி அலைந்து கஷ்டப்பட்ட செய்தி யையும் கூறுகிறது. எட்டாவது பத்தி கருவாயத் தேவனுக்கு ஆபத்து வந்ததையும், ஒன்பதாவது பத்தி போலீசாரால் கருவாயன் பிடிபட்டதையும் ரிமாண்டில் வைக்கக் கூட்டிச் செல்லுகையில் தேவன் தப்பித்த செய்தியையும் கூறுகிறது.

கருவாயத் தேவனைத் தேடி பிடிக்க முடியாத போலீஸ்காரர் கள் சிலரது வேலை பறிபோன செய்தி பத்தாவது பத்தி கூறுகிறது. பதினொன்றாவது பத்தி கருவாயன பிடிபட்ட செய்தியைக் கூறுகிறது, கலகம் செய்த கருவாயனுக்குக் கடவுள் கிருபை இல்லாமல் போன செய்தி பாடலாசிரியர் குறிப்பு, கருவாயத்தேவன் குறிப்பு ஆகியன பற்றி பன்னிரண்டு, பதிமூன்று, பதினான்கு ஆகிய பத்திகள் காட்டுகின்றன.

இனி சம்பவங்களின் கதைப்பாடல் ஒன்றினைக் காணலாம். ஆறு பத்திகளில சொல்லப்பட்டுள்ளது 'ஸ்கைலாப்' கதைப் பாடல். பறந்து கொண்டிருந்த ஸ்கைலாப் ராக்கெட் அந்தப் புரத்திலிருந்து (ஆகாயம்) விழப்போகும் செய்தி அறிந்து மக்கள் நடுங்கினர். அறிவிக்கப்பட்ட நாள் நெருங்கவும் நாள் முழுதும் மக்களுக்கு உறக்கமில்லை; கவலையுற்றனர். மாலை முரசு செய்தி அறிந்து மதுரை மக்கள் மதுரை பூமியில் விழக்கூடாது என்று சொல்லி பூசை நடத்தினர். ராக்கெட் மீனாட்சி பட்டணத்தில விழப்போகும் செய்தி உலக நாட்டுப்பத்திரிகையில் வந்தது. மலிக்கணக்காகப் பேப்பரைப்பார்த்து மதுரை நடுங்கியது. பள்ளிகள் விடுமுறை யானதால் பிள்ளைகள் வீட்டுக்குச் சென்றன. பின்னர் அரபிக்கடலில் விழுமாறு செய்தனர், மக்கள் ஆனந்தம் கொண்டனர் என்று செய்திகள் கோர்வையாக வந்துள்ளன. கதைப்பின்னல்கள் கதைப்பாடல்களில் குறைவுபாகவே அமைகின்றன. சம்பவங்களில் கதைப்பாடல்களை விட நபர்கள் பற்றிய கதைப்பாடல்களில் கதைப்பின்னல்கள் சற்று வளர்ந்து காணப்படுகின்றன. நாட்டுப்புறக்கதைகளி லும் நாட்டுப்புறக்கதைப் பாடல்களிலும் கதைப்பினனல்கள் அமையும் விதங்களைத் தனித்துக்காண இடமுண்டு.

வட்டார வழக்குச் சொற்கள்:

அந்தந்த வட்டாரத்தின் செல்வாக்குகள் அந்தந்த வட்டாரத்தில் விளங்கும் கலை இலக்கியங்களில் படிவது இயல்பு. இக்கதைப்பாடல்களின் மெட்டுக்கள் அதாவது சந்த அமைப்புக்கள் அந்தந்த வட்டாரங்களில் ஏற்கெனவே பாடியுள்ள பாடல்களின் தெம்மாங்கு, சிந்து என்பன போன்ற இசை வகைகளின் தாக்கத்தில் அல்லது தழுவலில் உருவாக்கப்பட்டுள்ளமையினை முன்னர்க் கண்டுள்ளோம். இது போன்ற இசைக்குறிப்புக்களும் சந்த அமைப்புக்களும், பாடல்களில் இடம் பெறுகின்றன. இசைக்குறிப்புக்கள், சந்த அமைப்புக்கள் ஆகிய வற்றைக்கொண்டு ஒரு பாடல் எந்தப்பகுதியினைச் சேர்ந்தது என அறியலாம். வட்டார வழக்குச் சொற்களும் குறிப்பிட்ட வட்டாரங்களைக் கண்டு பிடிக்க உதவும்.

இக்கதைப்பாடல்களில் செவ்வியல் சொற்கள், ஆங்கிலச் சொற்கள் ஆகியவற்றைத் தங்கள் கதைப்பாடல்களில் பயன் படுத்திப்பாடும்போது அவை திரிபடைவதும், வட்டார வழக்குச் சொற்களுடன் பிணைந்து உச்சரிக்கப்படுவதும் அறியப்படுகின்றன.

கலை இலக்கியங்கள் நாட்டுப்புறச்சாயலை அல்லது அங்கீகாரத்தை எந்த அளவுக்குப் பெற்றுள்ளன என ஒருவாறு அறிய முடியும்.

தொழில் தொடர்பு, வாழ்க்கைத்தரக்குணம் கொண்டவை, வட்டாரக்குணம் கொண்டவை, வரலாற்றுத் தொடர் நிலைகள் கொண்டவை, ஆளும் வர்க்கக்கலாச்சார விழுமியங்களோடு மோதலைப் பிரதானமாகவும், சமரசத்தைப் பிரதானமற்றதாகவும் கொண்டுள்ளவைஎன்னும்முறைகளில் உரசிப்பார்த்து ஓரளவு நாட்டுப்புறவியல் தன்மையினை உணர முடியும் என கோ. கேசவன் தனது நாட்டுப்புறவியல் ஒரு விளக்கம் என்னும் (பக். 33.34) நூலில் விரித்துரைப்பார்.

'வட்டாரக் குணம்' என்பதில் வட்டார வழக்குச் சொற்களையும் உள்ளடக்கியதாகக் காணமுடியும். இக்கதைப்பாடல்களில் இடம் பெற்றுள்ள ரிமாண்டு, சட்டரஸ், பெயில் போன்ற வார்த்தைகள் ஆங்கிலச் சொற்கள் ஆகும், நாதம், பந்து சனங்கள், புகழ், போன்ற வார்த்தைகள் செவ்வியல் வார்த்தைகளாகும். இம்சை, சொகுசு போன்ற வார்த்தைகள் வடமொழிச்சாயல் பெற்றுளளன. பிற சொற்கள் வட்டார வழக்குச் சொற்களாக உள்ளன. பிறமொழிகளையும் உள்வாங்கிய நிலையில் வட்டார வழக்குச் சொற்களாக்கியுள்ளமையினை பின் இணைப்பில் காணலாம்.

கதைப்பாடல் பிரிவுகளும் கருத்துக்களும்.

1 புராணக்கதைப்பாடல்.

2 புராணச் சார்புக்கதைப்பாடல்.
3 தெய்வப்புனை கதைப்பாடல்.
4 சமூகக் கதைப்பாடல்.
5 வரலாற்றுக்கதைப்பாடல்

என நாட்டுப்புறக் கதைப்பாடல்களை ஐந்து வகையாகப் பிரித்துள்ளார் (கேசவன் கோ. நாட்டுப்புறவியல் ஒரு விளக்கம். ப. 45)

கிடைத்துள்ள 11 கதைப்பாடல்களும் சமூகக்கதைப்பாடல், வரலாற்றுக்கதைப்பாடல் என்னும் இரு பிரிவுகளிலேயே அடங்குவனவாக அமைகின்றன. சமூகம், வரலாறு ஆகிய இரண்டுடன் இணைந்த நிலையிலேயே கிடைத்த கதைப் பாடல் அனைத்தும் அடங்குகின்றன. அண்மைக்கால வரலாற்றுச் செய்திகளையும், சமூகத்தில் நடைபெறும் நடப்பியல் கருத்துக்களையும் உள்வாங்கிய நிலையில் பதினோரு கதைப்பாடல்களும் அமைந்துள்ளன. இக்கதைப் பாடல்களில் கிடைத்துள்ள மதிப்பீடுகளை இவ்வாறு வரையறை செய்யலாம்.

1. வாழ்க்கைத்தரம் குறைந்த மக்கள் படைத்தவை.
2. நாட்டுப்புறத் தொழிற்கலைஞர்களால் பாடப்படுபவை.
3. எழுதியவர் பெயர் கொண்டவை.
4. சம்பவங்களைக் கொண்டு காலம் அறியத்தக்கவை
5. நுகர்வோரைப்பொறுத்து செய்திகளை வெளிப் படுத்துவனவாக அமைபவை.
6. நடப்பியலைச் சமூகவியலோடும் வாழ்வியலோடும் வரலாற்றுத் தொடர்போடும் வெளிப்படுத்துபவை.
7. வட்டார குணம் கொண்டவை.
8. நாட்டுப்புறத்தன்மையும் நகர்ப்புறத்தன்மையும் கொண்டவை.

இனி இக்கதைப்பாடல்களில் 'நகர்சார்' தன்மையைக் காணலாம்.

நிகழ்விடங்கள்

கதைகளின் நிகழ்விடங்கள் நகர்ப்புறத்தைச் சார்ந்துள்ளன, கருவாயத்தேவன் கதை, மணிக்குறவன் கதை, முத்துராம லிங்கத்தேவர் கதை, சரஸ்வதி பள்ளிக்கூடம் இடிந்த கதை, வைகை வெள்ளத்துயர் கதை, ஸ்கைலாப் கதை. பஞ்சுமில் கதை ஆகியன மதுரை மாநகரிலும், அரியலூர் ரயில் விபத்து திருச்சி நகர்ப்புறத்தேயும் தனுஷ்கோடி அழிந்த கதை பாம்பன், இராமேஸ்வரம், தனுஷ்கோடி ஆகிய சுற்றுலாத்தல நகர்ப்புறங்களிலேயும், நிகழ்ந்துள்ளன. மைக்கேலம்மா கதையும், கோனார் கதையும் கிராமங்களை

நிகழ்விடமாகக் கொண்டு விளங்குகின்றன. கிடைத்துள்ள 11 கதைப்பாடல்களில் மைக்கேலம்மா கதைப்பாடல் கோனார் கதைப்பாடல் ஆகிய இருகதைப்பாடல்களைத் தவிர பிற 9 கதைப்பாடல்களும் நகர்ப்புறங்களையே தளங்களாகக்கொண்டு கதைக்களங்கள் அமைகின்றன.

பாடல்:

ஆசிரியர்களும் நாட்டுப்புறத் தொழில் முறைக்கலைஞர்களும்

மதுரை டி. வி. பச்சையப்பன், மதுரை எஸ். பெருமாள் கோனார் ஆகியோர் கிராமங்களிலிருந்து நகரங்களுக்குப் பிழைக்க வந்தவர்கள் (காண்க: தகவலாளர்களுடன் ஒரு சந்திப்பு) ஆவர். நகரங்களை நிகழ்விடங்களாகக் கொண்டமைந்த கதைப்பாடல்கள் பெரும்பாலும் பாடல் ஆசிரியர்களைக் கொண்டுள்ளன. கிராமங்களை நிகழ்விடமாகக் கொண்டமைந்த மைக்கேலம்மா கதைப்பாடல் பாடல் ஆசிரியரைக் கொண்டிருக்கவில்லை.

இக்கதைப்பாடல் ஆசிரியர்கள் கரகாட்டம், குறவன் குறத்தி ஆட்டம போன்ற கிராமிய ஆட்டக்கலைஞர்கள் வேண்டுகோளுக்கிணங்க இவை போன்ற கதைப்பாடல்களை எழுதிக் கொடுத்துள்ளனர். எழுதிக்கொடுத்த பாடல்களுக்குச் சன்மானம் அளிப்பது கலைஞர்களின் கடமையாகக் கொண்டுள்ளனர். இக்கதைப்பாடல்களில் ஆசிரியர்களை பார்வையாளர்கள் மத்தியில் கலைஞர்கள் வசனத்தாலும், கதைப்பாடல் வரிகளாலும் அதிவிமரிசையாக அறிமுகம் செய்விப்பதுண்டு.

கிராமியத் தொழிற்கலைஞர்கள் தொழில் வாய்ப்பு வேண்டிக் கிராமங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்குக் குடி பெயர்ந்துள்ளனர். மதுரை முனிச்சாலையின் வைகைக்கரையோரத்திலும், மதுரை அரசு மருத்துவமனை அருகில் உள்ள மதிச்சியத்திலும், (வைகைக்கரையோரம்) நாட்டுப்புறத் தொழிற்கலைஞர்கள் (முழுநேரம்) வாழ்கின்றனர். இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து குடிபெயர்ந்து தஞ்சாவூருக்குச் சென்றுள்ள நையாண்டி இசைத்தொழிற்கலைஞர்கள் ரெட்டிபாளையம் என்ற ஒருஊரில் (ஆற்றுப்பாசன ஓரப்பகுதி)வாழ்கின்றனர். பொதுவாக நாட்டுப்புறத்தொழிற் கலைஞர்கள் பாடும் கதைப்பாடல்கள் பல பச்சையப்பன், பெருமாள் ஆகியோர்களாலேயே எழுதப்பட்டுள்ளன, இவர்களது 'பாடல்களே எங்கும் விளங்குகிறது.

பாடுபொருள்கள்:

கதைப்பாடல்களில் பாடப்படும் பாடுபொருள்கள் மதுரையில் விழவிருந்த ஸ்கைலாப், மதுரை வைகைவெள்ளப்பெருக்கம்,

மதுரை பஞ்சு மில் கதை, மதுரை சரஸ்வதி பள்ளிக்கூட விபத்து.திருச்சி அரியலூர் ரயில்விபத்தும்,மதுரையில்இறந்து போன முத்துராமலிங்கத்தேவர் கதை, மதுரைத்திடீர் நகர் மணிக்குறவன்கதை, மதுரைச்சோழவந்தான் சினிமாதியேட் டரில்சினிமாப் பார்த்துக்கொண்டிருந்த கருவாயத்தேவன் பிடிபட்ட செய்தி அமைந்த கதைகள் நகரியக்கலாச்சாரங் களோடுதொடர்புடையனவாக விளங்குகின்றன.

கிறிஸ்துவச்சமயத்தைச் சேர்ந்த மைக்கேலம்மா கொலை வழக்குக்கதை கோர்ட்டுக்குச் சென்றது. கோனார் கதைப் பாடல் மதுரை எஸ்.பெருமாள் அவர்களால் எழுதப்பட் டுள்ளது.

'ஸ்கைலாப்' நகரத்தை நடுங்கச் செய்து மதுரை மீனாட்சிக்கு பூசை செய்ய வைத்தது. கூடவே அலுவலகங் களை விடுப்புக்குள்ளாக்கியது. வைகை வெள்ளம் மதுரை அண்ணாநகர், மதுரை மேம்பாலத்தை மூழ்கடித்தது. மக்களுக்கு கிறித்துவ மிசினரிகள் உதவின. முதல்வர். கலெக்டர் ஆகியோருக்குத் தந்திகள் பறந்தன. பஞ்சுமில் கதை நகரத் தொழிலாளர்களின்வாழ்க்கையைச்சித்தரித்தது. நகரியக்கலாச்சாரங்களுடன் கதைப்பாடல்களின்பாடுபொருள் கள் தொடர்புற்றுள்ளன.

வர்க்கச்சார்புகளும் வரலாற்றுத் தொடர்பு நிலைகளும்:

கிடைத்துள்ள 11 கதைப்பாடல்களும் சமூக வரலாற்றுத் தொடர்புடையனவாக உள்ளன.1950—லிருந்து1980—ஆம் வருடம் வரை நடந்துள்ள முக்கிய செய்திகள் (மக்களைப் பாதித்துள்ளவை) கதைப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

'நாட்டுப்புறக்கதைகள்' முதலாளியத்துக்கு முந்தைய சமூக அமைப்பில் உள்ள நிலப்பிரபுத்துவ மதிப்பீடுகளையே பெரும்பாலும் கொண்டுள்ளன. (கோ.—கேசவன் நாட்டுப்புற வியல் ஒரு விளக்கம்) விளக்குகின்றன. ஆனால் இந்தப் பதினோரு கதைப்பாடல்கள் நிலப்பிரபுத்துவமதிப்பீடுகளைச் சித்தரிப்பதோடு கூடவே நகர்ப்புற முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கோடு தொடர்பு உள்ளவையாக அமைந்துள்ளன.

வட்டார அங்கீகாரம்:

வட்டார குணம் கொண்ட இந்த நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் குறிப்பாக மதுரை, காமராசர் மாவட்டம், பசும்பொன் முத்து ராமலிங்கம் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், திரு

நெல்வேலி மாவட்டம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி, அண்ணா மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் விளங்கு கின்றன.

மைக்கேலம்மா கதைப்பாடல், இராமநாதபுரம் இளையான் குடி வட்டாரத்திலும், கோனார் கதைப்பாடல் மதுரை சோழ வந்தான், வடபழஞ்சி ஆகிய வட்டாரங்களிலும் கூலி விவ சாயத் தொழிலாளர்களால் வயற்காடுகளிலும், களத்து மேடு களிலும், வயல்களிலும், வரப்புகளிலும் இன்றளவும் ஆண் களாலும் பெண்களாலும் பாடக் கேட்க முடியும்.

நுகர்வோர்தளம் கிராமங்களிலேயே அதிகமாக இக்கதைப் பாடல்களுக்கு அமைகின்றன. வேறு இனத்தவர்களும் கூட அன்பளிப்பு அளித்து நாட்டுப்புறத் தொழிற்கலைஞர்களை நாட்டுப்புற நிகழ்ச்சிக் கலைகளினூடே பாட வேண்டுகின்ற நிலைகளையும் அறியமுடிகிறது, 'வட்டார அங்கீகாரம் நாட்டுப்புறவியல் அளவுக் கூறுகளில் ஒன்றாகும். இந்த அளவுக்கூறு இந்த நகர்சார் நாட்டுப்புறக்கதைப் பாடல் களுக்கு ஒத்துள்ளது என்று கூற முடிகிறது. நகரங்களிலும், கிராமங்களிலும் இந்த நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல் களுக்கு வரவேற்பு இருந்து வருகிறது.

நகர்சார் நாட்டுப்புறவியல் என்று சொல்லும்போது (Modernism) நவீன கலாச்சாரம் அல்லது நவீனமயம் கொண்டுள்ளமையினையும் நினைத்துப் பார்க்க வேண்டி யுள்ளது.

மேலை நாடுகளில் (Urban Folklore) நகர்சார் நாட்டுப்புற வியல் தொடங்கியதோடு அத்துறையில் பல ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நவீனம் என்பது நகர் மயமாக்கப்பட்ட நிலைகளின் அடித் தளத்திலிருந்து உருவான கலாச்சாரம் ஆகும். நவீனம் என் பதற்குக் காலம் இல்லை, ஒவ்வொரு காலகட்டத்திலும் நவீ னம் உருவாக்கப்படுவது இயல்பு. நகரியக்கலாச்சாரங்களின் பாதிப்புக்கள் நாட்டுப்புறங்களில் இன்று பல்வேறு வெகுசன ஊடகங்களின் வழியே திணிக்கப்பட்டு வருகின்றன.

அரசு நிர்வாகம் தம்மைப்பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத் துடன் எல்லா இடங்களுக்கும் சாலைப் போக்குவரத்துக் களையும், தொடர்புச்சாதன வசதிகளையும் கொண்டு விளங்குகிறது. இந்தவகையில் எல்லாக்கிராமங்களும் இன்று நகரங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன; தொடர்பு கொள்ள முனைகின்றன. இந்தச் சாலைகளும் இந்தத் தொடர்புச் சாதனங்களும் நகரியக் கலாச்சாரங்களை கிராமியக் கலாச்

சாரங்களுடன் கலந்து விட ஏதுவாகின்றன. கலப்பது என்பதை விட திணிப்பது என்றும் கூறலாம். ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின்மீது ஆதிக்கம் செலுத்துவது இயல்பே. நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் நகரியக்கலாச்சாரங்களும் நாட்டுப்புறக் கலாச்சாரங்களும் விரவியுள்ள விதம் அறிய முடியும்.

நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்களைக் கண்டுள்ள இப்பார்வை தொடக்கநிலையானதாகும். ஒவ்வொன்றுக்கும் ஒரு வளர்ச்சி உண்டு. அவ்வகையில் கதைப்பாடல்களிலிருந்து நகர்சார் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் என்ற நிலை வளர்ந்து உருவாக்கியுள்ளது. நாட்டுப்புறவியல் இன்று பரவலாக வளர்ந்து வரும் ஒரு துறையாக உள்ளது. இனி 'நகர்சார் நாட்டுப்புறவியல்' என்ற ஒரு தனித்துறை வளர வேண்டும். அப்போது நகர்சார் நாட்டுப்புறவியல் குறித்து பல்வேறு கோணங்களில் ஆய்வுகளும் வளரும்.

கருவாயத்தேவன் கதைப்பாடல்

கல்விபல கற்றுக் காசினியில் வாழும்
கற்றுணர்ந்த சபையோரே— எந்தன்
கருணையுள்ள அம்மாமாரே— கொஞ்சம்
கவனமுடன் கேட்பீரே— வெடி
கருமருந்தால் சுடு பட்ட கருவாயன்
கதையைச் சொல்லி வாறேன் பாரேன்.

பாரு கருவாயன் இராமநாதபுரம்
பக்கத்துக் கிராமத்தில் பிறந்தார்
பட்டாளத் திலேயுமே இருந்தார்— மதுரை
பாண்டிய மில்லிலும் இருந்தார்— ஏழையப்
பாதுகாக்க வென்று கடமையினாலே
பாங்குடனே மனம் துணிந்தார்.

தீரமுள்ள வீரசிங்கக் கருவாயன்
தேவர் குலத்திலே உதித்தார்
டி.வி.எஸ். டிரைவரை உதைத்தார்
ஜெயில் சூப்பிரண்டெண்டையும் அடித்தார்
தீங்கு வருமென்று தெரிஞ்சதனாலே
சிவில் கேசுமே எடுத்தார்.

உடனே பிடித்திட வேணுமென்று— போலீஸ்
உத்தரவும் கொடுத்தாரு— கருவாயன்
உண்மைகளுமே தெரிந்தாரு— இனி
ஒருகணம் கூட இங்கிருக்கக் கூடாதுன்னு
ஓட்டங்களும் பிடித்தாரு— கருவாயன்
ஓட்டங்களும் பிடித்தாரு.

கண்டிசனாகவே கவர்மண்டுக்காகவே
கருவாயத் தேவரும் பயந்து— தாலி
கட்டுன மனைவிய இழந்து— போலீசுக்
கண்ணுக்கு மறவா இருந்து— அந்தக்
காடுமேடல்லாம் ஒளிந்து திரிந்து
கண்ட மட்டுமே அலைந்தார்.

உண்டு கழித்து உறங்குவதெல்லாம்
ஊருக்கு அந்தப் புரமாம்—கருவாயன்
படுத்துறங்குவது தென்ன மரமாம்
உடல் வந்து கருப்பு நிறமாம்—இந்த
உலகத்திலே அவரைப் போல் ஊக்கம்
ஒருவருக்காயினும் வருமா.

கருவாயத் தேவரக் கண்டு பிடிக்கவே
போன வரெல்லாமே பாரு
கவட்டக் * கல்லடி பட்டாரு—பெருங்
கஷ்டத்துக்குள்ளானாரு
கவர்மண்ட் உத்தியோகம் வேணாம்னு சொல்லி
கசந்துமே சொன்னாரு.

அழகு மதுரை டவுனைச் சேர்ந்திட்ட
ஆர் வி. துரை மில்லு ரோடு—பக்கம்
அழகரடி கரிமேடு—நம்ம
அன்பன் கருவாயன் வீடு—அப்படி
அகசு மகசாக ‡ ஆத்துக்கு—அவருக்கு
ஆனதே அந்தக் கேடு.

நெடு நாளாகத் தேடி அலைந்தவர்கள்
லேசாகவே கண்டு பிடித்தார்
கலெக்டர் நேரிலே கண்டு விசாரித்தார்—கேச
ரெண்டு நாளாக விசாரித்தார்—திரும்பி
டிமாண்டுக்குப் போகும் போது
லேசாக ஏப்பிச்சுத் † தப்பிச்சார்.

பூமியெங்குமே புகழும் பெத்திட்ட
பொல்லாத கருவாயனாலே—பாவம்
போனது போலிசு வேலை—கருவாயனப்
போக்க வேணுமென்று
ஒவ்வொரு ஊரெல்லாம்
ஓடி அலஞ்சதனாலே

சோழவந்தான் ஒரு சினிமாக் கொட்டகையில்
சோபாவிலே சாஞ்சு இருந்தார்— போலிசு
சூழ்ந்து வருவது தெரிந்தார்— சூத்திச்
சுவரையும் தாண்டியே பறிந்தார்
முள்ளு தருக்குன்னு குத்தியும் ஓட முடியாம
சூடு பட்டுமே இறந்தார்.

---

* கவட்டை: மாட்டுக் கொம்பு போல் உள்ள ஒரு குச்சியின் இரு முனைகளிலும் ரப்பரால் கட்டபபட்டு சிறு கல் வைத்து எய்யும் ஒருவகைக் கருவி. வில் அம்புக் கருவியினைப் போன்று மிருகம், பறவை ஆகியவற்றை வேட்டையாடப் பயன்படும் கருவி

‡ அகசு மகசாகி: கவனமில்லாமல்.

† ஏப்பிச்சு: ஏய்த்தல்.

கவட்டை வில்லுக் கருவாயன் என்றுமே
கண்ட கருவாயன் பேச்சு— கேட்டுக்
காது வெடச்சுமே‡ போச்சு—மிகக்
கலக்கங்களும் உண்டாச்சு—அந்தக்
கண் கண்ட தெய்வமாம் முனுசாமியுடைய
கருணையும் விலகிப் போச்சு

புவியினுடைய கெவிலி † அடிக்குது
புகழும் மதுரை யோரம்— கருவாயன்
பேரு விளங்குது சோராம்
புண்ணியராம் குரு எஸ் பெருமாள்— கவி
பூத்துச் சொலிக்குது சாரம்

சுட்ட கருவாயன் உயிரோடிருப்பதாய்ச்
சொல்லுகிறார் சில பேரு— அவர்
சுத்தப் பயித்தியக் காரரு— அவர்
சொப்பனம் கண்டிருப்பாரு— இதச்
சொல்லவும் கூடாது போலிசுகண்டாலும்
சும்மா விட மாட்டாரு.

---

‡ வெடச்சு: விடைத்தல், லேசாக விறைத்துப் புடைப்பது.
† கெவிலி: பல்லியில் ஒரு வகை இனம். விடுகளில் இது சப்தமிட்டால் நல்லது கெட்டது எனச் சகுனம் பார்ப்பார்கள்.

மணிக் குறவன் கதைப் பாட்டு

அண்ணம் மாரே தம்பி மாரே
அருமையுள்ள அய்யாமாரே
மன்னன் மனிக்குறவன்
மாண்டசேதியச் சொல்லி வாறேன்
மக்களப் போல நெனச்சு— நீங்க
மன்னிக்கனும் பிழை பொறுத்து

சாதியிலே குறக்குலமாம்
சண்டியர் என்ற விளம்பரமாம்
ஆதியிலே அவனப் போல
அட்டகாசம் செஞ்சதிலே
அம்பத்தி மூனாம் வருசம்— அவரு
அழிந்தார் அப்பிய மாசம்

இருபத்தி ஒன்பதாம் தேதி
இறந்த மணிக்கொறவன் சேதி
அறுபத்தோரு நாழிகையில்
அண்டமெல்லாம்தெரிஞ்சதைய்யா
அன்று சனிக் கெழமை மணிக்கு
ஆயுதக் குத்தாம் பலமாம்

காசில சிறந்தவனாம்
கலகத்திலே மிகுந்தவனாம்
கேசுக்கு அகப்பட்டாலும்
கேடி மணிக் கொறவன் தான்டி
கேளுங்க தலவிதிய— கேசு
முடியுமுன்னே விதிய

சிட்டி பஸ் ஓட்டி வந்த
டி.வி.எஸ். டிரைவரையும்
எட்டி நின்று வெட்டி விட்டு
ஓடிவிட்டார் மனிக்கொறவன்
ஏழு வருசத்தீர்ப்பு—சர்ச்சு (ஜட்ஜ்)
எழுதி விட்டார் குறிப்பு

கீழ்கோர்ட்டு தாலூ காவில்
திரவில்லை என்று எண்ணி
ஐக்கோர்ட்டு தானும் சென்று
அப்பில செய்து அவன் தாயாரு
ஐநூறு ருபாய் கட்டி மகனை
அழைத்து வந்தார் வீட்டுக்கு

வந்து பத்து நாளையிலே
வரலாறத்தான கேளுங்கையா
இந்து மகான் சபைக் கொடியை
ஏற்றி வைத்துப் பறக்க விட்டான்
ஏரப்பிளேன் போலே சைக்கிளிலே
ஏறி வந்தான் மேலே

காவாலித் தனத்தினாலே
கண்டபடித் திரிந்ததாலே
தீவாளிக் கொண்டாட்டத்தை
தீவிரமாய் நடத்தி விட்டார்
தீந்து போச்சுங்க விரப்பு - மதுரை
திடீர் நகரமாம் இருப்பு

சனிக்கிழமை சாயந்தரம்
சாராயக் குடிபோதை நேரம்
மனிக்கொறவன் தானும் சென்று
மனதிலே கபடம் வச்சு
மற்றொரு பெண்ணை இழுக்க, பெற்ற
மாதா மனம் வெறுக்க

இழுத்துக் கொண்டு போன பெண்ணை
இச்சை ஏதும் செய்யாமலே
கழுத்தில கையப் போட்டு
கடத்திட்டாராம் ரயில்வே ரோட்டில்
காந்தி சொன்னதை மறந்து
குடிச்ச கடைசி நாளாம் விருந்து

பால ஊரு காரு செட்டு
பக்கத்திலே ரயில்வே ரோடு
வலைவிசி தெப்பம் விட்டு
வாய்க்காட்டில் வெட்டுப்பட்டார்
வல்லவர் என்று சொல்ல - அவுக
வச்சத்தாரு கொல்ல

வெட்டுப்பட்ட பிணத்தைப்பார்த்து
வேகமாக போன் கொடுத்து
சட்டுப்புட்டு என்று சொல்லி
சப்பின்ஸ்பெக்டர் ஓடிவந்தார்
தாயாரையும் அழைத்தார் — சில
சங்கதிகளும் விசாரித்தார்

எழுதினாராம் எசமான் வந்து
இறந்தவன் தாயாரைக் கேட்டு
அழுதாளாம் குறத்தி மகள்
ஆசுப்பத்திரி போகும் வரை
அருமையான ஒடம்பை – டாக்டர்
அறுக்க வேணுமின்னாராம்.

சட்டப்படி ஆறு மணிக்கு
டாக்டர் வந்து பரீட்சை பண்ணி
பதறாமப் பார்த்துச் சொன்னார்
பல இடத்தில் கத்திக் குத்து
பல்லாக்கும் தாயாரு – மணிக்கு
பந்து சனங்கள்ளப்பாரு

சொந்த ஊரு மதுரையிலே
சுற்றிவரும் ஊர்கோலமாம்
சந்தைக்கடை கூட்டம் போல
தடபுடலாய்ச் சுற்றி வந்து
சாமக்கோழி கூவ – தேரு
தத்தனேரி போக

வைகை நதியைத் தாண்டி
வம்சத்தார் எல்லாம் கூடி
போதையில் மனத்தை விட்டு
புதைத்து விட்டார் குழியைந் தோண்டி
பீடம் போல் சமாதி
தட்டிப் பேர் முழங்குது பாரு

அரியலூர் ரயில் விபத்துக் கதைப்பாடல்

பெரியவரே சிறியவரே
பிரியமுள்ள சபையோர்களே
அரியலூர் ரயில் விபத்து
அதிசயத்தைச் சொல்லி வாறேன்
அளவில்லாத சேதம் — பலர்
அடைந்தாரைய்யா பாவம்
அளவில்லாத சேதம் — பலர்
அடைந்தாரைய்யா பாவம்.

கள்ளகம் தாண்டிய
காட்டாறு பாலததிலே
வெள்ளிக் கெழமையிலே
விடியக்கால வேளையிலே
விபத்து நடக்கலாச்சு — ரயில்
விழுந்து நொறுங்கலாச்சு
விபத்து நடக்கலாச்சு — ரயில்
விழுந்து நொறுங்கலாச்சு.

ஆத்துத் தண்ணி மோதி மோதி
அடிச்சதையா ரயில் பாலத்தை
இப்பவோ பெறகோன்னு
இத்துப் போயி இருக்கையிலே
இரும்புப் பாலம் நடுவே
எக்சுப் பிரசு வரவே
இரும்புப் பாலம் நடுவே
எக்சுப் பிரசு வரவே
கடகடவென்று சொல்லி
தாராளமா வந்த வண்டி
மடமட வென்று சொல்லி
பாலம் இடிஞ்சதால் பல்டி

பாடல், உதவியவர்: க. முத்து கொடிமங்களம்
மதுரை மாவட்டம்

பயங்கரமா நொறுங்கி விழுந்து
பைசலாச்சு சனங்க
பயங்கரமா நொறுங்கி விழுந்து
பைசலாச்சு சனங்க

பொண்ணு கேட்டுப் போனவுக
புதுக்கல்யாணம் செஞ்சவுக
என்னென்னமோ மனசுக்குள்ளே
எண்ணிக்கொண்டு போனவுக
எடவழியிலே இறந்தார் — சொந்த
என பந்துக்கள இழந்தார்
எடவழியிலே இறந்தார் — சொந்த
என பந்துக்கள மறந்தார்

பகவான வணங்கச் சென்ற
பக்தகோடி அறுபது பேர்
நகநட்டுச் சாமானோடு
நதியில் விழுந்து மாண்டாரைய்யா
ராமேசுவம்ர பக்தி— அவுக
நடுவழியிலேயே பலி
ராமேசுவரம் பக்தி அவுக
நடுவழியிலேயே பலி.

காலுடஞ்சு கையொடஞ்சு
குறுக் கொடிஞ்சு குடல் பிதுங்கி
ஏழை பணக்காரர் எல்லாம்
இறந்து போனார் நதியினிலே
கொல நடுங்குது சொல்ல
கொலை இருநூறுக்கும் மேலே
கொல நடுங்குது சொல்ல
கொலை இருநூறுக்கும் மேலே

சுத்து வட்டுக் காரவுக
சுங்கம் போட வந்தவுக
செத்தவுக நகையைப் பூராம்
திருடிக் கொண்டார் ரொம்பப்பேரு
சேதி தெரிஞ்சு போச்சு—அவுகள
செயிலிலே போடலாச்சு
சேதி தெரிஞ்சு போச்சு—அவுகள
செயிலிலே போடலாச்சு

பதறிய ரயில் விபத்துப்
பரிதாபத்தக்கேள்விப்பட்டு
பாத்த மனம் துடிக்கலாச்சு
பச்சையப்பன் கவி எடுத்து
பதிய வச்சார் ஏட்டில—மக்கள்
பாடுவார்கள் நாட்டில்
பதிய வச்சார் ஏட்டில்—மக்கள்
பாடுவார்கள். நாட்டில்.

மைக்கேலம்மாள் கதைப்பாடல்

ஊருக்கும் உயருவான
உடையாரு வமுசங்க
கண்மணியே பெற்றெடுத்தாராம்
—என் காதலி ராசா

ஏசு என்று பெயரும் வைத்தாராம்
ஏசு என்று பெயரும் வைத்து
இன்பமாகத் தான் வளத்து
பள்ளிக்கூடம் போகச் சொன்னாராம்
—என் காதலி ராசா

பத்தாவதும் படிச்சு வந்தாராம்
பத்தாவதும் படிச்சு வந்து
பாதியிலே பெயிலாப் போயி
காதலையும் கைக் கொண்டாராம்
—என் காதலி ராசா

காதலையும் கைக் கொண்டாராம்
தன்னே னன்னே னானே னன்னே
தான னன்னே னானே னன்னே
தன்னே னன்னே னானே னானே—
ஏ—மைக்கேலம்மா
தான னன்னே னானே னன்னே

பள்ளிக்கூடம் போயி நல்ல
பத்தாவது படித்து வந்து
பத்தாவது படித்து வந்து —ஏ மைக்கேலம்மா
பாதியிலே பொயிலாப் ம்பானேன்

சாலைக்கிராமம் பள்ளிக்கூடம்
ஏழாவது படிக்கையிலே
சேந்தோமடிரெண்டுபேரும்—ஏ மைக்கேலம்மா
சேந்தோமடி ரெண்டு பேரும்

பாடல் உதவியவர்: துகவூர் ராசம்மாள்

பட்டு விக்கும் பரமக்குடி
துண்டு விக்கும் சோதுகுடி
சேலவிக்கும் இளையான்குடி—ஏ மைக்கேலம்மா
சேலவிக்கும் இளையான்குடி

பரமக்குடி டவுனுக்குள்ளே
பரமக்குடி டவுனுக்குள்ளே
ஒனக்கெனவே வாங்கி வந்தேன்—ஏ மைக்கேலம்மா
ஒசந்த தொரு சேல ஒன்னு

சாலைக்கிராமச் சந்தையிலே
செவகங்கைக் கூட்டத்திலே
ஒனக் கெனவே வாங்கி வந்தேன்—ஏ மைக்கேலம்மா
ஒசந்ததொரு புட்டா டப்பி

இளையான்குடிச் சந்தையிலே
ஏக வள்ளிக்கூட்டத்திலே
ஒனக் கெனவே வாங்கி வந்தேன்—ஏ மைக்கேலம்மா
ஏழாவது பொய்த்தகங்கள்

தேவ கோட்டைச் சந்தையிலே
ஏக வள்ளிக் கூட்டத்திலே
ஒனக்கெனவே வாங்கி வந்தேன்—ஏ மைக்கேலம்மா
பத்தாவது பொய்த்தகங்கள்

ஆனந்தூர் சந்தையிலே
வியாழக்கெழமச் சந்தையிலே
கேள்வியெல்லாம் கேட்டாயடி—ஏ மைக்கேலம்மா
தேவையுள்ள சாமான்களை

சீப்புகளாம் கண்ணாடியாம்
தகுந்த நல்ல சோப்புகளாம்
வேலையுள்ள பட்டுடனே—ஏ மைக்கேலம்மா
பாடங்களும் கத்தோமடி

சேந்திருந்தோம் சேந்திருந்தோம்
ரெண்டு பேரும் சேந்திருந்தோம்
விட்டுப்பிரியாமத்தான்—ஏ மைக்கேலம்மா
நாமிருவரும் சேந்திருந்தோம்

சாலைக்கிராமச் சந்தையிலே
சக்கர நாடார் கடையினிலே
பசும் பால வாங்கிக் கொண்டு—ஏ மைக்கேலம்மா
சத்தியங்க செஞ்சோமடி

விராதாண்டான் கண்மாய்க்கரை
ஒசந்த நல்ல கம்மாக்கரை

காட்டுக் கருவச் சோலையிலே—ஏ மைக்கேலம்மா
கலந்திருந்து பேசுனமடி

நாமிருவர் கல்யாணந்தான்
செய்யனுமே செய்யனுமே
வார்த்தைகளைச் சொன்னோமடி—ஏ மைக்கேலம்மா
வார்த்தைகளைச் சொன்னோமடி

கல்யாணஞ்செய்வதற்கு
ஒன்னும் நல்லா பலிக்காதைய்யா
ஒங்க நல்ல சாதியிலே—ஏ சேசியரே
பொண்ணு நல்லா பாத்துக்கைய்யா

எங்க நல்ல சாதியிலே
மாப்பிள்ளையும் பாத்திட்டாக
ஒங்க நல்ல சாதியிலே—ஏ சேசியரே
பொண்ணு நல்லா பாத்துக்கைய்யா

ஒங்க நல்ல சாதியிலே
நானும் நல்லா வந்தேனுன்னா
ஏசுவாக பேசுவாக—ஏ சேசியரே
எகத்தாளங்க செய்வாகளே

ஏசுனாலும் பேசுனாலும்
ஏகத்தாளங்கள் செய்தாலுமே
தேவகோட்டை டவுனுக்குள்ளே—ஏ மைக்கேலம்மா
புடிச்சுருவோம் ரூமுகளும்

என்னத்தச் சொன்னாலுமே
எடுக்காதைய்யா ஒங்க பேச்சு
பலிக்காதைய்யா இங்கே நல்லா—ஏ சேசியரே
மைக்கேலம்மா எடத்திலேயும்

சொன்ன சொல்லு மாறாதடி
சொனை கெட்ட மைக்கேலம்மா
சொன்ன சொல்ல முடித்திடனும்—ஏ மைக்கேலம்மா
வார்த்தைகள அளக்காதடி

சொல்லாதைய்யா சொல்லாதைய்யா
இன்னொருக்காச் சொல்லாதைய்யா
பேரு நல்லாக் கெட்டுப் போகும்—ஏ சேசியரே
நம்ம பேரு கெட்டுப் போகும்

தாயோட பொறந்த நல்ல
தாய் மாமன் மவனுக்குத்தான்
பொட்டியரிசியுடன் —ஏ சேசியரே
போட்டுட்டாக என்தனுக்கு

வெள்ளிக் கெழம அன்னக்கி
விடிஞ்ச அஞ்சு நாளியளுக்குள்
திருமணம் முடியுமைய்யா—ஏ சேசியரே
என்னப்பத்தி நெனக்காதைய்யா

வியாழக் கெழம அன்னக்கி
சோப்புகளும் சீப்புகளும்
தானும் எடுத்துக் கொண்டு—ஏ மைக்கேலம்மா
செங்கக் கால்வாய் சென்றானய்யா

செங்க நல்ல கால்வாய்க்குத்தான்
தலைய நல்ல முழுக நல்ல
எண்ண நல்ல ஸ்நானங்களும்—ஏ மைக்கேலம்மா
செய்வதற்கு வந்தாளங்கே

வெள்ளிக்கம்பு வெட்டருவா
வீச்சருவா தானெடுத்து
பீச்சருவா கத்தி எடுத்து—ஏ சேசியரும்
பின் தொடர்ந்தான் சேசியரும்

கரும்பனைக் கூட்டத்திலே
ரெண்டு பேரும் எதிரேருந்து
மொங்கு நல்லா வெட்டித்தாரும்—ஏ சேசியரே
ஒரு மொங்கு சாப்பிடுவேன்

சொன்ன சொல்லை மறந்திட்டியே
சொனை கெட்ட சேசியரே
நல்ல அறிவுடனே—ஏ சேசியரே
வீடு போயி சேருமைய்யா

செங்க நல்ல தாவில தான
குளிக்க நல்லாப் போகையிலே
பின் தொடர்ந்தான் சேசியரும் —ஏ மைக்கேலம்மா
பின் தொடர்ந்தான் சேசியரும்

எண்ணெயத் தேச்சு நல்லா
ஸ்நானங்கள் செய்யையிலே
புடிச்சானே கொண்டையையும்—ஏ மைக்கேலம்மா
மிதிச்சிட்டானே குதிங்காலையும்

குதிங்காலத்தான் மிதிச்சு
குறிச்சருவா தானெடுத்து
அறுத்திட்டானே குரவளையும்—ஏ மைக்கேலம்மா
அறுத்திட்டானே குரவளையும்

அடுத்தாப்பில ஏகாலிதான்
அலறித்தவிச்சு நல்லா
ஓடித்தான் போனானைய்யா —ஏ மைக்கேலம்மா
ஓடித்தான் போனானைய்யா

அறுத்த நல்ல தலையெடுத்து
துலமரத்துத் தாவுக்குள்ளே
மண்ணால மறச்சுக்கொண்டு—ஏ மைக்கேலம்மா
கழுவுனானே கால் கையைத்தான்

வீட்டுக்குத் தானும் நல்ல
சைக்கோளத் தானெடுத்து
வீட்டுக்கு வத்தானங்கே—ஏ சேசியரே
வீட்டுக்கு வந்தானங்கே

பெத்த நல்ல அம்மாவுமே
புள்ளயத்தான் காணோமின்னு
ஓடியே வந்தாளங்கே—ஏ சேசியரே
ஓடியே வந்தாளங்கே

அய்யா நல்லா மயனுமே
எம்மகளும் பாத்தியலா
இன்னுமே காணோமைய்யா—ஏ மைக்கேலம்மா
எம்மகளக் காணோமைய்யா

யாரடி பைத்தியக்காரி
என்னிடமே கேக்குறியே
நானுந்தான் பாக்கவில்லே—ஏ மைக்கேலம்மா
நானுந்தான் பாக்கவில்லே

மூணு நாள் மூணு பொழுதும்
நானுந்தான் பார்க்கவில்லை
மைக்கேலம்மா கண்ணாலத்தான்—ஏ மைக்கேலம்மா
நானும் நல்லா பார்க்கவில்லே

ஒட்டமும் பெரு நடையா
ஓடுனாளே செங்க நல்ல
செங்க நல்ல கால்வாய்க்குத்தான்—ஏ மைக்கேலம்மா
வார்த்தைகளக் கேட்டுக்கிட்டு

காரி நல்ல கழுதையிலே
மொரட்டு நல்ல பொதிகை போட்டு
முன்னாலே போனானங்கே— ஏகாலியும்
முன்னாலும் போனானங்கே

ஆத்தாத்தா ஒம்மகள
அறுத்து நல்ல போட்டுமிட்டு
ஓடியும் போயிட்டாரே—ஏ மைக்கேலம்மா
ஓடியும் போயிட்டாரே

சீவி நல்லாச் சிங்காரிச்சு
செவத்ததொரு பொட்டும்வச்சு
எடுத்திட்டானே சைக்கோளையும்—ஏ கோர்ட்டாரே
திருவாடானை கோட்டுக்குத்தான்

கிளாஞ்சுனைக் கிராமத்திலே
உள்ளவுக யாபேரும்
தேடியே வாறாகளே—ஏ மைக்கேலம்மா
ஓடியே வாறாகளே

அரிவாளுக் கம்புடனே
ஆளுமே தெரண்டு நல்ல
வடி திருக்கைக் கிராமத்துக்கே—ஏ சேசியரே
தேடி நல்ல வாறாகளே

திருவானைக் கோர்ட்டுக்குத்தான்
நேரிடையா ஆஜரானார்
ஆனாலும் சேசியரும்—ஏ கோர்ட்டாரே
தைரியமாத் தானிருந்தார்

ஆர். எஸ். மங்களம் போலீசுக்கு
உடனடியாத் தாக்கலிட்டார்
வந்தாக போலீஸ்களும்—ஏ சேசியரே
பார்வையிட வந்தாகளே

போலீசுப் பார்வையிட
வண்டியல தானும் ஏத்து
வண்டியிலே போறாகளே—ஏ மைக்கேலம்மா
ஆர் எஸ் மங்களம் போலீசாரும்

திருவாடானைக் கோர்ட்டுக்குத்தான்
அனுப்பித்தான் விட்டாகளே
அங்கே நல்ல இருக்கானங்கே—ஏ மைக்கேலம்மா
சென்ட்ரல் ஜெயிலிலேயுமே

திருவாடானை கோர்ட்டு விட்டு
தூக்கியே விட்டாகளே
மதுரை நல்ல கோர்ட்டுக்குத்தான்—ஏ மைக்கேலம்மா
போறானங்கே ஜெயிலுக்குள்ளே

மதுரை நல்ல கோர்ட்டில தான்
தீர்ப்பு நல்லா சொல்லையிலே
வாதம் நல்லாபலிக்காதங்கே—ஏ மைக்கேலம்மா
வாதம் நல்லா பலிக்கலையே

வடதிருக்கைக் கிராமத்திலே
தாய் சனம் எல்லாப் பேரும்
உடனடியாக் கட்டியுமே
திருப்புனாக சேசியரே

சென்ட்ரல் நல்லக் கோர்ட்டுக்குத்தான்
தூக்கி நல்லா விட்டாகளே
வாயிதாப் போட்டாகளே—ஏ மைக்கேலம்மா
வாயிதாப் போட்டாகளே

கிளிக்கூடு தானும் ஏறி
கேக்குறாக கேள்விகளை
கோர்ட்டார்கள் அவ்வளவு பேரும்—ஏ மைக்கேலம்மா
வாக்கு மூலம் கேக்குறாக

வியாழக்கெழமை அன்னக்கி நல்ல
பன்னிரண்டு மணிக்கு நல்ல
தூக்குத்தான் சொல்லிட்டாக—ஏ மைக்கேலம்மா
தூக்கும் நல்லாச் சொல்லிட்டாகைய்யா

கோர்ட்டார்களே கோர்ட்டார்களே
மூனு மணி நேரத்திறகு
எனக்கு நல்ல டயம் கொடுங்க—ஏ கோர்ட்டாரே
எனக்கு நல்ல டயம் கொடுங்க

என் ஊருக் கோயிலிலே
நானும் நல்ல வணங்க வேணும்
அப்புறம் தான் தூக்க வேனும்—ஏ கோர்ட்டார்களே
எனக்குக் கொஞ்சம் உதவி வேனும்

தாயோடப் பொறந்த நல்ல
தாய் மாமன் மயனும் நல்ல
ரெண்டு பேரும் சேத்து நல்ல—ஏ கோர்ட்டாரே
எடுத்தாக பிளசர்களும்

வடதிருக்கைக் கிராமத்திலே
வந்து தான் தானிறங்கி
செவத்தியாரு கோயிலிலே—ஏ கோர்ட்டாரே
மூனுதரம் ஓடி வந்தார்

பெத்தாளே தாயி நல்ல
பெயரிட்ட வள்ளியவள்—
பச்சரிசி தானும் கொண்டு—ஏ சேசியரே
வாங்கி நல்ல வாயிலிட்டார்

பெட்டிய துறந்து நல்ல
சூட்டுக் கேசு நல்ல
பொய்த்தகங்க அள்ளுனானே—ஏ கோர்ட்டாரே
கணக்கு மொதல் எடுத்தானங்கே

ஒன்றரை மணி நேரத்துக்குள்
ஓடியே சேர்ந்தாகைய்யா
கோர்ட்டாருக்கு முன்னாலதான்—ஏ சேசியரும்
போட்டாரைய்யா கணக்குகள

கணக்குகள தானெடுத்து
கோர்ட்டார்கள் பார்த்தொடனே

சேசியர்க்கு விடுதலதான்—ஏ சேசியரே
கேசு நல்ல விடுதலை தான்

விடுதலை சொன்னோடனே
கட்டுனானே திண்டாரங்கள்
கட்டியே வந்தானங்கே—ஏ சேசியரே
வடதிருக்கைக் கிராமத்துக்கே

வந்து செவத்தியாரு
கோயிலிலே கோயிலிலே
தானும் ஆரம் போட்டு—ஏ வெவத்தியாரே
செயிச்சிட்டானே அந்த நோம்

முத்துராமலிங்கத் தேவர் கதைப்பாடல்

தொகையறா

வையகம் புகழும் வேந்தே! வண்டமிழர் குலவிளக்கே!
தென்னகத்து வீர சிங்கம் தென் பாண்டி வீர முத்தே!
வையகம் காண்பதெப்போ வைர முத்துராமலிங்கம்!
சோகம் நிறைந்த கதை சொன்னாலும் முடிவதில்லை.

பாடல்

1) தென்னாட்டு வீர சிங்கம் தேவர்முத்துராமலிங்கம்
மக்களைத் தவிக்க விட்டு மரணமான சேதி கேட்டு
மனங்கலங்கிடலானோம் — அந்த
மலர்ந்த முகத்தக் காணோம் (தென்னா)

2) மாநிலத்து மாவீரன் நல்லமுத்து ராமலிங்கம்
நான் மாடக் கூடல் என்ற நலமான மதுரையிலே
நம்மைவிட்டுப் பிரிந்தார் — அய்யோ
நலிந்து மக்கள் துடித்தார்

3) வீரனுக்கு வீரனாவார் வேந்தனுக்குத்தலைவனாவர்
அஞ்சாத வீரனாவார் ஐம்பத்தாரு வயதுமானார்
அவனி புகழ் வாழ்ந்தோர் — நல்ல
அமர வாழ்வு கொண்டார்.

4) உலகத்தில் மூத்தகுடி உத்தமர்கள் வாழ்ந்த குடி
அறம் பொருள் இன்பம் பேசி அவனியிலே வாழ்ந்தகுடி
அருமையான நாடு — தமிழ்
அறிஞர் போற்றும் நாடு.

5) தெய்வ பக்தர் உக்ரபாண்டித் தேவர் பெற்ற வீரமகன்
காலமான சேதிகேட்டு காண்பதெப்போ என்று மக்கள்
இதயங்கலங்கலாச்சு — நம்ம
இன்ப வாழ்வு போச்சு.

6) மங்காத வீரமகன் மதுரை மகாலச்மி மில்லில்
பாட்டாளி துயரைக் கண்டு பக்குவமாய் நீதி கேட்டு
வெற்றி வாகை பெற்றார்—நல்ல
வீரராக வாழ்ந்தார்

7) வெள்ளையரின் ஆதிக்கத்தைவிரட்டியடிக்க வேணுமென்று
விறுகொண்ட தேவர் மகன் ஆவேசமாய் குதித்தார்
ஆங்கிலேயரை எதிர்த்தார் — தேவர்
அறிஞராக வாழ்ந்தார்.

8) மக்களின்றி மனைவியின்றி மனதுக்குள்ளே கபடமின்றி
மாசில்லாத சேவை செய்து யாண்டும் தெய்வமானார்

மனங்கலங்கிடும் துயரம் — மக்களின்
இருந்து கேளும் விவரம்

9) புதுக்கோட்டை நகரத்திலே பொல்லாத சிறையிலே
பொய்யாகக் கேசு போட்டு பூட்டினார்கள் உள்ளே
தங்க உடம்பு கெட்டுப் போச்சு — பார்த்த
மக்கள் தவிக்கலாச்சு.

10) பொல்லாத நோயினாலே பொன்னான மேனி கெட்டு
மாவீரன் இல்லத்திலே மாறாத கவலைப்பட்டு
நாளுக்கு நாள் மெலிந்தார் — அறிந்த
நாட்டு மக்கள் துடித்தார்.

11) ஐந்து மாசம் மதுரையிலும் அதன் பிறகு வேலூரிலும்
செய்து வந்த சிகிச்சையிலே சிறிதளவு குணமடைந்தார்
தெம்பு பெற்று நடந்தார் — தேவர்
திரு நகரிலே இருந்தார்.

12) மதுரை மாநகரத்திலே மகிழ்ச்சியோடு இருக்கையிலே
மறுபடி உடல் நிலையும் மோசமாகப் போச்சு — அய்யோ
மாளும் நிலைமையாச்சு — மதுரை
சோக நிலையாச்சு,

13) எல்லாம் ஒடுங்கிப் போச்சு செவ்வாய்க்கிழமையாச்சு
தேதி இருபத்தொன்பதாச்சு விடியக்கால நேரமாச்சு
ஆவி பிரியலாச்சு — இந்த
அகிலம் இருண்டு போச்சு.

14) அறுபத்தி மூணாம் ஆண்டு அக்டோபர் மாதம் புதன்
திக்கெட்டும் பரவலாச்சு தேவர் மகன் இறந்த சேதி
கேட்டு மக்கள் துடித்தார் — அன்று
தேம்பி அழுது புரண்டார்.

15) பசும்பொன்னில் அடக்கஞ்செய்ய தேவர்
சொன்ன சொல்லாதலால்
ஆம்புலன்ஸ்காரதனில் அதிவிரைவில் கொண்டுசென்றார்
ஆறாய் கண்ணீர் பெருக — மக்கள்
அழுது கண்ணீர் வடிக்க.

16) வீரன் மாண்ட சேதி கேட்டு வேதனையாய்
மக்கள் வெள்ளம்
லாரி, பஸ்ஸு,சைக்கிள்,பிளசர்,ரயில்களிலும்வந்திடவே
சாரை சாரையாக — மக்கள்
சாலையிலும் நடந்தார்.

17) தேவருக்கு ஆத்ம தோழர் மூக்கைய்யா தேவரவர்
சீமைச்சாமி மலைச்சாமி சின்னக்கருப்பத்தேவர்
சிந்தை நொந்து கூட மக்கள்
திரண்டு நின்று அழுக

18) மதுரை முத்து என்னெம்மார் சுப்புராமன்
திரைநடிகர் எஸ்எஸ்ஸாரு அன்பழகன் என்வி நின்று
தேம்பி தேம்பி அழுதார் — தேவருக்கு
இறுதி அஞ்சலி செய்தார்.

19) தென்னாட்டு காந்தி அண்ணா புரட்சி நடிகர் எம்ஜிஆரு
காரைக்குடி கணேசன் கண்ணகி சக்தி மோகன்
கண்ணீரைத்தான் சிந்த — அனைத்துக்
கட்சிக் கொடியும் இறங்க

20) மதுரை நகரத் தலைவர் வந்தார் மந்திரி
ராமையா கூடவந்தார்
தங்கமணி ராமமூர்த்தி சந்தானமும் கூடவந்தார்
சமுத்திரம் போல் ஜனங்கள் — தேவர்
திரு முகத்தினை வணங்க

21) சிவகங்கை ராமநாடு மன்னர்களும் வந்திருந்தார்
கடல் கடந்த மக்களெல்லாம் கதறித்தந்தி கொடுத்திடவே
காண எண்ணித் துடித்தார் — மக்கள்
கண் கலங்கி அழுதார்.

22) பொழுது புலர்ந்ததப்பா புதன் கிழமையானதப்பா
அழுது புரண்டார்கள் அய்யோ அய்யோ என்று சொல்லி
சொர்க்கலோக தேரு — அங்கே
சொகுசா நிக்குது பாரு.

23) போலிசு காவலாளி பொழுதெல்லாம் சேவை செய்து
போச்குவரத்துக்களை பொறுப்போடு செய்து வந்தார்
நடுப்பகலுமாச்சு — இரண்டு
மயில்கள் வரவுமாச்சு.

24) பைந்தமிழர்கூடிவிட்டார் பல்லாக்கையும் தூக்கிவிட்டார்
நானிலத்து மாவீரன் நல்லமுத்துராமலிங்கம்
வானலோகம் செல்ல மக்கள்
மலரைத் தூவி வணங்க.

25) பசும்பொன்னில் அடக்கம் செய்து
பக்குவமாய் மேடை செய்தார்
நவம்பர் ஒன்னாந் தேதி நாட்டிலுள்ள கடை அடைத்தார்
தேவருடைய மரணம் — இந்த
தேசத்துக்கொரு துயரம்.

தனுஷ்கோடி அழிந்த கதைப்பாடல்

1) வாரும் பெரியோர்களே! வாலிபரே! தோழர்களே
வணக்கங்கள் பல கோடி — ஜனங்களுக்கு
வரங்கொடுத்த தனுஷ்கோடி — நகரத்திலே
வஞ்சகப் புயலடிச்ச சஞ்சலத்தைச் சொல்லி வாறேன்
வண்ணத் தமிழ்க் கவி பாடி—சொல்லியே வாறேன்
வண்ணத் தமிழ்க் கவி பாடி.

2) ஒருவர் இருவரல்ல எத்தனை பிணங்களென்று
உறுதி தெரியவில்லையே — இறந்தவர்கள்
உடலும் கிடைக்கவில்லையே — கடற்கரையில்
ஊறிப்போன பிணங்களை காக்கை கொத்தித் தின்ற சேதி
உள்ளமே பொறுக்கவில்லையே — அதை நினைக்க
உள்ளமே பொறுக்கவில்லையே.

3) பாழாப் போன அறுபத்தி நாலாவருசம் நடந்த
பயங்கரப் புயலப்பாரு — அதே வருசம்
பண்டிட் நேரும் மறைந்தாரு — ஏப்ரலிலே
பள்ளிக்கூடம் இடிஞ்சது — டிசம்பரில் புயலடித்து
பல பேரு மாண்டு போனாரு — கடலுக்குள்ளே
பல பேரு மாண்டு போனாரு.

4) இருபத்திரெண்டாந்தேதி செவ்வாய்க்கிழமையன்று
இரவெல்லாம் மழைபிடிக்க — இறைச்சலோடு
ஏகமாகப் புயலடிக்க —தனுஷ்கோடி
எல்லையிலே கடல் பொங்க்
தொல்லைப்பட்ட மக்களெல்லாம்
என்னசெய்வோம்என்றுதுடிக்க — ஜனங்களெல்லாம்
என்ன செய்வோம் என்று துடிக்க

5) தென்னை மர உயரம் மக்களை அழிப்பதற்கு
சீறி வந்த கடலலையே — தனுஸ்கோடி —
தெருவுக்குள்ளேபொங்கிநுழைய—ஜனங்களெல்லாம்
சின்னஞ்சிறுபிள்ளைக்குட்டி குடும்பத்துடனே அங்கே
திக்குத் தெரியாமல் அலைய — பொது ஜனங்கள்
திக்குத் தெரியாமல் அலைய — பொது ஜனங்கள்
திக்குத் தெரியாமல் அலைய

6) தனுஷ் கோடியிலுள்ள பழங்காலக் கட்டிடமெல்லாம்
தரைமட்டமாக இடிய — அய்யய்யோவென்று

சத்தமிட்டு மக்கள் மடிய — நிமிசத்திலே
சமுத்திர தேவியவள் கணக்கற்ற ஜனங்களைத்
தாவியே விழுங்கி முடிய — கடலரசி
தாவியே விழுங்கி முடிய.

7) நல்ல நேரமிருந்து தப்பித்துப் பிழைத்தவர்கள்
இராமேஸ்வரம் செல்லலாச்சு — ராமேஸ்வரத்தில்
நாலாப் பக்கம் வெள்ளக் காட்சி — ஆனாலுமந்த
ராமநாதசாமி கோயில் சேதமில்லை அந்நேரத்தில்
ரயிலுங்கிளம்பலாச்சு — தனுஷ்கோடிக்கு
ரயிலுங்கிளம்பலாச்சு.

8) பாம்பனைத் தாண்டியந்த பாசஞ்சர் தனுஷ்கோடிக்கு
பக்கத்திலே நிக்கலாச்சு — அது சமயம்
பயங்கரமா அலையடிச்சு — வண்டியிலுள்ள
பலவகைகள் சுக்குநூறு — நொறுங்கிக் கடலுக்குள்ளே
பல்டியும் அடிக்கலாச்சி —ரயிலு வண்டி
பல்டியும் அடிக்கலாச்சி.

9) சின்னா பின்னமா ரயில், விழுந்து இருநூருபேரு
செத்துப்போனார் கடலுக்குள்ளே — ரயில் விழுந்த
சேதி சொல்ல நாதியுமில்லே — அந்த நேரத்திலே
டெலிபோன் தந்திகளெல்லாம் கம்பிகள் அறுந்ததாலே
தெரியவில்லை சங்கதிகளே — உடனடியா
தெரியவில்லை சங்கதிகளே.

10) மண்டபத்திலே இருந்து தனுகோஷ்டி செல்லக்கடல்
மத்தியிலே பாம்பன் பாலம் — கணக்கா ஒரு
மைலிருக்கும் அதன் நீளம் — புயலலைகள்
மாறி மாறி மோதியந்த இரும்புப் பாலத்தைக் கடல்
மடக்கி எறிந்த கோலம் — பாலத்தைக் கடல்
மடக்கி எறிந்த கோலம்.

11) அன்றிரவு சாவித்திரி ஜெமினிகணேசனுமே
ஆண் குழந்தை வரம் வாங்க — தனுஷ்கோடிக்கு
ஆவலுடன் வந்திருந்தாங்க — புயலடிச்ச
அறிகுறி கண்டவுடன் ர்ராமேஸ்வரம் கோயில் சென்று
அங்கேயே இருந்து கொண்டாங்க — பத்திரமாகவே
அங்கேயே இருந்து கொண்டாங்க.

12) திருவனந்தபுரத்தில் புறப்பட்டு நேரடியா
சென்னை செல்லுகின்ற ரயிலாம் — மதுரை விட்டு
சீக்கிரமாச் சென்ற மெயிலாம்—பள்ளப்பட்டியில்
திண்டு முண்டாத்தண்டவாளம் பெயர்ந்து ரயில் விழுந்து
தேசமெல்லாம் பெருந்திகிலாம் — ரயில் விழுந்து
தேசமெலலாம் பெருந்திகிலாம்.

13) பள்ளப்பட்டி ரயில் விபத்தில் ஆறு பேர் மரணமென்று
பத்திரிகைச் செய்திவந்தது— ஜனங்களெல்லாம்

பதறி மனது நொந்தது—காயம்பட்ட
பதிமூணு பேர் மதுரை ஆஸ்பத்திரியில் பார்க்கப்
பரிதாபமாயிருந்தது—பார்க்க மிகப்
பரிதாபமாயிருந்தது.

14) அடுத்த நாள் காலையிலே அலைகள் ஒடுங்கிக்கொஞ்சம்
அமைதியுடனே இருக்க—கடலுக்குள்ளே
ஆயிரம் பிணங்கள் மிதக்க—கரையோரத்தில்
அழுகிய பிணங்களும் ஒதுங்கி அலங்கோலமா
அடையாளமில்லாமல் கிடக்க—பிணங்களெல்லாம்
அடையாளமில்லாமல் கிடக்க.

15) கடலில் மிதந்து நின்ற பிணங்களை விமானங்கள்
கரை கொண்டு வந்து சேர்க்க—பக்தவச்சலம்
காமராசர் சென்று பார்க்க—கிருஷ்ணமாச்சாரி
கக்கனோடு ராமையாவும் பெரியார் மதியழகன்
கலங்கி கண்ணீர் வடிக்க—பிணத்தைக் கண்டு
கலங்கிக் கண்ணீர் வடிக்க.

16) சாவித்திரி ஜெமினியும் பதினைந்தாயிரம் ரூபாய்
தாராள நிதிகள் அளிக்க—பத்தாயிரத்தை
சரோஜா தேவியும் கொடுக்க—கொடையில் பெரும்
சக்ரவர்த்தி எம்.ஜி.ஆரு ஒரு லட்சம் ரூபாய் தந்து
சனங்கள் கண்ணீரைத் துடைக்க—நேரிலே சென்று
சனங்கள் கண்ணீரைத் துடைக்க.

17) இந்தியப் பிரதமர் சாஸ்திரி இதற்காகவே
எழுபத்தையாயிரம் தந்தார்—பல பேர் இன்னும்
ஏராள நிதிகளைத் தந்தார்—எவரெவரோ
என்ன தந்து என்ன பயன் இரண்டாயிரம் சனங்கள்
இவ்வுலகை விட்டு மறைந்தார்—நிமிசத்திலே
இவ்வுலகை விட்டு மறைந்தார்.

18) சமுத்திரக்கரையிலே உறவை இழந்தவர்கள்
சஞ்சலக் கண்ணீரை வடிச்சி—பித்துப் பிடிச்சு
தனித்துப் புலம்பலாச்சி—கடவுளது
சக்தியுள்ள ஸ்தலமென்று தரணி எல்லாம் புகழும்
தனுஷ்கோடியழிஞ்சு போச்சு—தரணிபுகழ்
தனுஷ்கோடியழிஞ்சு போச்சு.

19) நிலையற்ற வாழ்வை நம்பி நிகரில்லை என்று சொல்லி
நெஞ்சைத்தூக்கிக் கருவங்கொண்டு—திரிபவர்கள்
ரொம்பப் பேரு நாட்டிலே உண்டு—புயலடித்து
நிமிசத்தில் இத்தனை பேர் மொத்த மொத்தமாகக் கடல்
நீரிலே மடிந்தாரே இன்று சமுத்திரத்து
நீரிலே மடிந்தாரே இன்று.

20) பாழுங்கடலுக்குள்ளே மூழ்கிய உயிரிழந்த
பைந்தமிழ் குடியை நினைத்து—அவர்களுக்கு
பரிதாபக் கவி தொடுத்து—மனமுருகிப்
பாடுவது சொல்லழகுப் பாவலன் மதுரை
டி.வி.பச்சையப்பன் சொன்ன கருத்து.

சரஸ்வதி பள்ளிக்கூடம் இடிந்த கதைப்பாட்டு

பாண்டி நகரமாம் மதுரையில் நடந்த
பள்ளிக்கூடம் விபத்து — மனமுருகும்
பயங்கரமான விபத்து — இந்த
பரிதாப வரலாற விரிவாகச் சொல்லி வாறேன்
பாடலாகத் தொகுத்து — அய்யா
பாடலாகத் தொகுத்து.

இந்த மாதிரி விபத்துக்கள் எங்கும்
இதுவரை நடந்ததில்லை
நினைக்கவே இருதயம் பொறுக்கவில்லை — இந்த
இளமைப் பருவததிலே முப்பத்தாறு பெண்கள்
இறந்தது மதுரையிலே — ஏகமா
இறந்தது மதுரையிலே — அய்யா
இறந்தது மதுரையிலே

சீவி முடிஞ்சு மல்லிகை சூடி
செந்து ருகப்பொட்டு — நெத்தியிலே
சிங்காரமாக இட்டு — இந்த
சின்னஞ்சிறு பிள்ளைகள் பாலர்களெல்லாம்
சென்றார்கள் சிரிச்சுக்கிட்டு — பள்ளிக்கூடம்
சென்றார்கள் சிரிச்சுக்கிட்டு — அய்யா
சென்றார்கள் சிரிச்சுக்கிட்டு.

கடகடவென்று தூத்துக்குடி மெயிலு
கரும்புகையோடு செல்லவே — பள்ளிக்கூடக்
கட்டிடங்கள் அதிர்ந்திடவே — சிறு
காரை விழுகுதென்று பாருங்க டீச்சர்னு
கண்டு மனம் பதறவே — பள்ளிப் பெண்கள்
கண்டு மனம் பதறவே — அம்மா
கண்டு மனம் பதறவே.

பங்குனி மாதம் ரெண்டாந் தேதியில
பட்டப்பகல் வேளையிலே — அன்று மணி
பனிரெண்டாகையிலே — அன்று
பாதகம் நடந்த சனிக்கிழமையில்
பரிட்சைக்குப் படிக்கையிலே — ஸ்பெசல் வகுப்புப்
பரிட்சைக்குப் படிக்கையிலே

குண்டு விழுந்தது போல் குபுகுபுவென்று
பள்ளிக்கூடம் விழுக — பெண்களெல்லாம்
குய்யோ முறையென்றழுக — அன்று
கூண்டோடு மடிந்த உடம்பில் ரத்தந்தான்
குபு குபுவென்று ஒழுக — தரையில் ரத்தம்
குபு குபு என்று ஒழுக.

மதுராபுரியில் கோயில் கொண்டிருக்கும்
மங்கை மீனாச்சி — அங்கே
மாபெரும் விபத்தாச்சு — அந்த
மதுரையில் பெண்கள் இறந்தது தானே
மண்ணுக்கு இரையாச்சு — மதுரையிலே
மண்ணுக்கு இரையாச்சு — அம்மா
மண்ணுக்கு இரையாச்சு — அய்யா
மண்ணுக்கு இரையாச்சு.

பேரான சரஸ்வதி வித்திய சாலையாம்
பெண்கள் பள்ளிக் கூடமாம் — அதிலே
பெருத்த உயிர்ச்சேதமாம் — அங்கே
பிஞ்சும் பூவுமா இறந்து மடிந்தது
பிணமாகப் பரிதாபமா—ஒரு நொடியில்
பிணமாகப் பரிதாபமா.

முத்துலச்சுமி ராஜலச்சுமி
மோகனவள்ளி தானம்மா
கலாவதி இரண்டு சிலாவாம்—அங்கே
முனியம்மா மேரியம்மா
மணிமேகலா செல்லம்மா—இரண்டு மீனா
மணிமேகல செல்லம்மா

பள்ளி இடிந்ததும்
பிள்ளைகள் மடிந்ததும்
பாரெங்கும் தெரிந்ததையா
பேப்பரிலே பலரும் படித்தாகையா
டி.வி.பச்சையப்பன் — சிந்தி விட்ட
கண்ணீரும் இப்ப
பாடலாய் மலர்ந்ததையா — இப்பப்
பாடலாய் மலர்ந்ததையா

கோனார் கதைப் பாடல்

அடுத்த வீட்டுப் பொன்னாத்தா
அடுதத வீட்டுப் பொன்னாத்தா—உங்க
அடிமடியிலே என்னாத்தா
சலுப்புக் கார சின்னாத்தா—ஒரு
சங்கதி சொல்லுறேன் கேளாத்தா
மாடு மேய்க்கிற பையனென்று—ஒம்
மனசில தான் எண்ணாதே—உன்னைய
வச்சு வாழமாட்டேனென்று
வருத்தமேதும் கொள்ளாதே

ஒத்த நாமம் போடக்கூடிய
உயர்ந்த குலச்சாதி—இந்த
ஊராரத்தான்கேட்டுப்பாரு
உண்மையுள்ள சேதி
ஆயர்பாடி நாட்டிலே
ஆயருடைய வீட்டிலே—அங்கே
வெண்ணெ பாலத் திருடித் தின்ன
வேணுகோபாலனார்
வெளிகடலில் பள்ளி கொண்ட
வேதாந்தராமர் ஆனார்

கோனமான ராமம் போடும்
கோவிந்தக் கண்ணனாம்—நல்ல
கோபியரக் கேலி செய்யும்
கோபாலகிருஷ்ணனாம்.

நாங்க கண்ணனுட வம்சம்
கலைவாணி அம்சம்—நாங்க
கிருஸ்ணனுடைய வம்சம்
கீதாரிய அம்சம்

காலையிலே மாலையிலே
பால் கறக்குற வேலை
கண்டு மாடு மேய்த்திடுவோம்
கண்ணபிரான் போலே
மாட்டைக் கொண்டு மேய்ப்பதற்கு
மாதசம்பளம் உண்டு
மாடுமந்தையிலே கண்டு போட்டா
வரும் படிகளும் உண்டு.

செனைக்கு மாடு போட்டோமுனா
சேந்த ரூபாய் பத்து — நாங்க
சேந்தவுக காப்பி குடிக்கச்
செலவுக்குத்தான் ஆகும்.
புதுமாடு வாங்கி வந்தா
பொறுப்பு ரூபா பத்து
மறு பொழுதுக்குள்ளே அந்தக்காசு
போகும் செலவு பறந்து

இது இன்னிக்கி நேந்துப் பழக்கமுன்னு
எண்ணாதடி கண்ணே — அந்த
எடையோரோட பழக்கமுன்னு
எடுத்துனக்குச் சொன்னேன்.
பாட்டன் பூட்டன் பேரனெல்லாம்
பட்டிமாடு மேய்த்தார் — எல்லாரும்
பால் கறந்த காசையெல்லாம்
பணமாகச் சேர்த்தார்.

பூட்டி வைக்கப் பொட்டியில்லாமப்
போனதில்ல காசு — நாங்கப்
புத்தியில்லாமப் போனதனால்
பொழப்பு இப்பிடி ஆச்சு
வியாழக்கெழமை தோறும்
விடுமுறையாம் லிவு — அம்மா
வீணாகப் பேசிக் கொண்டு
அடிக்காதடி லாவு

சாணி எடுக்குற சின்னப்புள்ளே
சந்திலே போகுது மாடு — உங்க
சாணித் தட்டைக் கீழே வச்சுச்
சல்தியாக ஓடு
ஒத்தக்கொம்பு மூளி எருமை
ஓரத்திலே ஒதுங்குது — நாங்க
ஓங்கிச் சத்தம் போட்டோமின்னா
ஓட்டத்தில பாயுது

கலவாணி மூளி எருமை
கரையோரத்தில் ஒதுங்குது
கல்ல எடுத்துப் பத்தப் போனா
கண்டபடி ஓடுது
அதுக்கு மொதலே
கட்டையப் போடு
மொலங்காலத் தணஞ்சு போடு
கழுத்துல கட்டய போடு
கண்டுந்தாயும் பொனஞ்சு போடு

புல்லுந்தண்ணியும் மேயட்டும்
பொழுது கொஞ்சம் சாயட்டும்
நேரமும் ஆகட்டும்
தெனவு கொஞ்சம் மாறட்டும்
நான் சொல்லியவாறு
சேதியக்கேட்டு
சொக்குதடி சிந்தை—நான்
சொந்தமாக மாடு மேய்ப்பது
வடபழஞ்சியாம் மந்தை

அடியே மந்தைய வீட்டுக்—ஓ புள்ளே
கிளப்பப் போரேறெண்டி—ஏ புள்ளே கண்ணாத்தா
மாட்டோட சேந்து வாடி

பொம்பளைய ஒறவு கூடாது
கெட்டுக்கீரை வித்தாலும்
போலீசுக்கார சினேகம் கூடாது
தில்லுமுல்லு என்னிடம் பண்ணாதே
வடபழஞ்சி சந்தானம் பயல்
தீர்த்த வழக்க மீறிப்பேசாதே
எடக்கு முடக்கு என்னிடம் செய்யாதே
எந்தன் குரு எஸ். பெருமாள்
பாட்டை வந்து
ஒச்சம் சொல்லாதே
தின்னாம் தினனாம்
தினனாம் தின்னாலே

வைகை வெள்ளத்துயர் கதைப்பாடல்

கூட்டம் ரொம்பக் கூடிருச்சு — நம்ம
கொறவன் கொறத்தி ஆட்டம் பார்க்க
நாடே தெரண்டிருச்சு தன்னானே — நம்ம
நல்லதொரு சேதி கேக்க
தேக்கு உருண்டுவர
தேங்காமரம் கூடவர
சோழ வந்தான் தேங்காமரம் ராசாக்கா —
தூரோட கிளம்பி வர அய்யாக்கா.

கொல்லிடம் ஒடஞ்சு வர
கொண்ட மாரி இடிஞ்சு வர
வாழைத் தோப்பு அழிஞ்சு வர — ராசாக்கா
பிணங்கள் வைகையிலே போனதென்ன அய்யாக்கா
அணைக்கட்டும் ஒடஞ்சு வர — நம்ம
அண்ணா நகர் அழிஞ்சு வர
அண்ணா நகர் குடிசைகள்ளாம் — ராசாக்கா—இப்ப
அடியோட போனதென்ன அய்யாக்கா

பொங்கிய தண்ணி வர
பெரிய பாலம் இடிஞ்சுவர
அணைக்கட்டுப் பெருகி வர — ராசாக்கா—நம்ம
வண்டியூரை அமுக்கிடுச்சே தண்ணிக்குள்ளே — அய்யாக்கா
இத்தனடி தண்ணியத்தான்
இதுவரையும் பார்த்ததில்லே
அநியாயம் நடக்கப் போயி — ராசாக்கா — மக்களெல்லாம்
அவதிப்பட்டோம் தண்ணிக்குள்ளே — அய்யாக்கா

அங்கங்கே பிணங்களெல்லாம்
செத்து நல்லா மெதந்துவர — நம்ம
அணைக்கட்டுத் தேக்கத்திலே — ராசாக்கா
பிணத்தை அடையாளத்தை பார்க்கலையே — அய்யாக் ா
சட்டரசத் தூக்கி விட்டார்
தங்கின பொணத்தைத் தள்ளி விட்டார்
இழுத்துப் போன பொணத்தையெல்லாம்—ராசாக்கா; மக்கள்
எப்படித்தான் பாக்குறதோ — அய்யாக்கா

இழுத்துப்போன பிணங்களெல்லாம்
எங்க கொண்டு அடஞ்சு போச்சு
திருப்பு வனத்துக் காடுகள்ள — ராசாக்கா: மக்கள்
தேடியல்லோ பிணத்தைப் பார்த்தோம் — அய்யாக்கா
நாலுகம்மா ஒடைய
ராமநாடு வெள்ளமாக
ராக்கெட்ல சோறு வர — ராசாக்கா — எம்.ஜி.ஆர்
நல்லுதவி செஞ்சு வந்தார் அய்யாக்கா

சோறுகளும் போட்டு வந்தார்
துணிமணியும் கொடுத்து வந்தார்
அரிசன மக்களுக்கு — ராசாக்கா
அரிசிகளும் போட்டுத் தந்தார் — அய்யாக்கா

வைகைநதி பெருகிவர
வண்டியூர் மந்தையெல்லாம் பெருகி வர
மாடு கண்டை அவுத்துக்கிட்டு — ராசாக்கா; மக்கள்
மாதாகோயில் போனோமில்ல — அய்யாக்கா
கத்தோலிக்கத்திருச் சபையில்
சபையோட பங்குச்சாமி
கட்டுச் சோறு கொடுத்து நல்லா ராசாக்கா
கட்டிடத்தில் தங்கச் சொன்னார் — அய்யாக்கா

சுடுகாடு இல்லையய்யா
சொந்தக் காணி இல்லையய்யா — இப்ப
இடுகாடு இல்லையய்யா — ராசாக்கா — பிணத்தை
எங்கே கொண்டு பொதைக்கிறது — ராசாக்கா

முயற்சி எடுக்க வேணும்
முடிவு பண்ணிப் பாக்கவேணும்
வண்டியூரு ஒன்னு சேந்து—ராசாக்கா—எம்.ஜி.ஆருக்கு
மனுக் கொடுத்துப் பேச வேணும் அய்யாக்கா

ஆயிரக்கணக்கான மக்களையுமே
கொண்டு கொடுத்தோமைய்யா
கலைக்டரைப் பாத்து நின்றோமைய்யா—ராசாக்கா
எம்.ஜி.ஆருக்குத் தந்தி கொடுத்தோமைய்யா
தாய்க்குலம் எடுத்துச் சொன்னோமைய்யா

ஏழைபாடும் பாடுகளை
எவரிடமே கூறுவது—நம்ம
ராச்சியம் வாற நாள—ராசாக்கா; மக்கள்
அறிவிக்கணும் வார்த்தைகளை—அய்யாக்கா

இங்கே

கூடியிருக்கும் சபையோர்களே
வந்திருக்கும் கூட்டணி நண்பர்களே—நான்
குத்தம் குறையோட படிச்சிருந்தால் ராசாக்கா
கூட்டமே மன்னிக்கணும் ராசாக்கா
தமிழ்நாடு கூட்டணி நண்பர்களே—ராசாக்கா.

ஸ்கைலாப் கதைப்பாடல்

(அய்யா)
சேதி அறிந்ததும் தேசமுழுவதும்— அந்தப்புரத்திலே
பீதி அடைந்ததைய்யா
மக்களெல்லாம் ஓடி ஒழிந்ததைய்யா—அந்தப்
புதன் கிழமை காலையிலே சென்று
புத்தியும் செல்லலைய்யா
மக்களும் வெளியேற வில்லையய்யா

(அய்யா)
நாளு நெருங்கவும்
நாடு முழுவதும்—அந்தப்புரத்திலே
கண்ணுக்கு உறக்கமில்லே
மக்களுக்கு நாதம் புரியவில்லே
அந்தக்காலம் விதிச்சது
ஸ்கைலாப் பறந்தது
கண்ணீர் வடிச்சதைய்யா
மக்களெல்லாம் கவலை அடைஞ்சதைய்யா

(அய்யா)
மாலை முரசு சேதிகளைக் கேட்டு
மருத நடுங்குச்சைய்யா
மக்களெல்லாம் ஓடி ஒழிஞ்சதைய்யா
இந்தப்பூமியில் விழுகக் கூடாது
என்றுமே சொல்லியே
பூசை நடந்ததைய்யா
(கோவிலெங்கும்) பூசை நடந்ததைய்யா

(அய்யா)
என்னென்ன இஞ்சினு
ராக்கெட்டு செய்துமே—அந்தப்புரத்திலே
எங்கும் பறந்ததைய்யா
மக்களெல்லாம் ஏங்கித் துடிச்சதைய்யா
நம்ம மீனாட்சி பட்டணம் விழுமுன்னமே
பேப்பரில் வந்ததைய்யா

உலக நாடு பேப்பரில் வந்ததைய்யா
மணிக்கணக்காப் பேப்பரைப்பாத்து
மருதை நடுங்குச்சைய்யா
மக்களெல்லாம் பள்ளிக்குச் செல்லலையே
அந்த மூனு நாளைக்கு
லீவு கேட்டுமே
வீட்டுக்குச் சென்றதைய்யா
(பள்ளிப் புள்ளைகள்)
வீட்டுக்குச் சென்றதைய்யா

(அய்யா)
ஆயிரக் கணக்கான
ராக்கெட்டு செஞ்சுமே
அனுப்பியே விட்டாகைய்யா
(மக்களெல்லாம்)
ஆனந்தம் கொண்டாகைய்யா
அந்த அரபிக் கடலிலே
தானாக விழுகவே
தந்திரம் செஞ்சாங்கைய்யா
(மக்களெல்லாம்)
ஆனந்தம் கொண்டாகைய்யா

பஞ்சு மில் பாட்டு

வாரும் சபையோரே
வயதில் பெரியவரே
கூடும் சபையோரே
குணத்தில் சிறந்தவரே

பாண்டிய மில்லுப்பாட்டு—நீங்க
பாங்குடனே கேட்டு
பையிலே கையப்போட்டு—நீங்க
பார்த்துக் குடுக்கனும் நோட்டு

ஓரிழையாம் பாப்பின் வச்சு
ஒய்யாரமாய் மிசினை யோட்டி
பாத்துக் கிட்டி இருக்கனும்
பஞ்சு நூலா நூக்கனும்

நூத்தி எடுக்கனும்
நுட்பமாய் பார்க்கனும்
ஓட்டையிலே மாட்டனும்
ஊசியிலே பூட்டனும்

லிங்கியிலே தான் கோத்து
நெடும் பம்பிலே சுத்தனும்
அந்து போற இழையை எல்லாம்
அழகாக முடியனும்—நாங்க

ஆரிய எடுக்கு முன்னே
ஆவிகளைப் போக்கனும்
இழைக்கு இழை சேராமலே
இருந்து கணக்குப் பாக்கனும்

எட்டு மணி நேரம் வரைக்கும்
இடுப்பு நோக நிக்கனும்
எட்டு மேஸ்திரி ஜானுக்கு—நாங்க
எணங்கியே நடக்கனும்...அவரு

இட்ட தொரு வேலைகளை
இன்பமுடன் பார்க்கனும்

சைடு மேஸ்திரி எசக்கிப் பிள்ளைக்கு
சரியாக நடக்கனும்...அவரச்

சந்திலே பொந்திலே கண்டவுடன்
சரணங்களும் செய்யனும்
அரி எடுக்கிற பாண்டிக்கு—நாங்க
அடங்கியே நடக்கனும்—அவரு

அறிவிக்கும் வேலைகளை
அன்புடனே பார்க்கனும்
சுத்திப் பாக்குற சுந்தரராசுக்குச்
சொல்லுப் பேச்சு கேட்கனும்

உடம்புக்கு சோம்பேறித்தனமில்லாம
சுறு சுறுப்பாய் பார்க்கனும்
அதிகாலையில் எந்திரிச்சு
அவசரமாய்ப் போகனும்—அங்கே

அசந்து மசந்து இருந்து விட்டா
ஆப்சன்ட்டும் ஆகனும்
வேலைக்குப் போகும் போது
வில்லை யத்தான் போடனும்

திரும்பி வீட்டுக்கு வரும்போது
வெறும் மடியா ஆகனும்
அதுக்கு நல்ல சம்பளம்
என்ன வென்று கேட்பீங்க...நான்

எல்லோருக்கும் தெரியும்படி
எடுத்துச் சொல்லி வாறேங்க
அனுதினமும் பார்ப்பவர்க்கு
நூத்தி அறுபத்தேழுங்க...அதில்

அரைக்காக் காசு மிச்ச மில்லே
அம்மாளத்தான் கேளுங்க
அரை வேலை டாப்பருக்கு
அதுலே பாதி சம்பளம்...அங்கே

அரைக்காக் காசு மிச்சமில்லே
அவுக பாடு நொம்பளம்
வாங்குகிற சம்பளங்க
வயித்துக்குத்தான் பத்தலே

போடுற சம்பளங்க
பொழப்புக்குத்தான் கட்டலை
தீபாவளிக்குப் போனஸ் வாங்கி
சேலை வேட்டி எடுக்கலை... அங்கே

சின்னப் பொண்ணக் கட்டி வந்து
சீரு ஒன்னும் செய்யலை
வருச போனஸ் கணக்கு வாங்கி
வளத்தவளிடம் காட்டலே

ரெண்டணா வட்டி கடன் காரன்
வாங்கி விட்டான் கேட்டிலே
பலசரக்கு கடை அண்ணாச்சிக்கு
பாக்கியிலே கொஞ்சம் போச்சுங்க

பச்சைப் பாலிலே தண்ணிய ஊத்துற
பாவிக்குக் கொஞ்சம் போச்சுங்க
கள்ளக்கணக் கெழுதுறவன்
கணக்கிலே கொஞ்சம் போச்சுங்க

பஞ்சாபீஸ் காசு வந்து
பஞ்சு போலப் பறக்குது... அய்யா
பறக்கப் பறக்கப் பாடுபட்டு
பாதி ஒடம்பாய் இருக்குது

அதி காலையிலே எந்திரிச்சா
அடுப்பிலே கோழி தூங்குது
அருமையாகப் பெத்தபுள்ளே
ஆப்பத்துக்கு ஏங்குது

காலையிலே எந்திரிச்சா
கஞ்சிக்குப் போட உப்பில்லே நாங்க
கடிச்சுக்கிற தொட்டுக்கிற
காய்கறிகளும் ஒண்ணுமில்லே

பாடுபட்டு தேய்பட்டு
என்னாங்க மிச்சம்
கடைசியிலே பாக்கப் போனா
நாங்க தான் மிச்சம்

வட பழஞ்சி சந்தானம் பாடும் பாட்டிலே
என்னாங்க ஒச்சம்... ஒங்க
பையிலே கையைப் போட்டுமே தான்
எடுங்களேன் சொச்சம்.

தினனம் தினனம்
தினனம் தின்னானே

சில வழக்குச் சொற்கள்

கவட்டைக் கல்	மாட்டுக் கொம்பு போல் உள்ள ஒரு குச்சியின் இரு முனைகளிலும் ரப்பரால் (கயிறு) கட்டப்பட்டு ஒரு சிறு கல் வைத்து எய்யும் ஒருவகைக் கருவி. வில் அன்புக் கருவியினைப் போன்று மிருகம், பறவை ஆகியவற்றை வேட்டையாடப் பயன்படும்.
அகசு மகசா	கவனமில்லாமல்
லேசாக	இலகுவாக
டிமெண்டு (ரிமெண்டு)	ரிமாண்டு (Remand)
ஏப்பிச்சு தப்பிச்சார்	ஏய்த்துத் தப்பித்தார்
புகழும் பெத்திட்ட	புகழும் பெற்றிட்ட
அலைஞ்சதனாலே	அலைந்ததனாலே
தருக்கன்னு	முள் காலில் 'தருக்' கெனக் குத்தியது
சொப்பனம்	கனவு
சண்டியர்	கேடித்தனம், ரவுடித்தனம் செய்வோர்
காவாலித்தனம்	சின்னத்தனம், முட்டாள்தனம்
சயந்தரம்	மாலை நேரம்
இம்சை	துன்பம்
அவுக	அவர்கள்
தடபுடலாக	அதிவிமரிசையாக
பந்துசனங்கள்	சுற்றத்தினர்
இப்போவோ பிறகோனு	இப்பொழுதோ பிறகோவென்று
இத்துப் போயி	இற்றுப்போய், நிலை இழந்து போய்
பைசலாச்சு	சரிக்கட்டலானது, முடிந்தது, தீர்ந்தது
சுத்துவட்டு காரவுக	சுற்றுவட்டாரக்காரர்கள்
சேதி	செய்தி
பெயிலா போயி	Fail ஆகி—தோல்வியாகி

சுருக்கா		அவசரமாக, சுருக்கமாக
பேமுழியா முழிக்கிறேனே		செய்வதறியாது விழிக்கிறேனே
தெம்பு		வீரம், துணிச்சல்
சொகுசாக		இன்பமாக, சந்தோசமாக வசதியாக
சுக்குநூறு		தெரித்துச் சிதறுதல்
சங்கதி		செய்தி, கருத்து
சஞ்சலம்		சங்கடம், துன்பம்
ஏகமா		எண்ணிறைவாக, விரிவாக
சலுப்பு		துக்கம், மனக்கசப்பு, எரிச்சல்
வரும்படி		வருமானம்
அடிக்காதடிலாவு		அலட்டாதடி, வெட்டித்தனம் செய்யாதே லாவு law (சட்டம்) சட்டம் பேசாதே
கலவாணி		கள்வன்
தனஞ்சுப் போடு		இணைத்துக் கட்டுதல்
புனஞ்சுசோடு		பிணைத்துக் கட்டுதல்
கிளப்பப் போறேன்		முடிக்கப் போகிறேன், இடத்தைக் காலி செய்யப் போகிறேன்
இடக்குமுடக்கு		நேருக்குமாறாக, கிண்டல், கேலி செய்தல்
ஒச்சம்		குற்றம்
சட்டரச தூக்கிவிட்டார்		(Shuttur) அணைக்கட்டின் வாயிற்கதவு திறந்துவிட்டார்
பீதி		குழப்ப உணர்வு
நாதம் புரியவில்லை		நிலை புரியவில்லை
பெயிலாப்போயி	—	தோல்வியுற்று
ஒசந்ததொரு	—	உயர்ந்ததொரு
செவசங்கை	—	சிவகங்கை
புட்டா டப்பி	—	முகப்பூச்சுப்பொடிப்புட்டி
பொய்த்தகங்கள்	—	புத்தகங்கள்
சாமான்கள்	—	பொருள்கள்
கத்தோமடி	—	கல்வி பயிலுதல்
பலிக்காது	—	நிறைவேறாது
ஏசுவாக	—	ஏசுவார்கள்; எசுதல்; பேசுதல்
எகத்தாளங்கள்	—	ஏளனங்கள்
இன்னொருக்கா	—	இன்னும் ஒரு முறை
பொட்டியரிசி	—	ஓலைப்பெட்டியில் அரிசியிட்டும்

போடுதல் பெண் வீட்டிற்குச் சென்று திருமணம் பேசும் ஒரு சடங்கு முறை

செங்கக் கால்வாய் — செங்கல் சூளை அமைக்கத் தோண்டப்பட்ட மண் குழி

மொங்கு — நுங்கு

சொனை — சுரணை; உணர்வு

அடுத்தாப்பில — அடுத்தாற்போல

ஏகாலி — வண்ணான்

துலமரத்தாவு — ஏற்றம் இறைக்கும் இடம்

சைக்கோள் — மிதி வண்டி (சைக்கிள்)

பார்த்தியலா — பார்த்தீர்களா

நல்ல டயம் — போதிய அவகாசம்

சூட்டுக்கேசு — தோலால் செய்யப்பட்ட உடைகள் வைக்கும் சிறு பெட்டி.

அள்ளுனானே — அள்ளி எடுத்தல்

திண்டாரங்கள் — பருமனுள்ள மலர் மாலைகள்

செயிச்சிட்டார் — வெற்றி பெற்றார்.

பிற்சேர்க்கை 2

சில குறிப்புகள்

மதுரை எஸ். பெருமாள்

இயற்பெயர்	: எஸ். பெருமாள் கோனார்
தந்தை பெயர்	: சோலை மலைக் கோனார்
பிறந்து வளர்ந்த இடம்	: மதுரை மஞ்சனக்காரத் தெரு
வயது	: 70
படிப்பு	: 4 வது வகுப்பு வரை படித்துள்ளார். எழுதப் படிக்கத் தெரியும்.
மனைவி பெயர்	: வேலம்மாள்
பிள்ளைகள்	: முத்துமாரி 6 வது வகுப்பு வரை படிப்பு. சில்வர் பட்டறையில் வேலை பார்க்கிறார் ருக்மணி என்ற ஒரு பெண் 9 வது வகுப்பு வரை படித்து வீட்டில் தாயாருடன் அப்பளம் தயாரிப்புச் செய்யும் தொழிலுக்குத் துணையாக உள்ளார்.
முகவரி	: 40, ஆறுமுகம் பிள்ளை காம்பவுண்டு மேலத் தோப்பு கீரைத் துறை, மதுரை—1

மதுரையிலிருந்து திருநெல்வேலி மேலப்பாளையத்தில் சம்பந்தம் செய்துள்ள எஸ். பெருமாள் கோனார் தம் மனைவி துணையோடு கிராமிய மெட்டுக்கள் பல அறிமுகப் படுத்துகிறார். கிராமங்களிலிருந்து பிழைக்கவந்த கிராமியக் கலைஞர்கள் வழியாகத் தெம்மாங்கு இசை அறிந்து பாடல் கட்டிக் கொடுக்கின்றார்.

தற்போது பரவை முனியம்மாள் என்பவருடன் பல இடங்களுக்குப் பின்பாட்டாளர் ஆகச் செல்கின்றார். போக்கு வரத்துச் செலவு நீங்க 50 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரை சம்பளமாகப் பெறுகிறார். மதுரை அருகே உள்ள பரவை முனியம்மாளுக்கு எழுதப் படிக்கத் தெரியும், இருப்பினும் பல சந்தங்களில் கும்மிப் பாடல்கள் எழுதிக் கொடுப்பவராக இவர் துணை செய்கிறார்.

இருபது வருடங்களுக்கு முன்னர் இவரைப் போலவே பாடல் எழுதிக் கொடுக்கும் தொழில் கொண்ட மதுரை டி.வி. பச்சையப்பன் அவர்களுடன் நட்புறவு கொண்டிருந்தார்.

காந்தி பாட்டு, ஒண்டிப் புலி சர்பத் கம்பெனி விளம்பரப் பாட்டு, புகையிலைக் கம்பெனி விளம்பரப்பாட்டு ஆகிய பாடல் வகைகளும் தொழில் முறைக் கலைஞர்களுக்குஎழுதிக் கொடுத்துள்ளார்.

நாற்பது வருடங்களுக்கு முன் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களில் ராஜபார்ட் வேடம் கட்டி நடித்துள்ள முத்தையாநாடார் அவர்களுக்கு நாடகத்திற்கான பாடல் களும் இவர் எழுதிக் கொடுத்துள்ளார். இவருக்கு ஓடாத்தூர் திருப்புவனம், திருப்பாச்சேத்தி, சிவகங்கை, காளத்தூர், போன்ற பல இடங்களில் சீடர்களும் உள்ளனர். இவரது சீடர்கள் அனைவரும் கிராமியத் தொழிற் கலைஞர்களாவர்.

●

மதுரை டி.வி. பச்சையப்பன்

மதுரையிலிருந்து எஸ். பெருமாள் அவர்கள் பணியைப் போலவே இவரும் செய்தவர். மதுரை சந்தைப்பேட்டை யருகே குடியிருந்த இவர் தற்போது சென்னை நகர வாசி யாக உள்ளார்.

எஸ். பெருமாளின் சம காலத்தவரான இவரும் மதுரை சங்கரதாஸ் சுவாமிகள் நாடக நடிகர்களுக்கு நாடகப் பாடல் கள் சில காட்சிகளுக்கேற்ப எழுதிக் கொடுத்துள்ளார். தனுஷ் கோடிப் புயல் பாடலை எழுதிப் பிரபல்யமாகியுள்ள இவர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்.

●

மணிக்குறவன்

பாலிய திருமணம் குல வழக்கப்படிச் செய்து கொண்ட மணிக் குறவன் மனைவி பெயர் அழகம்மாள். அழகம்மாளின் 18 வது வயதில் 23 வயதான மணிக்குறவன் வெட்டப்பட்டு இறந்தார். எனது மருமகனை வெட்டியவர்களை யார் பழி தீர்க்க முன் வருகிறாரோ அவர் எனது மகளை மறுமணம் செய்து கொள்ளலாம் என்று மணிக்குறவன் மாமியார் சொன்னதாம். பருத்திவீரான் என்ற பெயருடைய ஒரு சேர்வார் இனத்து இளைஞர் ஒருவர் முன் வந்து பழி தீர்த் தார். பின்னர் மணிக்குறவன் மனைவியை மறுமணம் செய் தார் அவருக்கு பவுர்சிங், பி.டி. ராஜன், தமிழரசி, செல்வா, சுந்தரவள்ளி என்ற பெயர்களுடைய பிள்ளைகள் உள்ளனர்.

மணிக்குறவனது பூர்வீகத்தினர் தூத்துக்குடி அருகே உள்ள சேதிங்க நல்லூர் கிராமத்திலிருந்து மதுரைக்குப் பிழைக்க வந்துள்ளனர். மணிக்குறவனது தாயார் பெயர் பூரணக் குறத்தி. தந்தைபெயர் சீமைச்சாமி.

●

ஆசிரியரைப்பற்றி

டாக்டர் கே.ஏ.குணசேகரன் தஞ்சை பல்கலைக் கழகத்தின் நாடகத்துறைப் பேராசிரியர். நாட்டுப்புற இசை வடிவங்களை ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். பி.வி.கரந்த், பான்சிலால், பாதல் சர்க்கார், சங்கரப்பிள்ளை, ராமானுஜம் போன்ற புகழ்பெற்ற நாடகக்கலை வல்லுநர்களிடம் பயிற்சி பெற்றவர். ஓம் பெரியசாமியிடம் காவடியும் அழகர்சாமி வாத்தியாரிடம் கரகமும் முறைப்படி பயின்றவர்,

மாணவப் பருவத்திலேயே நாட்டுப்புறப் பாடல்களின் மேன்மையை உணர்ந்து அதற்காக ஒரு குழு அமைத்துப் பாடி வந்தார், மதுரை, இராமநாதபுர மக்களுக்கு இவர் பெயரும் பாடல்களும் இப்போது பிரியத்துக்குரியதாய் ஆகிவிட்டன. தமிழகம் முழுவதும் நாட்டுப்புற இசையின் உன்னதத்தை அடையாளம் காட்டுகிற பணியை மேற்கொண்டிருக்கிறார்.

தற்போது அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தமிழ் மாநிலக்குழு, 'தன்னானே பாடல்கள்' என்று இவரைக் கொண்டு ஒரு கேசட்டை வெளியிட்டிருக்கிறது. தமிழுக்கு இது புதிய முயற்சி. குணசேகரன் இசையமைத்த பத்துப் பாடல்கள் இதில் ஒலிக்கின்றன. சின்னப் பொண்ணு நான்கு பாடல்களைப் பற்றிப் பாடியிருக்கிறார். மற்றவற்றை குணசேகரனும் கங்கை பாலனும் பாடியிருக்கிறார்கள். கிராமத்தின் பெரிய மனசும், கம்பீரமும் ஒவ்வொருவரின் குரலிலும் இழைந்து வருகின்றன.

கிராமிய இசைக்கருவிகளை மட்டுமே பயன்படுத்தி அதன் முழுமை சிதைந்துவிடாமல் பாடல்களை வெளிப்படுத்த வெகுவாகப் பணியாற்றியிருக்கிறார்கள். அதற்கு காந்தி அண்ணாவியின் நாயனமும் சுப்பையாவின் தவுலும் பெரும் பங்கு ஆற்றியுள்ளன. இந்தப் பாடல்கள் நம்மைச்சிரிக்கவைக்கின்றன. சிந்தனையைக் கிளறுகின்றன. சோகப்படுத்துகின்றன. தோழமை கொள்கின்றன. அநீதி கண்டு ரௌத்திரம் கொள்ளச் சொல்லுகின்றன.

கிராமத்துக் காதல் என்று சொல்லி, சேலையை விலக்கிக் காட்டுகிற தமிழ்ச் சினிமாத்தனமாய் இல்லாமல்— வாழ்வதற்கே உத்தரவாதமில்லாத அந்த வாழ்க்கையின் அத்தனைத் திரைகளையும் விலக்கிக் காட்டுகின்றன.

மக்களிடம் இருந்து கற்ற கலை வடிவங்களில் புரட்சிகரமான உள்ளடக்கத்தைக்கொண்டுமறுபடியும் அவற்றைமக்களிடமே சேர்க்கிற இந்தப் பணிதான் உண்மையில் நாட்டுப் புறக் கலை வடிவங்களைக் காப்பாற்றும். அதற்காகவே இந்தக் கேசட்டை வெளியிட்டிருக்கும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தினரை-குறிப்பாக அதன் தமிழ் மாநிலச் செயலாளர் சி. மகேந்திரனை தமிழர்கள் கௌரவிக்க வேண்டும்.

தலைப்புகள் தேடிக்களைத்துத் தம் வாசலில் வந்து நிற்கும் எழுத்தாளர்களுக்கு நாட்டுப்புறப் பாடல்கள் அஞ்சும் பத்துமாய் கடன் கொடுத்திருக்கின்றன. எல்லாம் இழந்த கோவலன்களாக திகைத்து நிற்கும் சினிமாக் கவிஞர்களுக்குச் சிலம்பைப் போல் பல்லவிகளைக் கழற்றிக் கொடுத்திருக்கின்றன. சினிமா இசையமைப்பாளர்களுக்குத் தம் வீட்டையும் வயலையும் கூட விட்டுக் கொடுத்திருக்கின்றன.

ஆனால் அந்த நாட்டுப்புறப் பாடல்களின் இதயத்தைத் தொட்டுப் பார்த்தவர்கள் இவர்களில் யார் இருக்கிறார்கள்? தெரியாது!

வயல் வரப்புகளில், மலைச் சரிவுகளில், கடல் அலைகளில், நதிக் கரைகளில் இன்னும் வியர்வையின் வாசம் எங்கெல்லாம் கமழ்கிறதோ அங்கெல்லாம முகிழ்த்த இந்தப் பாடல்கள். இயந்தரங்களின் இரைச்சலில் மெல்ல மெல்ல மௌனச் சேற்றில் புதையத் தொடங்கிவிட்டன.

இந்தப்பண்பாட்டுப்புதையலைக் காப்பாற்றுகிற முயற்சியை ஒரு சில மக்கள் கலைஞர்கள் முன்னெடுத்துச் செய்து வருகிறார்கள். அதில் குணசேகரனுக்குள்ள இடம் எப்போதும் முதல் வரிசையிலேயே இருக்கும்.

பழநிபாரதி

தாய் 21—8—88